# சமண பௌத்த கிருஸ்தவ இஸ்லாமிய இலக்கியங்கள்

# சமண
# பௌத்த
# கிறிஸ்தவ
# இஸ்லாமிய
# இலக்கியங்கள்

தொகுப்பாசிரியர் :
மணவை முஸ்தபா, எம்.ஏ.

விலை ரூ. 20/-

மீரா பப்ளிகேஷன்
103, அண்ணாநகர்
சென்னை-600040.

# Jainist
# Bhuddhist
# Christianity
# And Islamic
# Literatures

*Compilar :*
MANAVAI MUSTAFA, M.A.

PRICE Rs. 20/-

MEERAA PUBLICATION
AE 103, ANNANAGAR
CHENNAI-600 040.

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the book | : Samana<br>Bhuddha<br>Christhava<br>Islamia<br>Ilakkiangal |
| Compilar | : Manavai Mustafa |
| Language | : Tamil |
| First Edition | : August 1987 |
| Second Edition | : April 1997 |
| Copyright holder | : Meeraa Publication |
| Size of the book | : Crown octovo |
| Printing points | : 10 points |
| No. of Pages | : 88+8 =96 |
| Price | : Rs. 20/- |
| No. of copies printed | : 1,000 |
| Printer | : Meeraa Press<br>AE 103, Anna Nagar,<br>Madras - 600 040. |
| Binding | : Paper back |
| Publishing place | : Manavai Publication<br>AE 103, Annanagar,<br>Madras-600 040. |
| Subject | : Literary Criticism |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | என்னுரை<br>*மணவை முஸ்தபா* | V |
| 2 | முகவுரை<br>*டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்* | 4 |
| 3. | அணிந்துரை<br>*டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ* | 6 |
| 4. | வாழ்த்துரை<br>*ஸ்ரீபால்* | 11 |
| 5 | சிறப்புரை<br>*டாக்டர் ந. சஞ்சீவி* | 15 |
| 6. | சமண இலக்கியம்<br>*கவிஞர் மு. மேத்தா* | 17 |
| 7. | பௌத்த இலக்கியம்<br>*பேரா. வள்ளுவன் கிளாரன்ஸ்* | 36 |
| 8. | கிறிஸ்தவ இலக்கியம்<br>*டாக்டர் க.ப. அறவாணன்* | 48 |
| 9. | இஸ்லாமிய இலக்கியம்<br>*டாகடர் சிலம்பொலி சு. செல்லப்பனார்* | 60 |

# என்னுரை

தமிழனுக்கென ஓர் தனிப் பண்பு உண்டு, அதுதான் யார்?'என்றுபாராது''என்ன என்பதில்'?மட்டும்கருத்தூன்றும் தனிப்பெரும் பண்பு. 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற சிந்தனை வளமிக்கவர்கள் தமிழர்கள்.

தமிழகத்திற்கு வட புலத்திலிருந்தும் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு சமயங்கள் வந்தன. வைதீக சமயம், சமணம், பௌத்தம் முதலான சமயங்கள் வட நாட்டிலிருந்தும் கிறிஸ்தவம், இஸ்லாம் முதலான சமயங்கள் வெளிநாட்டிலிருந்தும் வந்தன. இச்சமய நெறிகளை யார் கொண்டு வந்தார்கள் என்பதைப் பாராது, அச்சமயங்கள என்ன கூறுகின்றன என்பதில் கருத்தைச் செலுத்தினர். விரும்பியோர் அதன் நெறியைப் பின்பற்றினர் என்பது வரலாறு. இச்சமயங்கள் அனைத்தும் தமிழின் வாயிலாகவே தம் கருத்துக்களை வெளிப்படுத்தின. இதன்மூலம் சமயங்களும் வளர்ந்தன தமிழும் வளர்ந்தது எனவேதான் தமிழைப் புகழவந்த பாரதி ''சமயந்தொறும் நின்ற தையள்'' எனப் பாராட்டினார்.

பிற சமயங்கள் தமிழகம் வந்ததால் தமிழில் பலதரப்பட்ட சமய தத்துவக் கருத்துக்கள் அழுத்தமாகப் படியத் தொடங்கி, தமிழ் மக்களின் சிந்தனையிலும் செயலிலும் புதிய புதிய மாற்றங்களுக்கு வழிகோலின. இத்தகைய மாற்றங்கள் தமிழனின் வாழ்வில் மட்டுமல்லாது அவனது மொழியாகிய தமிழிலும் எதிரொலித்தன எனபது இலக்கிய வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

காதலையும் வீரத்தையும் கொடையையும் பெரிதும் போற்றி வந்த சங்கத் தமிழனின் வாழ்வியல் உணர்வில் அறவழிப்பட்ட நீதிகளைப் பற்றிச் சிந்தித்துப் பாடல்கள் இயற்றி மாற்றத்தைத் தோற்றுவித்த பெருமை வட புலத்திலிருந்து தென்புலம் பெயர்ந்து வந்த சமண, பௌத்த சமயங்களையே பெரிதும் சாரும். நீதி புகட்டும் அற நூல்களான திருக்குறள், பழமொழி நானூறு, நாலடியார், நான்மணிக் கடிகை, திரிகடுகம், ஆசார கோவை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, முதுமொழிக் காஞ்சி, சிறுபஞ்ச மூலம்,ஏலாதி என அறவழிப்பட்ட நீதி நூல்களாக எழுதிக் குவித்துத் தமிழைச் செழுமைப்படுத்தினர் சமண, பௌத்த சமயத் தமிழ்ப் புலவர்கள்.

இலக்கியச் சுவையின்றிக் கூறும் நீதிகளைவிட வாழ்ந்து சென்ற நண்பர்களின வாழ்வியலைக் காப்பியப் போக்கில் கூறி அதன் வழியில் நீதிகளைப் புகட்டினால் மக்களின் உள்ளத்தில் உரமாகப் பதியவைக்க முடியும் என்ற உணர்வின் அடிப்படையில் காப்பியங்களைப் படைக்க முனைந்தனர். இதன்மூலம் தங்கள் சமய உண்மைகளை, தத்துவச் சிறப்புகளை, கொள்கை, கோட்பாடுகளை எளிதாக மக்களுக்கு உணர்த்த முடிந்தது. இதற்காக தமிழில் நீதியுணர்வு பொங்கும் காப்பியப் படைப்புகளாக சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான பல காப்பியப் படைப்புகளை சமண, பௌத்த சமயப் புலவர் பெருமக்கள் தமிழில் உருவாக்கினர்.

அவ்வாறே தமிழகம் வந்த இஸ்லாம் தன் மார்க்கத் தத்துவங்களைத் தமிழில் சொல்ல விழைந்ததன் விளைவாக ஒழுக்கவியல் அடிப்படையிலான ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இலக்கியங்கள் எழுதிக் குவிக்கப்பட்டன. 28 இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள் படைக்கப்பட்டன. புலவர் நாயகம் சேகனாப் புலவர் ஒருவர் மட்டுமே நான்கு காப்பியங்களை உருவாக்கித் தந்துள்ளார்.

'சூஃபி' தத்துவ அடிப்படையில் நூற்றுக்கணக்கான மெய்ஞ்ஞான நூல்கள் தமிழில் எழுந்தன. தக்கலை மெய்ஞ் ஞானி பீர் முகம்மது அப்பா மட்டும் பத்தாயிரம் மெய்ஞ் ஞானத் தமிழ்ப் பாடல்களை எழுதிக் குவித்து மெய்ஞ் ஞானச் சிந்தனையை வளப்படுத்தியுள்ளார் தொல்காப் பியம் தொட்டு வழக்கில் இருந்து வந்த எல்லா வடிவங் களிலும் இலக்கியம் படைத்த முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள். தமிழில் அறவே இல்லாத புதுவித இலக்கிய வடிவங்களி லும் தமிழ் இலக்கியம் படைத்து வளமூட்டினர். பாரசீக மொழி இலக்கிய வடிவமான நாமா, அரபி மொழி இலக் கிய வடிவங்களான கிஸ்ஸா, மஸ்அலா முனாஜாத்து ஆகிய வற்றை தமிழ் இலக்கிய வடிவங்களாக, தமிழ் இலக்கண விதிமுறைகளுக்குட்பட்டு உருவாக்கிப் பெருமை சேர்த் தனர். தமிழுக்கெனறே புத்தம் புதிய இலக்கிய வடிவங் களாக படைப்போர், நொண்டி நாடகம், திருமண வாழ்த்து, அரபுத் தமிழ் ஆகிய புத்தியல் துறைகளில் இலக் கியம் படைத்துத் தமிழைச் செழுமைப்படுத்தினர்.

காலத்தால் பிந்திவந்த கிறிஸ்தவ சமயம் சார்ந்த வெளிநாட்டுத் தமிழறிஞர்கள், மேனாட்டுப் போக்கிலான தமிழ் வளர்ச்சிக்கு அடிகோலினர். அதுவரை வடமொழி முதலான வேற்று மொழிகளிலிருந்து இலக்கியங்கள் படைக்கப்பட்டதற்கு மாறாக, திருவாசகம் போன்ற இலக்கியங்கள் ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழி களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அதேபோன்று மொழி யியல் துறை, நவீனப் போக்கில் கால்டுவெல் போன்றவர் களால் ஆராயப்பட்டது. தமிழ் மொழியின் தனிச் சிறப்பு கள் ஒப்பீட்டாய்வு அடிப்படையில் எண்பிக்கப்பட்டன. வீரமாமுனிவரால் சதுரகராதி உருவானதின் காரணமாக 'அகராதிக் கலை' காலத்திற்கேற்ற வடிவில் உருப்பெறத் தொடங்கின. எழுத்துச் சீர்திருத்த உணர்வு செயல் வடிவு பெற்று, எழுத்து மாற்றத்திற்கு வழி வகுத்தன.

இந்து சமய தமிழ் இலக்கியங்களின் பெருக்கமும் வளமும் நம் எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே. ஆனால், சிறுபான்மை சமயங்களான சமணம், பௌத்தம். கிறிஸ்துவம் இஸ்லாம் ஆகிய சமயங்கள் தமிழுக்கு வளமான பணி ஆற்றியிருந்தும் அவை மக்களின் கவனததிலிருந்து ஓரளவு மறைந்தேயுள்ளன. எனவே, அவற்றை மீணடும் மக்களின் கவனத்துக்குக் கொண்டு வரவேணடும் என்ற விருப்பத்தின் விளைவே சமண பௌத்த, கிறித்தவ, இஸ்லாமியக் கருத்தரங்கு முயறசியும் அதன் பயனாக உருவான இத் தொகுப்பு நூலும.

பலரது கவனத்தை ஈர்த்துச் சிந்திக்கத் தூண்டிய இக் கருத்தரங்கின் சிறப்பம்சம், இந்து சமயத்தைச் சார்ந்த டாக்டர் ச வே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருததரங்கில், இஸ்லாமியரான கவிஞர் (முஹம்மது) மு. மேததா அவர்கள் 'சமண இலக்கியம்' பற்றியும் கிறிஸ்தவரான பேராசிரியர் திரு வள்ளுவன் கிளாரன்ஸ் அவர்கள் 'பௌத்த இலக்கியம்' பற்றியும் டாக்டர் சிலமபொலி சு. செல்லப்பனார் அவர்கள் 'இஸ்லாமிய இலக்கியம்' பற்றியும் டாகடர் க.ப. அறவாணன் அவர்கள் 'கிறிஸ்தவ இலக்கியம்' பற்றியும் ஆய்வுரை நிகழ்த்தியதாகும்.

ஒரு சமயததைச் சார்ந்தவர் மற்ற சமய இலக்கியங்களை விரும்பிப் படித்து, மனந்திறந்து பாராட்டும் நிலை உருவாவதன் மூலமே உண்மையான ஒருமைப்பாட்டை மக்கள் உள்ளங்களில் நிலைபெறச் செய்ய முடியும் என்ற கருததை செயலபடுததுவதே இம்முயற்சி. இந்திய ஒருமைப்பாட்டையும் உலக ஒருமைப்பாட்டையும் உருவாக்கும் வகையில தொடர்ந்து இலக்கியப் பயணத்தை மேற்கொணடுவரும் என முயறசிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக இக்கருத்தரங்கையும் அதன் விளைவாக உருவாகி தங்கள் கரங்களில் தவழும் இத்தொகுப்பு நூலையும் கருதுகிறேன்.

ஒவ்வொரு சமய அறிஞரும் மாற்றுமத இலக்கியத்திற்கு வக்காலத்து வாங்கி ஆய்வுரை வழங்கியது கருத்தரங்குப்

பார்வையாளர்களிடையே ஒருமையுணர்வை உள்ளக் கிளர்ச்சியாக வெளிப்படுத்தியது போன்றே இந்நூல் வாசகர்களிடையேயும் ஒருமைப்பாட்டுணர்வை உருவாக்கும் எனப்பெரிதும் நம்புகிறேன்.

இந்நூலுள் இடம்பெற்றுள்ள ஆய்வுரைகளை வழங்கியவர்கட்கும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய அருமை நண்பர் தமிழ்நாடு காவல்துறை ஐ. ஜி. தமிழ்த்திரு ஸ்ரீபால் அவர்கட்கும் அணிந்துரை வழங்கிய கிறிஸ்தவ இலக்கிய கழகப் பொது இயக்குநர் அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்கட்கும நன்றி செலுத்தக் கடமைப்பட்டுளேன்.

என் முயற்சிகளுக்கு பல்லாற்றானும் ஆதரவு காட்டி வரும் தமிழுலகம் இதனையும் ஆதரிக்கும் எனப் பெரிதும் நம்புகிறேன்.

அன்பன்

**மணவை முஸ்தபா**

தொகுப்பாசிரியர்

# முகவுரை

மனிதன் நிலையாக வாழ்வதற்கு, சமயங்கள் முயன்றன. மனிதனுடைய வாழ்க்கையை மூவகையாகக் கூற லாம் அவை உடலால் வாழும் வாழ்க்கை, உள்ளத்தால் வாழும் வாழ்க்கை உயிரால் வாழும் வாழ்க்கை எனலாம். மூன்றும் இணைந்த வாழ்க்கையை வளர்ப்பதற்கு, எல்லாச் சமயங்களும், தங்களால் இயன்ற பங்கினை செய்தன செய்து வருகின்றன, செய்யப்போகின்றன இதை நாம் ஒரு இயக்கம் என்று கூறுகிறோம். தமிழகத்தில் பக்தி இயக்கம் 4ம் நூற்றாண்டில் தொடங்கியது மலையாள நாட்டில் நாராயண குரு எனபவர் ஒருவா வாழ்ந்தார். அவர் தமிழ மொழியில் உள்ள தேவாப.ர திருவாசகங்களை எல்லாப மலையாள மொழியில் எழுதி வைத்திருக்கிறார். இராமலிங்க சுவாமிகள், தாயுமானவர் பாடல்கள் கன்னட நாட்டில் கன்னட எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. தமிழ் மொழி இலக்கியங்கள் பல அவ்வாறு எழுதப்பட்டுள்ளன. இதே நிலையை தெலுங்கு மொழியிலும் நாம் பார்க்கிறோம்.

சில ஆண்டுகட்கு முன்பு போலந்து நாட்டிற்குச் சென்ற போது, அங்கே திருமுருகாற்றுப்படை, திருப்பாவை, திருவெம்பாவை இவற்றையெல்லாம் போலிஷ் மொழியில் மொழிபெயர்த்து, வெளியிட்டு இருக்கின்றார்கள். மொரீஷியஸிற்குச் சென்றபோது, அங்கே சைவக் கோயில்கள் பலவற்றை நிறுவி தேவாரம் திருவாசகம், இவைகளை எல்லாம் படித்துவருகின்றார்கள். இதைக் கூறுவதற்குக் காரணம், பக்தி இயக்கம் என்ற ஒன்று எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் அமைந்து வருகின்ற ஒன்று இங்கே நம்முடைய தமிழ் மொழிக்கு எல்லா சமயங்களும், தங்களால் இயன்ற நிலையில் மொழி இலக்கியம், சமுதாயம், இந்த மூன்று நிலைகளின் வளர்ச்சிக்கு துணைபுரிந்து கொண்டு வரு

கின்றன. முன்பும் வந்தன. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இங்கே வருகின்றவர்கள் இந்த நாட்டினுடைய மொழியினுடைய உதவி இல்லாமல் அந்த சமயத்தை அவர்கள் பரப்ப முடியாது. சங்க காலததில், இந்த சமயங்களின் செல்வாக்கு மிகுதியாக இல்லை பெரும்பாலும் சங்ககால இலக்கியங்கள் உடல் உள்ளம் பற்றிய வாழ்க்கையைத் தான் மிகுதியாகச் சிந்தித்தன. பக்தி இலக்கிய காலம,சமய இலக்கிய காலம், உயிர் வாழ்க்கைபற்றி மிகுதியாக சிந்தித்தன

சமண நூல்களில் பல இலக்கண நூல்களாக அமைகின்றன. நன்னூல் அனைவரும அறிந்த இலக்கண நூல். ஆனால் அதேபோன்று பௌத்த இலக்கண நூல்தான் முதலில் ஐவகை இலக்கணத்தைக் குறிப்பிட்டது. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள என்கின்ற மூவகை இலக்கணம் அமைந்தாலும் ஐவகை இலக்கணம்அதில் கூறப்பட்டிருந்தாலும, ஐவகை இலக்கணம் என்ற பெரும் பிரிவை அல்லது பகுப்பைத் தோற்றுவித்தது. பௌத்த சமய வீர சோழியம் என்ற இலக்கண நூல்.அதேபோன்று பௌத்த இலக்கியத்தில் மணிமேகலை காப்பியத்தை நாம் அறிவோம். சமணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் ஏற்பட்ட சில போராட்டங்கள் காரணமாக, குண்டலகேசி, நீலகேசி தோன்றிய நிலையை நாம் அறிவோம். ஆனால், இந்தச் சமயங்கள் போராட்டம் நடத்தியபோது தமிழுக்குப் பெரும் வளர்ச்சியாக அமைந்தன. அதனால் சமயங்கள் வாயிலாக. தமிழ மொழிக்கு மிகுதியான நூல்கள் கிடைத்தன. தமிழுக்கு நாம் சங்கங்கள் வைத்திருந்தோமே அதேபோன்று வச்சணந்தி என்ற சமணர் 'த்ரமிள' சங்கத்தை மதுரையிலே தோற்றுவித்தார். அதோடு மட்டுமல்லாமல், யாப்பிலக்கணம், யாப்பிலணக்கக் காரிகை போன்ற நூல்களும் தோன்றின. வச்சனந்தி மாலை, அவிநயம், இந்திர காளியம், அமுத சாகரம் போன்றவைகள் சமணர்களால் படைக்கப்பட்ட இலக்கண நூல்கள். ஆனால் அதேநேரத்தில், அவர்கள் சிந்தாமணி போன்ற மிகச் சிறந்த இலக்கியங்களையும் படைத்துத் தந்தார்கள்.

வெளிநாட்டவர்கள் இங்கு வந்தனர், வீரமாமுனிவருடைய இலக்கியத்தை நினைக்கும்போது, அவர்களால் நமக்கு ஏற்பட்ட நன்மை இலக்கணத்தைப் பார்த்த கோணம், அது புதுமையாக இருந்தது அதாவது மொழியியல் அடிப்படையில் இலக்கணத்தை அவர்கள் பார்த்தார்கள். நாம் வினையெச்சம் என்று சொன்னாலும், அதற்கு முழு வார்த்தைகளைச் சொல்லி வந்தோம். சய, செயற்குஎன்று அவர்கள் சுருக்கமாக அதற்கு செய். இ கு இவ்வாறாக அமைத்தனர். இது அறிவியல் அடிப்படையில் இலக்கணத்தைப் பார்த்த கோணம்

ஒரு மொழியானது, காலந்தோறும் எழுத்து நிலையில் மாறுதலடைவது இயல்பு. இலக்கண, இலக்கிய நிலையிலும் மாற்றமடைந்து வருவது இயல்பு. இவைகளை எல்லாம் தொன்னூல் விளக்கம் பேசுகின்றது. அதற்குப் பிறகு அவருடைய சதுரகராதி. மொழி என்ற நிலையில், எல்லாச் சமயங்களுமே மொழிக்கு உதவின. அதோடு மொழி என்று வரும்போது எழுத்துச் சீர்திருத்தம், இலக்கண நூல்கள், இவைகள் எல்லாம் இந்தச் சமயங்கள் வாயிலாக, நமக்குக் கிடைத்தன. இலக்கிய வளர்ச்சி என்று பார்க்கும்போதும் கிறிஸ்தவ இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின. கிறிஸ்தவக் கம்பன் என்று கூறப்படுகின்ற கிருஷ்ணப் பிள்ளையினுடைய இரட்சணிய யாத்ரிகம், இரட்சணிய சரிதம் போன்றவை எல்லாம், தங்களுடைய கொள்கைகளை பண்பாட்டின் அடிப்படையில் தந்தது. அதே நேரத்தில் ஏறத்தாழ, 14-ம் நூற்றாண்டுக்கு மேல், இஸ்லாமிய இலக்கியங்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் புதிய இலக்கிய வடிவங்களையும் தோற்றுவித்து வளமூட்டின.

வீரமாமுனிவர் படைத்த சதுரகராதி, அதற்குப் பின்பு ராபாட் வின்ஸ்லோ ஆகியவர்கள் அகராதிக் கலையை வளர்த்தனர். இந்த மிகுதியான தொண்டில் கால்டுவெல், போப் போன்றவர்களை எல்லாம், நாம் நினைக்க வேண்டும்

உலகத்திற்குத் தமிழையும் தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் மிகுதியாக உணர்த்தியவர்கள் இவர்கள் கால்டுவெல் இல்லையென்றால் மிகத் தொன்மையானது. பழமையானது தமிழ்மொழி என்ற உணர்வு உலகத்திற்கு ஏற்பட்டிருக்க முடியாது அதோடு திருவாசகத்தை முழு நிலையில் உணர்த்தியவர் ஜி. யூ போப் அவர்கள். இது போன்று பல நிலைகளில், தொடக்கத்தில் சமணர்கள் பதி ணெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஏலாதி, சிறுபஞ்சமூலம், நான்மணிக கடிகையைத் தோற்றுவித்து. அதனுடைய வளர்ச்சி நிலையாக, பெருங்கதை, சிந்தாமணி இவைகள் அமைந்தன அதோடு ஏறத்தாழ 300, 400 ஆண்டுகள் இஸ்லாமிய இலக்கியங்கள் தமிழகத்தில் மிகுதியாக இயற் றப்பட்டிருக்கின்றன.அந்த நூல்கள் அனைத்தும் வெளிவர வேண்டும் வெளி வந்தால் இநத நான்கு சமயத்தவரும், தமிழ் மொழிக்தும தமிழ் இலக்கியங்களுக்கும் தமிழ்ச் ச முதாயத்திறகும், எந்த நிலையில் வளர்ச்சிக்குத் துணை புரிந்தார்கள் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியும் ஒவ் வொரு சமயத்திற்கும் சமய அடிப்படைக் கொள்கைகளை நமக்குத் தெரிவிப்பதற்காக வேண்டித்தான் இலக்கியங்கள் எழுதப்படுகின்றன என்பது நாமறிந்ததே அந்த நிலையில் அந்த இலக்கியங்கள் சமயம் சார்ந்தவையாக இருப்பினும் அவை தமிழ் இலக்கியங்கள். அதில் எந்தவித ஐயமுமில்லை அவை தமிழ்ச் சுவையுடையவை; பேரினபம் அளிப்பவை; இடையிடையே சமய எணணங்களும் தரப்படுகிறன. சமய எண்ணங்கள் நம்முடைய வாழ்க்கையை செம்மைப் படுத்தி, சிறப்புப் படுத்த அவைகள் துணைபுரிகின்றன.

சமய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் கட்டியங் கூறும் இவ்வரிய இலக்கிய முயற்சியில் ஈடுபட்ட தொகுப் பாசிரியர் கலைமாமணி திரு. மணவை முஸ்தபா அவர் கட்கு என் பாராட்டுக்கள்!

**டாக்டர் ச.வே. சுப்பிரமணியம்**
முன்னாள் இயக்குநர்
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

# அணிந்துரை

பல்வேறு சமயங்களின் கருத்துச் செல்வங்களை மட்டு மல்லாது சமய அடிப்படையில் தமிழ் வளம்பெற்ற வர லாற்றையும் உரியவர்களைக் கொண்டு ஆய்ந்து தெளிய வழிவகுத்த கலைமாமணி மணவை முஸ்தபா அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் இத்தகைய ஆக்க முயற்சிகள் மொழி வழிசமய ஒருமைப்பாட்டையும் தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதோடு அழுத்தமாக நிலை பெறவும் வழிகோலும் என்பது திண்ணம்.

பல சமய இலக்கியங்களில் காணப்பெறும் சிறப்புக் களை அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பினைப் பெற இத் தொகுப்பு அரிய வாய்ப்பாக அமைகிறது. இக்கருத்தரங் கில் கலந்து கொண்டவன் என்ற முறையில் ஓரிரு கருத்துக் களை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய சமய இலக்கியங்களை உலகப் பெரு மொழிகளில் படைத்து வழங்கும் பெரும் பொறுப்பு நமக்கு இருப்பதை உணர்ந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம. இத் தகைய அரும்பணியை திரு மணவை முஸ்தபா போன்ற வர்கள் திறம்படச்செய்து வருவதை நாம்நன்குஅறிவோம்.

டாக்டர் ஜி யூ போப் அவர்கள் திருவாசகத்தை ஊன்றிக் கற்று, உள்ளம் உருகப் பெற்றவராய் அந்த நூலை உலக மக்களுக்காக-ஆம் இந்திய நாட்டில் பிற மொழி பேசும் மக்களையும் உளளிட்ட உலக மாந் தருகாக-அவர் அந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க் கும் பணியில் ஈடுபட்டார். அவர்காட்டிய முறையைப் பின்பற்றி நம்முடைய சமய இலக்கியங்கள் பலவும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பணி திறம்பட நடை பெற வேண்டும் என்றால் காழ்ப்புணர்ச்சிகள், முழுமை

யாக ஒதுக்கப்பட்டு நட்புணர்ச்சியோடு பிற சமயத்தவர்களை அரவணைக்கும் பண்பும் அவர்களுடைய உள்ளுணர்வுகளுக்குள் புகுந்து அவர்கள் கருத்துக்களைப் புரிந்து கொள்கிற நல்நோக்கும் நம்மிடையே பெருக வேண்டும். இதனை ஆங்கிலத்தில் Empathy என்று கூறுவார்கள். பிறசமய இலக்கியத்தைப் படைத்தவர் எவராக இருந்தாலும்-அவருடைய சமயம் எதுவாக இருந்தாலும்-அவருடைய மன உணர்வுகளுக்குள் புகுந்து அவருடைய மனநிலையைப் பெற்றவாறு அவ்விலக்கியத்தைப் புரிந்து கொள்ள முற்படும்போது மட்டுமே அவ்விலக்கியத்தை முழுமையாகச் சுவைத்த உணர்வும் அதன் பயனைப் பெற்றுக் கொண்ட நிறைவும் நமக்குக் கிடைக்க முடியும்.

கவிஞர் மு. மேத்தா அவர்கள் உரையில் இலக்கிய நோக்கினபடி 'தமிழ் இலக்கியம்' என்ற ஒரே வகைப்படுத்தல் தான் இருக்க முடியும்; சமய இலக்கியங்கள் என்று அவற்றை பகுப்பது சரியன்று என்று குறிப்பிட்டார்கள். சிலம்பொலி சு. செல்லப்பனார் அவர்களும எச்சமயத்தவரால் படைக்கப் பெற்றாலும் தமிழில் உருவாகும் இலக்கியம் தமிழ் இலக்கியமே என்று குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் கூறியதைத் தழுவி, தமிழில் படைக்கப்பட்ட சைவ-வைணவ-சமண-பௌத்த-இஸ்லாமிய இலக்கியம் தமிழ்க் கிறிஸ்தவனாகிய எனக்கும் சொந்தமானவை என்று நான் பெருமையுடன் கூறிக் கொள்வேன். தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் வேற்று நாடுகளுக்கும் சென்று அங்குள்ள நணபர்களோடு உரையாடும்போது பலரிடத்தில் நான் தமிழன் என்கிற முறையில் இரட்சண்ய யாத்திரிகம் தேம்பாவணி மட்டுமல்ல, பெரிய புராணம், திருவாய்மொழி, சீறாப்புராணம் ஆகியவையும் என்னுடைய தமிழர்களாகிய எங்களுடைய இலக்கியங்கள் என்று நான் கூறத் தவறுவதில்லை.

தங்களுக்குத் தரப்பட்ட தலைப்புகளை ஒட்டிச் சமண பௌதத இலக்கியல்களிலிருந்தும் இஸ்லாமிய இலக்கியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் பலவற்றைக் கட்டுரையாளர்கள் வழங்கியதோடு பேரளவுக்கு அறிமுகமாகாத

புலவர்கள் பெயர்களையும், அவர்கள் படைத்த இலக்கியங்கள் பலவற்றைப்பற்றிய சுவையான குறிப்புகளையும் வழங்கியுள்ளார்கள்.

ஆனால், 'கிறிஸ்தவ இலக்கியம்' என்கிற தலைப்பில் வழங்கப்பட்டுள்ள கட்டுரையில் அதன் ஆசிரியர் தமிழில் கிறிஸ்தவ இலக்கியம் படைத்துள்ள கவிஞர் பெருமக்கள் பெயர்களையோ, அவ்விலக்கியத்திலிருந்து ஒரு பாடலையோ அல்லது பாடல் வரியையோ கூடக் குறிப்பிடவில்லை என்பது ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

ஐரோப்பியராகப் பிறக்க நேர்ந்த கிறிஸ்தவ அருட்தொண்டர்கள் இந்தியாவுக்கு வருகை தந்ததன் உள்நோக்கம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட கட்டுரையாளர் 23 பாதிரிமார்கள் சமயத்தைப் பரப்பும் பணியிலே ஈடுபட்டு அதற்குத் துணையாகத் தமிழைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்று தான் குறிப்பிட்டுள்ளாரே தவிர அந்த 23 பாதிரிமார்களுக்குள்ளே ஒரு பாதிரியாவது எவ்வாறு தமிழை சமயப் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தினார் என்பதைக் குறிப்பிடவில்லை.

மேனாட்டுப் பாதிரிமார்களுள் ஒருவராகிய போப் அவர்கள் திருவாசகத்தை மொழிபெயர்த்தமைக்கு ஒருகாரணம் இத்தகைய சிறந்த சமய இலக்கியத்தை ஆங்கில மக்கள் குறிப்பாகத தமிழகத்திற்கு அருட் பணியாளர்களாகச் செல்ல விரும்புகின்றவர்கள் முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டும் எனபதுதான். அதோடு, தமிழகத்திலுள்ள சமயங்களைப் பற்றிய குறைவான மதிப்பீடுகளை அவர்கள் தவிர்த்திட வேண்டும் என்ற நன்நோக்கோடு கூட அவர் அம்மொழிபெயர்ப்பினைச் செய்தார். இன்று கிறிஸ்தவ இலக்கியங்களுக்கு உள்நோக்கங்கள் எத்தனை வகையாகக் கற்பிக்கப்பட்டாலும், அவை அனைத்திற்கும் மேம்பட்ட பெருநோக்கம் ஒன்று இருப்பதை, மறைக்கவோ மறுக்கவோ எவராலும் முடியாது. எங்கெல்லாம்

எழுச்சிகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அவற்றைக் கண்டுணர்ந்து மகிழ்வதுடன் பிறருக்கும் அவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். யாம் பெற்ற இன்பத்தை இவ்வையகம் பெற வேண்டும் எனபதே அப்பெரு நோக்கமாகும்.

கட்டுரையாசிரியர் விட்ட குறையை நிறைவு செய்யும் வகையில் கிறிஸ்தவ தமிழ் இலக்கியத்திலிருந்து ஒரு பாடலை அல்லது பாடல் வரியை எடுத்துக்காட்டவிழைகிறேன்.

இலெந்து நாட்கள் எனும் நாற்பது நோன்பு நாட்களைக் கிறிஸ்தவ சமுதாயம் அனுசரித்து வருகின்ற இந்தக் கால கட்டத்தில் கிறிஸ்தவர்கள். இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளைச் சிறப்பாகத் தியானிப்பது வழக்கம் அதைக் கிறிஸ்தவக் கம்பராகப் போற்றப்படும் கிருஷ்ணப் பிள்ளை அவர்களின் சிலுவைக் காட்சிப் பாடல் ஒன்றை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

''கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேற
பெருங்கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ
சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை, உயிர்க்குயிரை
உலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவை
மிசைக் கண்டேனே''

சிலுவையில் இயேசுவின் உடல் ஆணிகளால் அடிக்கப்பட்டுள்ளது. இரத்தம் பீரிட்டுத் தெறிக்கிறது பார்ப்பதற்குக் கொடூரமாகத் தோன்றும் இக்காட்சியைப் பிற நாட்டுக் கவிஞர்கள் பலர் நெஞ்சுருக்கும் பாடல்களால் விளக்கியிருக்கிறார்கள். இயேசுவின் உடல் வாதைகளையும் அவர் முகத்தில் தோன்றிய வேதனைக் குறிப்புகளையும் பற்றிப் பாடியிருக்கிறார்கள். கவிஞர் கிருஷ்ணப் பிள்ளையோ, சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்க்கும்போது,

''உள்ளம் உவப்புறு தேனை உயிர்க்
குயிரை உலவாத
உள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவை
மிசை கண்டேனே''

என்று பாடுகிறார்.

கொடூரமான காட்சிக்குள்ளே இனிய காட்சி ஒன்றை தெள்ள முதை-தீங்கனியை அவர் சிலுவையில் காண்கிறார் முரண்பாட்டு உண்மை ஒன்றை ஆழ்ந்த நோக்கில் கண்ட வராய் அதை அழகிய தொடர்களால் எடுத்துரைக்கிறார்.

அவரைப் பொறுத்தவரையில் சிறுமை-பெருமை என்ற இரண்டும் சிலுவையில் தனித்தனியே காட்சி தரவில்லை. சிறுமைக்குள்ளே பெருமை அடங்கி நிற்கவுமில்லை.சிறுமை யே பெருமை என்பதை அவர் கண்டுணர்ந்து கொள்கிறார் தோல்வியே வெற்றி; அழிவே வாழ்வு என்று முழங்கும் வகையில் இப்பாடலை எழுதுகின்றார்,

இம்முறையில் இலக்கிய இன்பத்தை வாரி வழங்கும் பல்வேறு படைப்புகளை உருவாக்கியதோடு அமையாது இலக்கணச் செழிமைக்கும் மொழிச் சீர்மைக்கும் ஆக்கத தொண்டாற்றியவர்கள், ஆற்றி வருபவர்கள் கிறிஸ்தவத் தமிழர்கள்

இவ்வாறு பல்வேறு சமயத்தவர்களின் இலக்கியங்களை ஒருமைப்பாட்டுணர்வோடு ஆராயும் வாய்ப்பை ஏற்படுத் திய திரு மணவை முஸ்தபா அவர்கள் பெரும் பாராட்டுக் குரியவர் ஆவார். இத்தொகுப்பு தமிழின ஆக்கத்திற்கு கிறிஸ்தவத் தமிழர்கள் உட்பட பல்வேறு சமயத்தவர்கள் ஆற்றியுள்ள தொண்டை ஓரளவு ஆழமாகவே அறிந்து கொள்ளும் அரிய வாய்ப்பை வழங்குகிறதெனலாம்.

அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்

# வாழ்த்துரை

சமண, பெளத்த, கிறிஸ்தவ இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரையாளர்கள் நால்வரும் நாடறிந்த தமிழ்த் துறை வல்லுவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் தனி முத்திரை பதித்தவர்கள்; அதற்காக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றவர்கள். இவர்கள் வடித்த கட்டுரைத் தொகுப்பு வாழ்த்துரை வேண்டுவது மரபின்பாற்பட்ட செயல் என்றே கருதுகின்றேன். தன் நூலையே நன்னூல் எனக் குறித்த பவணந்தி முனிவர் முகவுரை தருவதற்கெனக் குறித்த நெறிமுறையின் எல்லையில் நான் வருவதற்கில்லை எனபதையுணர்கின்றேன் தமிழன்னையின் மீது தனியாப் பற்றுக்கொண்ட எத்தனையோ பேர்களில் நானும் ஒருவன் என்ற அன்பினால் தமிழகக் காவல்துறை சார்ந்த என்னை கட்டுரைத் தொகுப்பு பற்றிய கருத்தினைக் கூறட்டுமே என்ற அன்புக் கட்டளையை கலைமாமணி மணவை முஸ்தபா அவர்கள் பிறப்பித்திருக்கிறார் என்றே எண்ணுகின்றேன்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உறவுமுரசு முழக்கினான் கணியன் பூங்குன்றன்; 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உளநலத்தென்றல் திருமூலர்வழி தவழ்கிறது நல்லவை எவையோ அவையெல்லாம் உனக்கு வேண்டுவன என்பதை 'கடன் என்ப நல்லவையெல்லாம்' என்ற கட்டளை மூலம் திருவள்ளுவர் தெரிவிக்கின்றார். ஒளிவடிவான இமைவனையே தொழுகிறார் தாயுமானவர்; வள்ளலார் சமரச சன்மார்க்கத்தை நிறுவுகிறார். வேதநாயகர் சருவ சமயகீர்த்தனை பாடுகிறார் இவை யாவும் தமிழரின் பொதுமையறவுணர்விறகுப் பொய்யாத சான்றுகளாகும். இந்த மண்ணிலே தோன்றிய இலக்கியங்களில் மாசு பிறக்குமோ?

'தமிழிலக்கியக் கடலிலே நீந்திக் களிக்கும், தேவார திருவாசக திவ்விய பிரபந்தங்களில் திளைத்து நிற்கும் செல்லப்பனார் 'தமிழ் வளர்ச்சியில் இஸ்லாமிய இலக்கியத்தின் பங்கு' எனும் தலைப்பில் பெருங் கவிஞர்களிலிருந்து புதுக்கவிதை பாடு

வோர் வரை தன பார்வையைச் செம்மையாகச் செலுத்தியுள்ளார். இஸ்லாமிய நெறியினைப் போற்றும் பேரிலக்கியத்தையும் சிற்றிலக்கியத்தையும எடுத்துரைத்து அவற்றில மிளிரும் கவிதை மணிகளைத் தன் கட்டுரையிலே நிரல்படுத்தி ஒளிஉமிழச் செய்கிறார். அவர் கொண்டமுழுமையான பார்வை முதல்முறையாக இஸ்லாமிய நூல்களைக் கற்போருக்கும் முழுமையான நிறைவைத்தரும் என்பதில் ஐயமில்லை.

அன்பரசர் ஏசுபிரான் அடிபோற்றி வாழும் இயல்பினர் பேராசிரியர் வள்ளுவன் கிளாரன்சு மோத்தா அவர்கள். புத்தபிரான் பெருந்துறவையும் போதிமர நிழல் ஞானத்தையும் அள்ளித்தரும் இலக்கியங்களின் அருமையை ஆய்கிறார். சமயப் போட்டியின் காரணமாகப் பல புத்தமத நூல்கள் அழிவுற்றன எனக் குறிப்பிட்டு, அழியாமல் நிற்பவற்றின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார் புத்தர்கள் செய்தஇலக்கணத்தொண்டினை மறவாது போற்றுகின்றார். மணிமேகலைக் காவியம் பற்றி அரியதொரு திறனாய்வு செய்துள்ளதைப் பாராட்டாமல் இருக்கமுடியாத நகைச்சுவை யுணர்வாலே நயமான கருத்துகளை வெளியிடும் பாங்கினை அழகுற வெளிக்காட்டியுள்ளார்

கவிஞர் முகம்மது மேத்தா (மு. மேததா) அவர்கள் எடுத்ததுமே எந்தமத இலக்கியமாக இருந்தாலும் அது தமிழ் இலக்கியமே, அதைப் பிரித்துப் பார்க்கும பேதைமை வளரக் கூடாதெனக் கடிந்து கூறி, சமண இலக்கியச் சிறப்பையெல்லாம் வெளிக்கொணர்கிறார். சமணர்கள் தங்கள் கருத்தை நிலைநாட்ட பட்ட தொல்லைகட்காகக் கவிஞர் நெஞ்சத்தில் கண்ணீர் மல்கக் காண்கின்றோம. 'ஓட்டுக்கேட்க வந்த சமணர்கள், ஓட்டுப்போடுவோராயினர்', 'கடிதம் கொடுக்கும்தபால்காரரே காதல்கடிதம் எழுதத் தொடங்கினார்', 'அகம்புறம் பாடிய தமிழ் நிலத்தே இகம்பரம பேச வைத்தனர்'. 'அற நூல்களையும் அறிவியல நூல்களையும் எழுதுகிற போக்கை உருவாக்கினர்' எனும் கருத்துக்கள் போற்றத்தக்கன. சிந்தா

மணிக் காவிய அழகை சிந்தையெல்லாம் கொள்ளை கொள்ளும் முறையில் எடுத்துரைத்துள்ளார். கவிதை வானில் கற்பனைச் சிறகுவிரித்து களித்துப் பாடி மகிழும் வானம்பாடி சிந்தாமணிக் கடலில் மூழ்கி சிறந்த முத்து களை அள்ளித்தந் திருப்பதைக் காணும்போதுதான் பாம்பறியும் பாம்பின்கால் என்பதன் பொருள் சிறக்கப் பார்க்கின்றோம். திருத்தக்க தேவரை மேத்தா போற்றுகிறாரே தவிர சமணரை முஸ்லிம் ஒருவர் போற்றுகிறார் என்று சொல்வதற்கில்லை.

கிறிஸ்தவ இலக்கியம் பற்றி டாக்டர் அறவாணன் அவர்கள் கட்டுரை படைத்துள்ளார்கள். பொதுவாகக் கிறிஸ்தவர்கள் செய்த தமிழ்த தொண்டினைப் பாராட்டு கின்றார். ஆனால் ஏனோ மிகச்சிறந்த தமிழ்த் தொண் டாற்றிய சான்றோரின் பெயர்களைக் கூட குறிப்பிடா மலே சென்றுள்ளார். மேலை நாட்டுக் கிறிஸ்தவர்கள் வணிகம் செய்ய வந்தார்களா? மதம் போதிக்க வந்தார் களா? மக்களை அடிமைப் படுத்தி அரசியல் ஆதாயம் தேட வந்தார்களா? எனபது குறித்தே அவர் கட்டுரை செல்கிறது. கிறிஸ்தவ பெருமக்கள் ஏற்றி வைத்த கல்வி விளக்கே தமிழகத்தைக் கவ்வியிருந்த இருளை ஓரளவு விரட்டியது எனலாம்; அகவிருளகற்றி அறிவொளி வீசச் செய்த கிறிஸ்தவப் பெரியோரின் தமிழ்த் தொண்டைக் குறைத்துப் பேச முடியாது என்பதைத் தமிழ் உலகம் நன்கறியும் என்று திடமாக நம்புகின்றேன்.

தமிழ்த்தாய் எல்லா மக்களையும் ஒன்றுபடுத்துபவள். தமிழ்க் கோயிலில் வேற்றுமையில்லை. தமிழ்க்குலம் தவிர வேறொன்றும் இந்த மண்ணில் இல்லை. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதே வள்ளுவ மறை.

இத்தகைய பொதுமையுணர்வின் அடிப்படையில் 'மீரா அறநிறுவனம்' சமண, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய இலக்கியச் செல்வங்களை அவற்றினால் தமிழுக்குக் கிடைத்த ஏற்றத்தை வளர்ச்சியை ஆராயும் முயற்சி போற்றத்தக்கதாகும்.

அதிலும் அவ்வச் சமயத்தைச் சார்ந்தோர் அவரவர் சமய இலக்கிய வளர்ச்சியைப் பற்றிப் பேசாது மாற்றுச் சமயத்தவர் இலக்கிய வளர்ச்சியை ஆராய்வது பல்லாற்றானும் பாராட்டத்தக்கதாகும். இத்தகைய போக்கும் செயலுமே உண்மையான ஒருமைப்பாட்டை உருவாக்க இயலும். இன்றைய சமுதாயம் இதையே எதிர்பார்க்கிறது.

இது, இலக்கிய முயற்சியில் ஒரு புதுமையான, பலரும் பின்பற்றத்தக்க முன்னோடிச் செயல் என்பதில் கிஞ்சிற்றும் ஐயம் இல்லை.

இத்தகைய அரிய முயற்சியில் ஈடுபட்ட என் நண்பர் கலைமாமணி மணவை முஸ்தபா அவர்களைப் பாராட்டுகிறேன். அவரது முயற்சிக்குத் துணையாக நின்று ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய ஆய்வாளர்கள் போற்றுதற்குரியோர் ஆவர்.

ஸ்ரீபால்
ஐ. ஜி.
தமிழ்நாடு காவல் துறை

# சிறப்புரை

இலக்கிய ஆய்வு என்று வரும்பொழுது அஃது வெறும் கலைச் சுவைக்காக மட்டும் என அமைவது கூடாது. ஏனெனில் வாழ்க்கை என்பதன் வெளிப்பாடுதான் இலக்கியம். இலக்கியத்தைச் சுவைக்காக மட்டுமல்லாமல் பயனுக்காகவும் ஆராய வேண்டும்.

அப்படி ஆராயும்போது அந்தந்தக் கால இலக்கியங்கள் ஏன் படைக்கப்பட்டன? எவ்வாறு படைக்கப்பட்டன? என்ற கேள்விகளின் அடிப்படையில் காரண, காரிய விளக்கம் காண முயல வேண்டும். இல்லாவிட்டால் இலக்கிய ஆய்வு பயனற்றுப் போகும்.

இந்தச் சமய இலக்கியக் கருத்தரங்கின் தனிப்பெரும் சிறப்பு, எந்தச் சமய சார்பான இலக்கியங்களைப் பற்றி ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டனவோ, அந்த ஆய்வுரையாளர்கள் அந்தந்த சமயத்தைச் சார்ந்தவர்கள் அல்லர்.

பல்வேறு சமயங்கள் அல்லது மார்க்கங்களின் அடிப்படைக் கொள்கைகளையும் ஆராய்ந்து அவற்றுக்கிடையேயுள்ள ஒற்றுமைகளையும் அனைத்துச் சமயங்கள் மார்க்கங்களிடையேயான அடிப்படை தனிச் சிறப்புக்களை இனங்கண்டு ஒருங்கிணைத்துப் போற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக இஸ்லாத்தின் தனிச்சிறப்பு என்னைப் பொறுத்தவரை அருவ வழிபாடு, கிறிஸ்தவத்தின் தனிச்சிறப்பு கடை

யனையும் கடைதேற்றச் செய்யும் தொண்டு, இந்து சமயத்தின் சிறப்பு சகிப்புத்தன்மை, எவையும் எல்லாவற்றையும் ஏற்றல்.

இத்தகைய கொள்கை கோட்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு கால கட்டங்களில் உருவாக்கப்பட்ட இலக்கியங்களை ஆய்வதன் மூலம அவற்றிறகிடையேயான ஒருங்கியல்பை அறிந்துணர்ந்து வெளிக் கொணரும் முயற்சி எலலா வகையிலும் பாராட்டப்படத் தக்கதாகும்.

இத்தகைய பரந்த ஒருமையுணர்ச்சியை உருவாக்கும் அரிய முயற்சியில் ஈடுபட்டு, ஒருமைப்பாட்டிற்கு வழி கோலும் வகையில் கருத்தரங்கு, தொகுப்பு நூல் எனச் செயல்படும் திரு. மணவை முஸ்தபாவின் தொண்டு காலத்தால் நினைவு கூறும் நல முயற்சியாகும்,

(கருத்தரங்கில் ஆற்றிய உரைச் சுருக்கம்)

**டாக்டர் ந. சஞ்சீவி**

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ் இலக்கியத் துறைத் தலைவர்

# சமண இலக்கியம்

**கவிஞர் மு. மேத்தா, எம். ஏ.**

தமிழ் இலக்கியங்களைச் சமணர் இலக்கியங்கள் என்றோ பௌத்த இலக்கியங்கள் என்றோ பார்த்ததில்லை சொல்லப் போனால் அவ்வாறு பிரித்துப் பார்ப்பதற்குரிய வசதிகள் உள்ளதாக இருக்கும் என்றால் அவை இலக்கியங்கள் இல்லை. அடையாளமே தெரியாதபடி, இந்த இலக்கியம் தனக்குள்ளே, அதன் மதத்தினுடைய கொள்கைளையும் கோட்பாடுகளையும், இரண்டறக் கலந்து ஒட்டமாகக் கொண்டிருப்பதுதான் ஒரு நல்ல இலக்கியத்தினுடைய இயல்பு என்று நான் கருதுகிறேன். ஆனால் இங்கே குறிப்பிட்ட மதம், ஒரு சமயம், தமிழுக்கு எந்த வகையில் எல்லாம் பணி புரிந்தது என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டிய ஆராய்ச்சி நெறியிலே இந்தக் கருத்தரங்கத்தை அமைத்திருக்கிறார்கள்.

இன்றைக்கு நான் சமண இலக்கியங்களைப் பற்றிப் படித்துப் பார்த்தபோது, சமணர் இலக்கியங்களுக்காக நான் மகிழ்ச்சி அடைந்ததைவிட இந்தச் சமணர்கள் எப்படி எல்லாம் போராடினார்கள் என்பதற்காக மிகவும் வருத்தப்பட்டேன். ஒரு குறிப்பிட்ட மதமானது எப்படி, இந்த நாட்டில் ஒடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி டாக்டர் க.ப. அறவாணன் போன்றவர்களும் வேறு பல பெருமக்களும் எழுதியிருக்கின்ற செய்திகள் என் நெஞ்சை உலுக்கின. கொள்கைகளின் தூதர்களுக்குஉலகத்திலே நடந்த பெரிய கொடுமைகளையெல்லாம் கேள்விப் பட்டுப் பதறிப்போன நம் நெஞ்சில், பாகிஸ்தானிலே நடந்த படுகொலைகளை எல்லாம் கற்பழிப்புக்களை

எல்லாம் கண்டு கதறிய உள்ளம், அதே மாதிரி ஒரு காலத்திலே கழுவினிலே ஏற்றப்பட்டார்கள் சமணர்கள் என்ற செய்தியைக் கேள்விப்படுகின்றபொழுது அதைமனிதகுலத தின் நாகரிகமாக நம்மால் ஒததுக்கொள்ள முடியவில்லை,

சமணர்கள் திட்டமிட்டுத் தாக்கப்பட்டார்கள். சிதைக்கப்பட்டார்கள், அதற்கு அடிப்படையான காரணம் என்ன? இங்கே தமிழர்களிடத்திலே ஒரு பெரிய புரட்சி தோன்றியது. வேத வேள்வியினுடைய எதிர்ப்பின் நெருப்பாகத் தோன்றியவர்கள் மீது அவர்கள் அன்னியர்கள் என்றும் அவர்கள் வேண்டாதவர்கள் என்றும் பழி சொல்லப்பட்டது. அவர்களை அழிப்பதற்குரிய, ஒடுக்குவதற்குரிய, முயற்சிகள் இங்கே நடந்தன என்று அறிய நேர்கிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களும்கூட, பாடிய பாடல்களை நான் பார்த்தபோதுதான், சமணர்களுக்கு, பௌத்தர்களுக்கு, இங்கு எத்தனை விதமான எதிர்ப்பிருந்தது என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. நான் நம்பவில்லை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அப்படி எல்லாம் பாடக் கூடியவர்கள் என்று நான் நம்பவில்லை. ஆனால் பாடியிருக்கிறார்கள். இன்றைக்கும் கட்சிகள் ஒன்றையொன்று அடித்துக் கொள்கிற மாதிரி மதங்கள் ஒன்றையொன்று நன்றாக அடித்துக் கொண்டிருக்கின்றன அதிலே அடிபட்டவர்கள் சிலர் வெளியே சொல்லியிருக்கின்றார்கள் சிலர் சொல்லாமலே போயிருக்கிறார்கள். ஆனால் பல பேர் வருந்தியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. தொண்டரடிப்பொடி ஆழ்வாருடைய பாடல் ஒன்று சமணர்கள் எப்படி நசுக்கப்பட்டார்கள் என்பதற்குச் சான்றாக நிற்கிறது. சமணர்களை எப்படி நசுக்க வேண்டும் என்பதற்கு இவர்களே, விதை விதைக்கிற போக்கை இந்தப் பாடலிலே நான் பார்க்கிறேன்.

''வெறுப்போடு சமணர் குண்டர் விதியில் சாக்கியர்
தலையை ஆங்கே

அறுப்பதே தருமம் கண்டாய் ஆனந்தமா நகர் வாழ்
வானே!''

என்று சொல்லி ஆண்டவனுக்கு ஒரு விண்ணப்பம் கொடுக்கிறார். ஆண்டவனே, நான் அவர்களுடைய தலையை அறுக்க வேண்டும். சாக்கியர்களை அறுக்க வேண்டும். நான் சமணர்களை அறுக்க வேண்டும். அப்படி நான் அறுக்காதிருந்தால், அந்தப் பணியினைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு உன்னுடையது என்று சொல்லி தொண்டரடிப்பொடியாழ்வார் பாடுகின்ற பாடலைப் பார்க்கின்றபொழுது, எனக்குச் சமணர்கள் மீது பெரிதும் பரிதாபம் ஏற்பட்டது, அதுமட்டுமல்ல, வேள்வி, வேதம் இவற்றையெல்லாம் எதிர்த்து ஒரு அறிவுப் புரட்சி செய்த காரணத்தினாலேதான், அவர்கள் இங்கே தாக்குதலுக்கு ஆளாகியிருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொண்டபோது என் நெஞ்சில் பெருத்த வேதனைகள் ஏற்பட்டன. ஒரு காலத்திலே இங்கே சுதந்திரப் போராட்டம் நடந்தது. அந்த சுதந்திரப் போராட்டத்துக்குப் பின்னாலும்கூட, இந்த சமணர்களுக்குப் பின்னாலே வேத வேள்விக்கெதிரான எதிர்ப்பின் நெருப்பு இருந்தது மாதிரி,அந்தப்போராட்டத்திற்குப் பின்னாலும் வேறுபல செய்திகள் இருக்கின்றன என்பதை, அந்த வரலாற்றைக் கூர்மையாகப் பார்க்கின்றபொழுது அறிந்து கொள்ள முடிகிறது.

திருஞானசம்பந்தர் போன்றவர்களும் சமணர்களைக் கடுமையாகச் சாடிப் பாடியிருக்கிறார்கள். இழிவுபடுத்தத் தூண்டியிருக்கிறார்கள். என்பதை அவர் தம் பாடல்கள் மூலமே நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

இவ்வளவு பெரிய மனிதர்கள் இழிப்பும் பழிப்புமான உணர்வுகளைப் பரப்பி, கடுந்தாக்குதல்கள் தொடுத்தார்கள் என்பது வரலாறு தரும் உண்மை. சமணர்கள் இத்தகைய தாக்குதல்களுக்கு மத்தியிலே செய்த பணியை, நாம் போற்ற வேண்டியதாக இருக்கின்றது. நீதி இலக்கிய நூல்களாகவும், காப்பியங்களாகவும், இலக்கண நன்கொடைகளாகவும், தமிழுக்குக் கொடுத்திருக்கின்ற கொடைகளை பற்றி நினைக்கிறபோதுதான அவற்றின் சிறப்புகளைச் சீராட்ட முடிகிறது இன்றைக்குச் சீறாப்புராணம் என்று சொன்னால் இஸ்லாமிய இலக்கியம் என்று தெளிவாகத் தெரிகிறது. ரட்சண்ய யாத்திரீகம்' என்று சொன்னால், அது கிறித்தவ இலக்கியம் என்று தெளிவாகத் தெரிகிறது. தேவாரம் எனறு சொன்னால், சைவ இலக்கியம் என்று தெளிவாகத் தெரிகிறது மணிமேகலை என்று சொன்னால் அது பௌத்த இலக்கியம் என்று தெளிவாகத் தெரிகிறது. ஆனால் யாப்பிலக்கணத்தை ஒரு சமண இலக்கியம் என்று சரியாகக் கணக்கிட்டுச் சொல்ல முடியவில்லை. அதே மாதிரி சீவக சிந்தாமணியை, சமண இலக்கியம் என்று தனியாக மதிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. சிலப்பதிகாரத்தைச் சமண இலக்கியம் என்று சொல்லுகிறார்கள். சமண இலக்கியம் அல்ல என்றும் சொல்லுகிறார்கள். திருக்குறள் சமண இலக்கியம் என்று சொல்லுகிறார்கள். அல்ல என்றும் அறிவிக்கிறார்கள் அறிஞர்களுக்குள்ளேயே ஒரு விதமான விவாதம் நடைபெற்றுக் கொள்ள கூடிய வகையில் அமைந்திருப்பதே சமண இலக்கியங்களுடைய வெற்றி என்று நான் கருதுகிறேன்.

சமணர்கள் தமிழுக்குத் தொண்டு செய்வதற்குரிய காரணம் என்ன? அவர்கள் ஓட்டுக் கேட்கத்தான் வந்தார்கள் ஆனால் ஓட்டுக் கேட்க வந்தவர்களே, ஓட்டுப் போடுபவர்களாக மாறிப்போகின்ற ஒரு நிலையை நாம் பார்க்கிறோம். தத்துவத்தை, தத்துவக் கடிதங்களை

எடுத்துக் கொண்டு வந்து, கொடுக்கும் தபால்காரரே காதல் கடிதம் எழுதத் தொடங்குகிற மாதிரி, தத்துவக் கருத்துக்களைக் கொடுப்பதற்கு வந்த சமணர்கள் தமிழில் ஈடுபட்டு, முழுக்க முழுக்க தங்களைச் சமப்படுத்தி கொள்கின்ற நிலையைப் பார்க்கின்றோம். இலக்கியத திலே தொல்காப்பியததிற்கு அடுத்தாற்போல் சிறந்த நூல் என்று சொல்லப்படுகின்றது நன்னூல் அந்த நன்னூலைக் கொடுத்தவர் சமண முனிவர். நாலடியார், நான்மணிக் கடிகை போன்ற சிறந்த நீதி நூல்களைக் கொடுத்தவர்கள் சமணர்கள். சீவக சிந்தாமணி, சூடாமணி, பெருங்கதை, வளையாபதி போன்ற, சிறந்த காவியங்களை தரமுள்ள காவியங்களைக் கொடுத்தவர்கள் சமணர்கள் அதே மாதிரி சூடாமணி போன்ற, நிகண்டுகளைத் தமிழுக்கு கொடுத்தவர்கள் சமணர்கள் என்று சொல்லுகின்ற பொழுது, அவர்களுடைய சாதனைகளைப்பற்றி நான் பெருத்த ஆச்சரியமடைந்தேன். அவர்களுடையு சாதனை கள் ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்குள்ளே அடங்குகின்ற சாதனையாக இல்லை நான் ஏற்கெனவே கூறிய மாதிரி தாக்குதல்களுக்கு மத்தியிலே இத்தனை வித்தைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது.

தமிழ் இலக்கியதினுடைய போக்கைக் கூட இவர்கள் கொஞ்சம் திருப்பியிருக்கிறார்கள் என்று நான் கருது கிறேன். தமிழ் இலக்கியத்தினுடைய இம்மையிலே இன் பம் காணுகிற போக்கு, இன்றைய வாழ்க்கையை நுகர் கிற போக்கு இலக்கியங்களுடைய போக்கு அவற்றி லிருந்து சற்று மாறி, அகம் புறம என்று பேசிக்கொண்டி ருநததை மாற்றி இகம் பரம் என்று பேசவைத்திருக்கிறார் கள் இந்த சமணர்கள் வாழ்க்கையை அகம் புறம் என்று பாடிக் கொண்டிருந்த நிலையை மாற்றி அற நூல்களை யும் அறிவியல் நூல்களையும் எழுதுகிற, ஒரு போக்கை தமிழிலே அவர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள்.

தமிழுக்கு அவர்கள் கொடுத்த கொடையிலேயேபெரிய கொடை, விருத்தப்பாவை தமிழுக்குக் கொடுத்த கொடை என்று நான் கருதுகிறேன் விருத்தப்பாவை கொடுத்து, தமிழுக்கு ஒரு வீரியத்தை அவர்கள் சேர்த்திருக்கிறார்கள். சிந்தாமணி என்பதை ஒரு சாதாரண இலக்கியமாக, என்னால் சொல்ல முடியவில்லை. சிந்தாமணியினுடைய கற்பனைச் சுவையயும் கனிச்சுவையும், அந்தச் சிந்தாமணியிலே ஆழ்ந்து கிடக்கிற உவமை நயங்களும் சேர்ந்து ஓர் உன்னதமான இலக்கியப் படைபாக்கியிருக்கிறது. அது ஒரு மத இலக்கியம் என்று பார்ப்பதற்கு தேடித்தேடி எங்கேயாவது சானறுகள் நாம் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர, எதுவும் துருத்திக் தெரியாதபடி அது இயல்பாக அமைந்துள்ளது. எப்பொழுதுமே குறைகள் என்பது, துருத்திக் கொண்டு தெரியும். அழகுகள் என்பது அடங்கிக் கிடக்கும். இது அழகுகளாக அடங்கி கிடப்பதை நான் பார்க்கிறேன். துருத்திக் கொண்டு தெரிகிற திட்டுகளாக, இவை எதுவுமே தெரியவில்லை. அந்தச் சமயத்திலேதான் ஞானசம்பந்தர் போன்ற பெரியவர்களே, கசப்புணர்வு பொங்க இவர்களைப் பற்றிகூறியிருக்கிறார்கள் என்கின்ற போது அது கொடிய தாக்குதல்களுக்கு மத்தியிலே நடந்த அவர்களுடைய தமிழ்ப்பணி, என்னுடைய நெஞ்சத்தைக் கவருகிறது.

சீவக சிந்தாமணியிலே, அந்தக் கவிதையினுடைய சிறப்புக்கள், அந்தக் கவிதைகளுடைய பெருமைகள் எல்லாம்.மிகவும் அற்புதமாகப் போற்றிப் பாராட்டத்தக்கன.

''மெய்ப்பொருள்காட்டி உயிர்களுக்கு அரனாகிய, துக்கம் கெடுப்பது நூல்'' என்று சொல்லுகிறார்கள்.

இதுதான் சமண இலக்கியங்களுடைய பொதுவான நோக்கமாக இருக்கிறது.

மெய்ப்பொருள்காட்டி உயிர்களுக்கு அரணாகி துக்கம்
கெடுப்பது நூல்''

இவர்கள், துறவறமே பெரிதாக நினைத்திருக்கிறார்கள். துறவறமே உயர்ந்தது என்று சொல்லியிருக்கிறார்கள், முக்தி தேடுவதேவாழ்க்கை என்றுசொல்லியிருக்கிறார்கள்.

ஜைன இலக்கியத்தினுடைய தனித்தன்மை என்ன என்று கூறினால் அது பல்வேறு மொழி பேசுகின்றவர்களுக்கு மத்தியிலேயும் பல்வேறுபட்ட பண்பாடு உடையவர்களுக்கு மத்தியிலேயும் கூட. பொதுமையான ஓர் எண்ணத்தைத் தோற்றுவிக்கக் கூடிய அற அடிப்படையுடையதாக இருக்கிறது. ஏனென்றால் 'சமணர் கோட்பாடுகள், பொதுவானவையாக அமைந்திருக்கின்றன. ஒழுக்க நெறியாகச் சிந்திக்கிற இயல்பினை தமிழ்இலக்கியப் போக்குக்கு இந்தச் சமண இலக்கியங்கள் தந்திருக்கின்றன. மெய்ஞ்ஞானத்தையும் விஞ்ஞான செய்திகளையும்இந்தச் சமண இலக்கியங்கள் தந்திருக்கின்றன. அற்புதமான விஞ்ஞானச் செய்திகளை எல்லாம் நீலகேசியிலே நீங்கள் பார்க்கலாம். சூரியனுடைய ஒளிக்கதிர்மேல் மழைத்துளி படுகிற பொழுது வானவில் தோன்றுகிறது என்று விஞ்ஞானம் சொல்கிறது. இந்த விஞ்ஞானத்தை நீலகேசியும் சொல்கிறது.

''முகிலின் கண் உள்ள நீர்த்துளிகளிலே ஞாயிற்றின் கதிர்கள் படும்பொழுது, வானவில் தோன்றுகிறது'' என்று நீலகேசி சொல்கிறது.

அதுமட்டுமல்ல ஒலி என்பது மெதுவாக வருவது ஒளி என்பது வேகமாக விரைந்துவரும். சப்தமோ கொஞ்சம் சாதாரணமாக. தாமதமாக வரும். இந்தச் செய்தி விஞ்ஞானச் செய்தி, விஞ்ஞானச் செய்தியை நீலகேசி விளக்குகிறது;

எவ்வளவு அழகான உவமை மூலம் விளக்குகிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்! உடைகளை வண்ணான் கல்லிலே அடிக்கிற பொழுது, கல்லில் அடிக்கிற காட்சி உடனே தெரிந்து விடுகிறது ஆனால், அப்படி அடித்த உடனே வருகிற ஓசை, தாமதமாகத்தான் வருகிறது காட்சி உடனே கிடைக்கும் என்பதை நீலகேசி காட்டுகிறது.

பெருங்கதையிலே அவர்கள் ஒரு எந்திரப் பாவையைக் காட்டுகிறார்கள் எந்திரக் கிணறு காட்டுகிறார்கள் ஹோமருடைய இலக்கியத்திலே ஒரு குதிரை வரும் அபூர்வமாகச் செய்த குதிரை, பகைவர்கள் ஓடி விட்டார்கள் என்று அந்தக் குதிரையை அரண்மனைக்குள்ளே கொண்டு போனார்கள திடீரென்று அந்தக் குதிரையினுடைய வயிற்றைப் பிளந்து கொண்டு, வெளிவந்த வீரர்கள் அந்தக் கோட்டையைப் பிடிப்பார்கள் அப்படி ஒரு காட்சி அந்தக் கிரேக்க இலக்கியத்திலே வரும். அதே மாதிரி ஒரு காட்சியை, பெருங்கதையிலே பார்க்கிறோம் அதே மாதிரி ஒரு எந்திர யானை அழகான யானை, அதை உள்ளே கொண்டு போகிறார்கள். அந்த யானையின் உள்ளேயிருந்து வீரர்கள் புறப்பட்டு வருகிறார்கள் இது கிரேக்கத்தினுடைய சாயலா அல்லது ஒரே காலத்திலே அந்தச் சிந்தனைப் போக்கு அப்படிப் போயிருக்கிறதா? என்று சிந்தனையைத் தூண்டுவது மட்டுமல்ல, விஞ்ஞானங்களையெல்லாம் அவர்கள் எவ்வளவு கூர்மையாகப் பார்த்திருக்கிறார்கள் என்பதற்கும் இவை சான்றுகளாக விளங்குகின்றன.

அதுமட்டுமல்ல, இந்தச் சமணர்கள் தங்களுடைய பெயர்களைக்கூட பத்திரப்படுத்தாமல், அவர்கள் பாட்டுக்குப் போய் விடுகிற காட்சியைப் பார்க்கிறோம் சில சமயங்களிலே சில நூல்களிலே, எழுதியவர்கள் யார் என்பதே தெரியாமல் போய் விடுகிறது எழுதியவர் யார்

என்ற கேள்வி வருமேயானால், பெரும்பாலும் அந்த நூல் சமண நூலாக இருக்கக் கூடும் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது. அது மாதிரி அவர்கள் நம்முடைய பெருமைகளைப் பேசாமல் போகிற போக்கை நாம் பார்க்கலாம் அதுமட்டுமல்ல வெளிப்படையாகப் பேசுகிற போக்கு அவர்களுடைய நூல்களிலே காணப்படுகிறது. நீலகேசி ஆசிரியர் சொல்லுகிறார். தான் கனவிலே கண்ட ஒரு நிகழ்ச்சியைத்தான், காவியமாக எழுதுகிறேன் என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். சில பேர் அப்படிச் சொல்ல மாட்டார்கள். நான் நேரிலே பார்த்ததை எழுதுகிறேன் என்பார்கள். இல்லை, இல்லை என்னுடைய வாழ்க்கையிலேயே நடந்தது என்பார்கள். பல பேர் எழுதுகிற சுயசரிதங்களைக்கூட நாம் சோதனை செய்ய வேண்டியிருக்கும். அவர்களுக்குப் பக்கத்து வீடுகளிலே பக்கத்துத் தெருவிலே இருந்தவர்களைக் கேட்டுப் பார்த்தால் அவை சுயசரிதங்கள் அல்ல. அவைகள் அருமையான நாவல்கள் என்பது புலனாகிவிடும். சரிதங்களே கட்டுக்கதையாகி விடுகிற பொழுது, தாம் செய்யப் போகிற காவியம் கனவிலே கண்ட ஒரு நிகழ்ச்சி என்று எழுதும் இலக்கிய நேர்மை எனக்குப் பாராட்டுவதற்குரிய ஒன்றாகத் தோன்றுகிறது.

சமண இலக்கியத்தினுடைய அடிப்படை மையக் கருத்தானது உலகத்திலே இருக்கிற உயிர்களை எலலாம் உறவாகப் பாவிப்பது! உலகத்திலே இருக்கக்கூடிய உயிர்களை எல்லாம் உறவாகப் பாவிப்பது, இஸ்லாம் மதத்திலே சொல்லுவார்கள் அண்டை வீட்டுக்காரன் பக்கத்திலே பசித்து இருக்கும்பொழுது தாம் மட்டும் உண்ணுகிறவன் ஒரு உண்மையான முஸ்லிமாக இருக்கமாட்டான் என்று அண்டை வீட்டுக்காரன் பசித்திருக்கிற பொழுதுதான், தான் மட்டிலும் உண்ண வேண்டும் என்று இப்போது நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் சாப்பிடும்போது நானும் சாப்பிட்டால்,

அந்தச் சாப்பாடும் இந்தச் சாப்பாடும் சமமாகிப் போய் விடும் அல்லவா? அவர்கள் சாப்பிட முடியாத போது சாப்பிட்டால் அல்லவா, நாம் சாப்பிடுவதற்கு மரியாதை கிடைக்கும்! என்று கருதுகின்ற காலத்திலே நாம் வாழ் வதனாலே தான் இந்தக் கருத்துக்கள் எவ்வளவு உயரத்தி லே இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்கிறேன். சமண இலக்கியத்திலே இன்னொரு போக்கு இருக்கிறது. குறிப்பிட்ட இனத்தையோ குறிப்பிட்ட மொழி பேசுகிற வர்களைப் பற்றிய பழிப்போ இருக்காது அவர்களைக் கேவலப்படுத்துகின்ற செய்தி இருக்காது. தர்க்க ரீதியாக தங்களுடைய கொள்கைகளை நிறுவும ஒரு பணியிலே தான் அந்தச் சமண இலக்கிய்ங்கள் வளர்ந்திருக்கின்றன. சமண இலக்கியஙகளுடைய அற்புதமான சாதனை என்று நாம் அவர்களுடைய இலக்கண, நிகண்டுப் பணிகளை யும் சீவக சிந்தாமணி காவியத்தையும், சொல்ல நேரிடு கிறது.

சிந்தாமணி அற்புதமான காவியமாகக் கருதப்படு கிறது. சமண சமயத்துக்கு இநதக் காவியம் எப்படி ஒத் துப்போனது என்பது தான் எனக்குச் சந்தேகமாக இருக் கிறது. சமணர்கள் இதை எப்படி ஏற்று கொண்டார்கள் என்று கூட எனக்கு வியப்பு தோன்றுகிறது. ஏனெனில் சீவகன் போகிற வழியெல்லாம் திருமணம் செய்து கொண்டே போகிறான, நபிகள் தாயகம் அவர்கள் விதவைகளுக்கு மறுமணம் செய்ய வேண்டும் என்ற நோக் கத்தையும், பெண்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் அன்றைக்கு இருந்த சமூகத்தில் தன் னுடைய இனத்தின் சக்தியைப் பெருக்கிக் கொள்ள வேண் டும் என்ற நோக்கத்திலும், பல திருமணம் பண்ணினார் கள். சீவகனோ பெரிய காவியம் உணடாக்குகின்ற மாதிரி கல்யாணங்களைப் பண்ணிக் கொண்டே போகின்றான். சமணர்கள் மீது ஒரு பெரிய குற்றச்சாட்டுச் சொல்லப்படுவதுண்டு. அவர்கள் கலைகளை வெறுத்தவர்கள் என்று சொல்வார்கள். கலைகள்

மூலமே கல்யாணம் பண்ணிக்கொண்டு போகிறான். சீவகன் ஒரு பெரிய கல்யாண புருஷனாகவே கதையை வளர்த்துக் கொண்டு போகிறான். இறுதியிலே அவன் வந்த இன்பத்தையெல்லாம் அனுபவித்துவிட்டு அவற்றை எல்லாம் துறந்து வீடு பேறு பெற வேண்டும் என்று சொல்லி முக்தி உலகத்திதிற்குப் போகின்றான் என்று சிந்தாமணியினுடைய கதை முடிகிறது. இதற்கு இடையே சிந்தாமணியிலே நடக்கிற நாடகத்தின் கவிதை நாட்டியங்கள் சாதாரணமானவை அல்ல.

இலக்கனையை ஓரிடத்திலே காட்டுகிறார்கள். இலக்கனையை அலங்கரிததுக் கொண்டிருக்கிறார்கள், அலங்கரித்து முடித்த பெண்களை அந்தப்பெண்ணைப்பார்க்கிறார்கள் முதலிலே கண்ணைப்பார்க்கிறார்கள். பிறகு மார்பை பார்க்கிறார்கள். பிறகு அடிவயிற்றைப் பார்க்கிறார்கள். அதற்குப் பிறகு வேறிடத்தில் ஆரம்பிக்கிறார்கள். இப்படிப் பார்த்துக் கொண்டே வந்தவர்கள் மறுபடியும் அவருடைய கூந்தலைப் பார்க்கிறார்கள். கடைசிலே அந்தப் பெண்கள் எல்லாம் பேசிக் கொள்ளுகிறார்கள். அடாடா இப்படி ஆகிவிட்டதே என்று சொல்லிப் பேசிக் கொள்கிறார்கள். ஏன் ''இப்படியாகி விட்டதே' என்று பேசிக் கொள்கிறார்கள்? மணிமேகலையிலே சாத்தனார் 'பேடியரன்றோ பெற்றியின் நின்றிடின்' என்று சொல்லுவார். மணிமேலை போகிபோது, அவளைப் பார்த்து விட்டு அந்த அழகை ரசிக்காமல் போனால், பேடி மகன் அல்லவா என்கிற விததகிலே மணிமேகயைிலே சாத்தனார் சொல்வதைப் பார்க்கிறோம்.

ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடியரன்றோ பெற்றியின் நின்றிடின்''

என்று சொல்லுவார். அதையெல்லாம் விட ஒருபடி விஞ்சி இவர் சொல்லுகிறார்,ரொம்ப அழகாகச் சொல்லுகிறார்.

அந்தப் பெண்கள் அலங்கரிக்கிறார்கள். அலங்கரித்த பெண்கள் தங்களால் அலங்கரிக்கப்பட்ட இலக்கணையைப் பார்ககிறார்கள்.

''வான் மழை கடைக்கண் நோக்கி......''

எல்லாவற்றையும் பார்க்கிறார்கள்; கண்ணைப் பார்க்கிறார்கள்; மார்பைப்பார்க்கிறார்கள் ஆலிலைப் போன்ற அடிவயிற்றைப் பார்க்கிறார்கள் கூந்தலைப் பார்க்கிறார்கள் எல்லாவற்றையும் பார்த்து விட்டு இந்தப் பெண்கள் பேசிக் கொள்கிறார்கள். ''அடாடா நான் ஆணாகப் பிறக்க வில்லையே? இவளை அப்படியே அணைத்துக் கொள்வதற்கு'' என்று சொல்லி வியப்புற்று நிற்கிறார்கள். நாம் ஆணாகப் பிறந்திருக்க வேண்டும், அல்லது நாம் ஆணாக மாறி இருக்க வேண்டும். அல்லது இனிமேலாவது மாற வேண்டும். இவளை அணைக்க வேண்டும், என்று சொல்லி ஆசைப்படுகிறார்கள், அப்படிபட்ட அழகு என்று சொல்கிறார்.

அழகை வர்ணிக்கிறபொழுது, 'தோள் கண்டார் தோளே கண்டார்'' என்று கம்பர் ஒரு வித்தைப் பின்பற்றுவார், பாரதிதாசன் போன்றவர்களோ, தின்பண்டம் கேட்கக் கேட்க குழந்தைகளுடைய கண்கள தாவித் தாவி இது அது இது என்று அலைகிற மாதிரி அந்த அழகைப் பார்ப்பதற்கு இந்தக் கண்கள், அங்கே, இங்கே எனறு அலைந்தன என்று சொலவார். இங்கே இந்தச் சமண முனிவர் இப்படிக் கூறுகிறார். இந்த முனிவர்களா இப்படியெல்லாம எழுதுகிறார்கள் என்று கூட சமயங்களிலே சந்தேகமா இருக்கும். என்னுடைய நண்பர்கள் கூட சில சமயங்களிலே குற்றச் சாட்டுக்களைச் சொல்லுவார்கள். ''நீங்கள் ரொம்ப அற்புதமாகவும் அதிகமாகவும் காதலை எழுதியிருக்கிறீர்கள்' எனறு இளங்கோவடிகளும் திருத்தக்க

தேவரும் சொல்லாத விஷயங்களையா நான் எழுதி விட்டேன்? அவர்களெல்லாம் எழுதுகிற பொழுது, இல் வாழ்க்கையிலே இருக்கின்ற ஒருவனுக்கு தந்திரமில்லையா என்று கூட நான் கேட்பது உண்டு.

இன்னொரு இடத்திலே அற்புதமான காட்சி ஒன்றை அமைத்துக்காட்டுகிறார் திருத்தக்கதேவர். ஊடல் ஒன்று ஏற்படுகிறது. ஊடல் எல்லோரிடத்திலும் ஏற்படும் ஊடல் ஏற்படவில்லை என்றால் அது வாழ்க்கையேயில்லை சொல் லுவார்கள் 'இவர்களுக்குள்ளே சண்டையே வந்ததில்லை' என்று அதிலென்ன சுவை இருக்கும்?சண்டைவரவேண்டும் அது சமாதானமாக முடியவும் வேண்டும். எப்போதுமே சண்டை என்பதல்ல. ரஷ்யா கூறும் "நாங்கள் போர் தொடுக்கிறோம். போரை நிறுத்துவதற்காக" என்று. ஊடல் இல்லை என்றால் வாழ்க்கையிலே ருசியே இல்லை. ருசியுள்ள சாப்பாடு மாதிரிதான் ஊடல் ஏற்படு கின்றது சீவகனும் என்னென்னமோ வித்தைகளைக்காட் டிப் பார்க்கிறான் ஒன்றும் பயன்படவில்லை. ஊடல் தணியவில்லை. காலிலேயே விழுந்து விடுகிறான், கடைசி யாக. எல்லாரையும் காலிலே விழவைக்கிறவர்களும் கடைசியிலே ஓரிடத்திய காலிலே விழுந்து விடுவார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிற மாதிரி காலிலே விழுந்து விடுகிறான். அப்பொழுதும் அவளுடைய ஊடல் தணிய வில்லை. ஊடல் தணியாமல் கோபத்திலே முறுக்குடன் இருக்கிறாள். அப்பொழுது கிளிகள் இரண்டு பேசிக் கொள்கின்றன. 'இவள் பெண்ணா?' ஒரு கிளி கேட்கிறது. பெண் கிளி கேட்கிறது. "இவள் மனசு என்ன கல்லா? இரும்பா? இவனை என்ன இப்படி பண்ணுகிறாளே?" என்று பெண் கிளி பேசுகிறது. ஆண் கிளி அதற்குப் பதில் சொல்கிறது. 'அடியே வாயை மூடு அறிவு இருக்கிறதா உனக்கு?"

"முற்றும் நீ சொல்லின் நங்கை
மூன்று நாள் அரிசி கேட்டாள்"

''நீ மறுபடியும் சத்தமாகச் சொன்னால், மூன்று நாள்சாப் பாடு போட மாட்டாள், ஜாக்கிரதை'' என்று ஆண் கிளி சொல்கிறது. பெண் கிளிக்கு இருக்கிற தைரியம்கூட ஆண் கிளிக்கு இல்லை. கிளிகளின் கதையில் அப்படித்தான. பெண கிளியைப் பார்த்து ஆண் கிளி சொல்லுகிறது. 'பொத்து உம் வாயை' என்று. அப்பொழுது பெண் கிளி மறுத்துப்பேசுகிறது. நீங்கள் பாரதிதாசன் படைப்புகளில் எல்லாம் பாருங்கள். ஆண்கள் தயங்கி நிற்பார்கள். பெண் கள் முன்னேறுவார்கள் அப்படித்தான் அவருடைய காவி யங்களில் எல்லாம் எழுதியிருக்கிறார்.

''உன் மகனின் நிலை என்ன? என்றாள் அன்னம்.' ஒரு பெண் கேட்கிறாள்: ''உன் மகன் என்ன ஆவான்? இப்படிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறானே?''அப் பொழுது அந்தக் கிழவி சொல்லுவாள் ''ஊர்மீட்கச் சாகட்டும்'' எனறு. 'திருடுவதை விட வேண்டும், அல்லது என்னைத் தீண்டுவதை விடவேண்டும்'' என்று சொல்லி கள்வனுடைய மனைவி, கள்வனிடத்திலே சொல்லுவாள். ''திருடுவதை விடு அல்லது தீண்டுவதை விடு''. 'முதலிலே என்னைத் திருடினாய் சந்தோஷம். இப்போ என்னத்தை யோ திருடிக் கொண்டு இருக்கிறாயே...'' என்று எடுத்துச் சொல்லுகின்ற போக்கை நாம் பார்க்கிறோம்.

பெண் கிளி இங்கே வீரமாகப் பேசுகிறது. ''என்னை வளர்த்த தாயேயானாலும் கூட நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். இவள் பெண்ணினம கெடப் பிறந்தவள் பெண்களுடைய சிறப்புகளை, கெடுப்பதற்குப் பிறந்திருக் கிறாள். இவள் வளர்த்தாள் என்று சொல்வது கூட எனக் குப்பழி.இவள் வளர்த்த நான் இனி வாழ வேண்டிய அவசி யமில்லை. இவள் ஊட்டி வளர்த்த அந்த உயிர் வேண்டிய தில்லை.' என்று சொல்லுகிறபொழுது ஒரு அழகான கற் பனையைச் சொல்லுகிறார்.பழத்தை கட்டி தொங்கவிட்ட

ருப்பார்கள் கூண்டுக்குள்ளே. அந்தப் பழத்தை தின்று தீர்த்ததற்குப் பிறகு அந்த பழத்தைக் கட்டிய கல் மட்டும் அப்படியே வட்டமாகக் குட்டி மணிக்குப் போட்ட தூக்கு கயிறு மாதிரி தொங்கிக் கொண்டிருக்கும். அந்தக்கிளி ''இவள் வளர்த்தாள் என்பது எனக்குப் பழி!'' என்று சொல்லி விட்டு அந்தக் கயிற்றிலே தலையை தூக்கிட்டு கொள்ளப் போகிறதாம் அற்புதமான கற்பனைக் காட்டு கிறார். இந்தப் பேச்சைக் கேட்டுவிட்டு இங்கே அந்த ஊடல் முடிந்தது. மறுபடியும் கூடல் தொடங்குகிறது என்று இந்த ஒரு துக்ககரமான காட்சியின் தொடக்கத் தைக் காட்டி, எல்லாவற்றையும் மகிழ்ச்சியாக மாற்றுகிற சீவக சிந்தாமணியுடைய இயல்பை என்னால் மறக்கவே முடியவில்லை. அந்தக் கற்பனையின் கவிதையின் இனிமை களை நான் மிக நேசித்தேன்.

இன்னொரு இடத்திலே ரொம்பவும் அழகாகச் சொல் லுவார். எப்போதும் சரஸ்வதியும், லட்சுமியும் ஒன்றாக உட்கார மாட்டார்கள், நம் நாட்டு தலைவர்கள் மாதிரி. ஒன்று உட்கார்ந்தால், புகைப்படம் எடுக்கிறபோதுதான். புகைப்படம் எடுத்ததும் எழுந்து போய் விடுவார்கள். நம் நாட்டு தலைவர்கள் மாதிரி இந்த சரஸ்வதியிருக்கிற இடத்தில் லட்சுமி உட்காருவதில்லை. லட்சுமி உட்காரு கிற இடத்தில் சரஸ்வதி உட்காருவதில்லை. இது திருத்தக் கதேவருக்கு தெரிகிறது. நாடு என்பது எப்படி இருக்க வேண்டும் என்றால் சரஸ்வதியும் லட்சுமியும் ஒன்றாக அமர்ந்திருக்கிற மாதிரி இருக்கவேண்டும் என்று அவர் சொல்லுகிறார். ''நா வீற்றிருந்த புலமா மகளொடு'' என்று சொல்லி அந்தப் பாடலைக் குறிப்பிடுகிறார். நாவிலே வீற்றிருக்கக்கூடிய சரஸ்வதியோடு திருமகளும் சேர்ந்து வீற்றிருக்கவேண்டும் என்று சொல்லுகிறார். ரொம்ப அற்புதமான கற்பனை!

கம்பரைப்பற்றி எனக்குப் பெரிய கர்வமே உண்டு. அவர் என்னுடைய மொழியிலே எழுதினார் என்கிற கர்வம் அந்த

கம்பனுக்கே இவர் வரப்பிரசாதம் மாதிரி வழங்கியிருக் கிறார். ஓரிடத்திலே கம்பன் சொன்னான். 'வானம் கை விளக்கு எடுத்துக் கொண்டு வந்தது' என்று புதுக் கவிதை மாதிரி இருக்கிறது. அந்த நிலாவைச் சொல்லுகிறார். 'வானம் கைவிளக்கை எடுத்துக் கொண்டு வத்தது.' அவ் வாறு யோசித்திருக்கிறானே என்று நான் மகிழ்ந்தேன் அப்புறம் இப்படித் திருப்பிப் பார்சதால், திருத்தக்கத் தேவரும் சொல்லியிருக்கிறார். ''கைவிளக்கு ஏந்தியாங்கு மதியம தோன்றும்'' என்று திருத்தக்கத்தேவர் சொல்லியி ருக்கிறார்.

சமணப் பெண்களைக் கற்பழிக்க வேண்டும் என்று நாயன்மார்களில் ஒருவர் பாடியிருக்கிறார். சாக்கியர் களை அப்படிச் செய்ய வேண்டும். சமணர்களை இப்படிச் செய்ய வேண்டும் என்று பாடியிருக்கிறார். யாரைப் பார்த்து பாடியிருக்கிறார்? திருத்தக்கத்தேவர் ஓர் இடத் திலே அழகாகச் சொல்லுகிறார். ''இந்த உழவாகள் எல் லாம் போகிறார்களாம் இவர்கள் வேலை என்ன என்று சொன்னால், களையினைப் பிடுங்கி எறிவது. நெல் வயல் களிலே ரோஜா மலர் பூத்தால்கூட அது களையாக மாறி விடுகிறது. அதைப் பிடுங்கித்தான் போடவேண்டும். களை எடுப்பதற்கு போகிறான் உழவன். அந்த நிலத்திலே குவளை மலர் இருக்கிறது. இந்தக் குவளை் மலரைப்போய் பறிக்கப் போகிறான். ''அடாடா இதைத் தொடக் கூடாது'' என்று நின்று விடுகிறான். காரணம் அது பெண் ணின் கண்போல் இருப்பதால், கண்ணு ஞாபகம் வந்தவுட னே. அந்தக் கணணை, தாமரைம் பூவைப் பறிக்கப்போகி றான் அதைப்பார்க்கிறபொழுது சட்டென்றுஎன்ன நினை வுக்கு வருகிறது. அந்தப் பெணணினுடைய முகம் முன்னே வந்துவிடுகிறது.ரொம்ப அருமையாக அந்த பாடலைஅவர் சொல்லுவதைப் பார்க்கலாம். தாமரைப்பூவைச் சொல்லு கிறபொழுது. தாமரைப்பூவைப் பார்க்கிறபொழுது, தன் னுடைய காதலியினுடைய முகம் நினைவிற்கு வர, அந்த முகம் என்று சொல்லி அதை அவர்கள் பறிக்கவில்லை

என் று சொல்லப்படுகிறது. இதே கற்பனையை பின்னாலே கம்பர் எடுத்துக்கொண்டு, இன்னும் அழகாக்குகிறார். அந்தப்பூவை பறிக்க முடியவில்லை; இந்தப் பூவைப் பறிக்க முடியவில்லை ஒன்றைப் பார்த்தால கைமாதிரி இருக்கிறது. ஒன்றைப் பார்த்தால் கண மாதிரி இருக்கிறது. ஒன் று முகம் மாதிரி இருக்கிறது. அதைத் தவிர களையையே பார்க்க முடியவில்லை. ஆதலாலே அவர்கள் ஒன்றைக் களைந்தார்கள். எதைக் களைந்தார்கள்? களை, களைதல் என்ற தங்கள் தொழிலைக் களைந்துவிட்டுப் போனார்கள். அப்படி அருமையான கற்பனைகளைக் கம்பனுக்குக் கூட வழங்கியிருக்கிற சிறப்பினை நாம் இங்கே பார்க்கிறோம்.

இன்னும் ஓர் அழகான காட்சி. அந்தக் காட்சியை சொல்ல வேண்டிய கடமை எனக்குண்டு. அநத நாட்டினுடைய சிறப்பைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது இரண்டு எருதுகள் நிற்கிற காட்சிகளை காட்டுகிறார். இரண்டு எருதுகள் ஒன்றாக நிற்கின்றன. இரண்டு எருதுகளும் சரியான ஜோடிப் பொருத்தம். ஒனறு மாமியார் மாதிரி இன்னொன்று மருமகள் மாதிரி.

மாமனும் மருமகனும்போல் என்று காமனும், சாமனும் கலந்த காட்சியைக் கூறுகிறார். அனபாய் இருக்கிறதுக்கு அம்மாவையும் பிள்ளையையும் சொல்லலாம் இல்லியா? அம்மா அன்புதானே, அன்புகளிலே உயர்ந்த அன்பு. சில சமயங்களிலே அன்பு, அது வந்து, பெற்ற அம்மாயில்லை, வந்த அம்மாவினுடைய அன்பு. இங்கே வந்து, தாயும் பிள்ளையும் என்று சொல்லவில்லை, ஏனென்றால், இரண்டு எருதும் ஆண் ஜாதி; பெண்ணல்ல. அதனாலே அப்படிச் சொல்லக்கூடாதாம். தாய் என்று சொல்லக்கூடாதாம். சரி அப்படி மாதிரின்னு சொல்லலாமல்லவா? அப்படி சொல்லக்கூடாதாம். ஏனென்றால் அப்பன்கிட்டேயிருந்து வந்தவன்தான் மகன், இந்த இரண்டு எருதும் அப்படியில்லையே, இது எங்கேயோ ஒரு சந்தையிலே வாங்கிக கொண்டு வந்தார்கள். அந்த எருதை

இன்னொரு சந்தையிலே வாங்கிக் கொண்டு வந்தார்கள். இரண்டையும் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறீர்கள் சரி அண்ணன் தம்பி என்று சொல்லலாமா? சொல்ல முடியாது. ஏனென்றால் ஒரே வயிற்றிலிருந்து வந்ததல்ல.இந்த இரண்டு எருதும் ஒரே வயிற்றிலிருந்து பிறக்கவில்லை. அப்படியும் சொல்ல முடியாது சரி ஆசிரியர் மாணவர் என்றாவது சொல்லலாமில்லையா! அது முன்னே பின்னே தொடர்பே இல்லாத எருதுகளாயிற்றே எப்படிச் சொல்வது? மாமனும், மாமியும் மாமனும மருமகனும், என்று சொல்லிச் செல்லலாம் சைவ இலக்கியததிலே நான் படித்தேன். ''அப்பனும் நீ, அம்மையும் நீ ஒப்பறிய மாமனும் மாமியும் நீ''என்று இறைவனைப் பாடுகிறார் இப்போது மாமன் அன்பு உயர்ந்த அன்பு என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியை இவர் சொல்லுகிறார். ''மாமனும் மருமகனும் போல'' என்று சொல்லி அவர் குறிப்பிடுகின்றார். அது மட்டுமல்ல, அதற்கு அன்பு உடைமையிலே இங்கே ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்துகிறார். அதற்கு அடுத்து வரும் வரியைப் பாருங்கள் 'காமனும் சாமனும் கலந்த காட்சியை' என்று சொல்கின்றார். காலன் நமக்கு தெரியும். அந்தக் கலையிலே அவன் பெரிய ஆள் அந்தக் காமனுக்கு அடுத்தாற்போல அதே மாதிரி ஒரே அச்சில் வார்தத மாதிரி இருக்கிறது. அந்த அளவுக்குச் சமமாக இருக்கிறது ஊனபதினாலே, அவருடைய தம்பியைச் சொல்லி காமனும் சாமனும் போல என்று சொலலி குறிப்பிடுகின்றார்.

அற்புதமான இந்தக் கற்பனைகளை எல்லாம் பார்க்கிற பொழுது, சீவக சிந்தாமணி தமிழுக்குக் கிடைத்த பெரிய நன்கொடை என்று நான் கருதுகிறேன். தமிழனுடைய சிறந்த சிறப்பாகிய விருத்தப்பாவை, தமிழுக்குக் கொடுத்த அற்புமான இலக்கியம் சீவக சிந்தாமணி இந்த அருமையான சமண இலக்கியங்களுடைய சிறப்பை சின்ன பேதங்களாலேநாம்மறந்துவிடலாகாதுஎன்றுகருதுகிறேன்

இலக்கியங்களை ஆய்வுக்காக இவ்வாறு படித்துப் பார்க்கலாமே தவிர இப்படிப் பிரித்துப்பார்ப்பது என்பது எனக்குப் பிடிக்கவில்லை. தமிழ் இலக்கியமாகத்தான் பார்க்க வேண்டும் சமண இலக்கியம், சைவ இலக்கியம், வைணவ இலக்கியம், பௌத்த இலக்கியம் என்று இருக்கிற இலக்கியத்தை இவ்வாறு பார்க்கலாகாது. இவையனைத்தும் தமிழ் இலக்கியம். இன்னும் கொஞ்சநாள் போனால், இது உலக இலக்கியம் என்று சொல்லவேண்டும். பற பற மேலே மேலே என்று பாரதி பாடினான்.

சமண இலக்கியங்களைப் பற்றி, எனக்கொரு பெரிய திருப்தி என்னவென்று சொன்னால் இஸ்லாமிய இலக்கியமும் செல்வாக்கோடு இருக்கின்றது. இஸ்லாமிய மார்க்கமும் செல்வாக்கோடு இருக்கின்றது. கிறிஸ்துவமும் செல்வாக்குடன் உள்ளது கிறிஸ்துவ இலக்கியங்களும் செல்வாக்கோடு உள்ளன. பௌத்த இலக்கியங்களில் ஒன்று இரண்டைத் தவிர மற்றவை அவ்வளவு செல்வாக்குடன் இல்லை. சமணம் இன்றைக்குப் பெயரளவில் தான் இருக்கிறது. செல்வாக்கோடும் இல்லை. ஆனால் சமண இலக்கியங்கள், சமண இலக்கணங்கள் செல்வாக்கோடு இருக்கின்றன இது தான் சமண இலக்கியத்தின் வெற்றி. அப்படிப் பட்ட சிறந்த சமண இலக்கியங்களைப் பாராட்டுகிறோம்.

# பௌத்த இலக்கியம்

**பேரா. வள்ளுவன் கிளாரன்ஸ்**

பௌத்த இலக்கியப் பணியை இரு பகுதிகளாகப் பிரித்திருக்கிறேன். பௌத்த சமயத்தினர் தமிழ் எழுத்து வளர்ச்சிக்கு எவ்வாறு உதவினார்கள். அவர்கள் தமிழின் இலக்கிய வளர்ச்சிக்கு, இலக்கிய செல்வமாகிய மணி மேகலை வாயிலாக எவ்வாறு உதவினார்கள் என்று இரு பகுதிகளாக வகுத்திருக்கிறேன்.

தமிழ் எழுத்து வரலாறு. அதன் வளர்ச்சி ஒரு சிக்கலான ஆய்வுக்குரிய பொருளாகும். ஆயினும் பௌத்தர்கள் எவ்வாறு உதவினார்கள் என்ற கோணத்திலிருந்து பார்க்கும்போது, ஓரளவு ஏற்றுக் கொள்ளத் தக்க மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் கருத்துச் சுருக்கத்தை இப்பொழுது நான் கூற விரும்புகின்றேன் அசோகனுடைய கல்வெட்டுகள் பிராமி எழுத்துக்களில் எழுதப் பெற்றவை என்று உங்களுக்குத் தெரியும். அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட மண்பாண்டங்களில்கூட, பிராமிய எழுத்துக்கள் எழுதப்பெற்றிருந்தன. இந்த பிராமிய எழுத்துக்கள் அக் காலத்திலே நிலவிய எழுத்துக்களோடு, இணைந்து வட்ட எழுத்துக்களாகப் புது மலர்ச்சி பெற்றன, பிற்காலத்திலே பௌத்தர்கள் பிராகிருத மொழியின் வாயிலாக மதத்தைப் பரப்பினார்கள் என்பது உங்களுக்குத் தெரியும், அம் மொழியில் 'க'வில் நான்கு ஒலிகளையுடைய 'க' கரங்களும், 'ட'வில் நான்கு 'ட' கரங்களும், 'ச'வில் இரு 'ச' கரங்களும் 'ஜ'வில் இரு 'ஜ' கரங்களும் இருந்தன. ஆகவே பிராகிருத மொழியின வாயிலாக வேதத்தை ஓதுவதற்காக அவர்கள் கிரந்த எழுத்துக்களையும் உருவாக்கினார்கள்.

நாளடைவில் சோழ நாட்டில் கிரந்த எழுத்திலிருந்து ஒருவகை தமிழ் எழுத்து உண்டாக்கப்பட்டு இப்போதுள்ள தமிழ் எழுத்து வழங்கப் பெற்றது. பிறகு சோழர்கள் பாண்டிய நாட்டை வென்ற பிறகு பத்தாவது நூற்றாண்டிலே அங்கும் கிரந்த தமிழ் எழுத்துக்களைப் புகுத்தினர். ஆகவே எழுத்து உருமலர்ச்சிக்கு, பௌத்தர்கள் தம் சமயத்தைப் பரப்பிய பிராமிய எழுத்துக்கள் எவ்வாறு உதவின என்பதை நாம் பார்க்கும்போது, பௌத்தவர்கள் தமிழ் எழுத்து வளர்ச்சிக்குச் செய்த பெரிய உதவியைக் காணமுடிகின்றது.

இன்னும் அவர்கள் பயன்படுத்திய பாலிச்சொற்களும் தமிழ்ச் சொற்களோடு இணைந்து விட்டன ஒரு சிலசொற்களை மட்டும் எடுத்துக் காட்டாக் கூற விரும்புகின்றேன். அவர்கள் எழுப்பிய தமது ஆலயங்களை 'விஹார்' என்று அழைத்தார்கள். அவற்றை 'விகாரம்' அல்லது 'விகாரை' என்று கூறுகிறோம் கட்டிய கோபுரங்களைத் தூபி, ஸ்தூபி என்று அழைத்தார்கள். அவற்றையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் அவர்களுடைய துறவிகளை பிக்குகள், பிட்சுகள் என்றும் பெண் துறவிகளை பிட்சுணிகள் என்றும் நாம் அழைக்கின்றோம். இன்னும் புத்தர். இல்லறவாசிகளுக்கு ஐந்து சீலங்களையும், உயர்ந்த இல்லற வாசிகளுக்கென்று எட்டு சீலங்களையும், துறவியருக்கென்று பத்து சீலங்களையும் வழங்கினார் என்பது வரலாற்றில் நாம் அறிகின்ற உண்மை. ஆகவே சீலம் என்ற சொல்லை நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். பள்ளிக்கூடம் என்பது கூட இந்த பௌத்தத் துறவியர் மடத்திலிருந்து வந்த சொல் என்று கூறப்படுகின்றது. பள்ளி என்பது, பௌத்த சமயத் துறவிகள் மடம். அதிலே முன்னால் இருக்கின்ற கூடத்தில் மாணவரைக் கூட்டி வைத்து அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது வழக்கம். ஆகவே பள்ளியின் கூடத்தில் அவர்கள் அமர்ந்ததனாலே அதைப்பள்ளிக்கூடம் என்றார்கள் தமிழ்ச் சொற்களுக்கும்

தமிழ் எழுத்து உருமலர்ச்சிக்கும் பௌத்தர்கள் எவ்வாறு உதவினார்கள் என்பதை சுருக்கமாக நாம் பார்த்தோம்.

இப்பொழுது இலக்கிய வளர்ச்சிக்கு பௌத்தர்கள் எத்தனை தொண்டு ஆற்றினார்கள் என்பதைக் காண வேண்டும், அவர்கள் யாத்த இலக்கிய நூல்களிலே ஒன்று தான் முழுமையாகக் கிடைத்துள்ளது. அதுவே "மணி மேகலை". அது 30 கதைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதை எழுதியவர் சாத்தனார்."சாஸ்தா" என்பது புத்தரு டைய பெயர்களில் ஒன்றாகும். ஆகவே அவர் சாத்தனார் என்று தம்மை அழைத்துக் கொண்டார். பல சாத்தனார் கள் இருந்ததன் காரணமாக அவர் சீத்தலை ஊரைச் சேர்ந்த சீத்தலைச் சாத்தனார் என்று பெயரை வைத்துக் கொண்டார் இவர் மணிமேகலையை எழுதியது மட்டு மல்லாமல், இவருடைய பாடல்கள் ஆங்காங்கே அகநானூ ரில் ஐந்தாகவும் புறநானூரில் ஒன்றாகவும் குறுந்தொகை யில் ஒன்றாகவும் நற்றிணையில் மூன்றாகவும் பரவிக் கிடக்கின்றன. மணிமேகலை என்பது பெரும்பாலும் ஆசிரியப் பாக்களாக வரும் இலக்கியக் களஞ்சியமாகும் இதுபோன்று நாம் இழந்துவிட்ட மற்றொரு செல்வம் "குண்டலகேசி" பௌத்தர்களுக்கும் சமணர்களுக்கும், சமய வாதங்கள் நிகழ்ந்து வந்த காலத்திலே தர்க்க ரீதி யாக, பௌத்தக் கருத்துக்களை எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது "குண்டலகேசி." நீண்ட சுருண்ட குண்ட லம் போன்ற கேசத்தை உடையவளானபடியினாலே குண்டலகேசி என்று பெயர் வழங்கினார்கள். மணி மேகலை தமிழன்னைக்கு அணிவிக்கும் மேகலையாக இடையில் ஒளிர்கின்றது. குண்டலகேசியானது தமிழன் னையின் காதுகளில் குண்டலமாக மிளிருகின்றது. சிலம்பையும், சிந்தாமணியையும் தமிழ் அன்னைக்கு அளித்த தமிழ்ப் பெரியார்களோடு, பௌத்த பெரி யார்களும் தமிழ் அன்னையை அணி செய்து வந்திருக்

கின்றார்கள். வீரசோழியத்தைப் பற்றி நாம் அறிவோம். வீரசோழியம் என்ற இலக்கண நூல் மறைந்து விட்ட போதிலும் கூட பழய தொல்காப்பியம் கூறிய ஐந்து இயல்புகளையும் சேர்த்து வடமொழியோடு விரவி ஒரு புதிய நூலாக உருவாக்கப்பட்டது. இதை எழுதியவர் புதத மித்திரர் என்பவர். இவர் வீரசோழியம் என று ஏன பெயரிட்டார் என்றால், கி.பி. 1063 லிருந்து கி.பி. 1070 ஆண்ட வீர ராஜேந்திரன் என்ற சோழ மன்னனின் வேண்டுகோளின்படி அதை எழுதினார். அதனால் வீர சோழியம் என்று அமைக்கப்படுகிறது. அதில் அவர் கூறு கின்றார்.

நாமே எழுத்து, சொல், நற்பொருள் யாப்பலங்கார மெனும்
பாமேவு பஞ்ச அதிகார மாம்பரப் பைச்சுருக்கி
தேமேவிய தொங்கல் தேர்வீர சோழன் திருப்பெயரால்
பூமேல் உரைப்பன் வட நூல் மரபும் புகன்று கொண்டே'

ஆகவே ஐந்து இலக்கணங்களையும் ஒன்றாகச் சேர்த்து, சுருககி வட நூல் மரபோடு கலந்து விரவி வழங்குகின்றார் எனத் தெரிகின்றது. இந்த வீரசோழியத்திற்கு உரை எழுதியவர் மற்றொரு பௌத்தர் பெருந்தேவனராவார். வீரசோழியத்தைவிட இதன் உரை இலக்கியச் செறிவு உடையதாகக் காணப்படுகிறது. இந்த உரைக்கோவையில் புத்தரைப்பற்றி மிக அழகிய பாடல்கள் இடம் பெறுகின் றன. யாப்புப் படலத்திலோ, எடுத்துக்காட்டாக, புத்த ரைப் பற்றிய மிகஅழகிய பாடல்களைப் பெருந் தேவனார் குறிப்பிட்டிருக்கின்றார். இது தவிர வேறு பல சிறு நூல்களையும் பௌத்தர்கள் இயற்றியிருக்கின் றனர். அவற்றின் ஆசிரியர்கள் யாவர்? காலம் எது என்பது நமக்குத் தெரியவில்லை. அக்காலத்திலே நிகழ்ந்த சமயப் போட்டி காரணமாக அக்காலச் செல்

வங்கள் எல்லாம் அழிந்து போய்விட்டன. ஒரு சில பௌத்தர்கள் குறிப்பில் காணப்படுகின்றன அல்லது நான்கு வரியாகவே கிடைத்துள்ளன ஒன்று சித்தாந்தத் தொகை. பௌத்த மதத்தில் சித்தாந்த நிலையைத் தொகுத்துக் கூறியிருக்கின்ற நூல் இது. மற்றொன்று திருப்பதிகம். புத்தர் பிரான் மீது தோத்திரப் பாடல்களாகப் பாடப்பெற்ற ஒரு தொகை நூல் இது. இன்னொன்று விம்பசாரக் கதை. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னால் 540 முதல் 490 வரை வாழ்ந்த பிம்பி சாரர் என்ற மன்னர் வரலாற்றைப் படித்திருப்பீர்கள். அவர் பௌத்த மதத்தைப் பரப்புவதில் துணையாக இருந்தவர். அவரைப் பற்றி ஒரு சிறு நூல் எழுதப்பட்டு உள்ளது.அதற்கு "பிம்பசாரக் கதை" என்று பெயர். இதில் நான்கு வரிகள் தாம் நமக்குக் கிடைத்துள்ளன. நற்றிணை 2ஆம் பாட்டிலே இளம் போதியார் என்ற பெயரைக் காண்கிறோம் போதி என்ற சொல்லே அவர் பௌத்தக் கவிஞர் என்பதைக் காட்டுகின்றது.

இனி, பௌத்தர்கள் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய அருந்தொண்டுகளை பார்ப்போம். முதலில் 'மணிமேகலை' எனும் எழில் கடலில் நீந்தி வருவோம். இதை எழுதியவர் சாத்தனார் 'இவர் தண்டமிழாசான் சாத்தனார்' என்று இளங்கோ அடிகளே புகழ்ந்த ஒரு சாத்தனார். இவர் தமிழ்க் கவிஞர் மட்டுமல்ல, ஒரு சிறந்த உளவியலார். கணிமகன் உள்ளத்திலே நுழைந்து அங்கே என்னென்ன காண முடியும் என்று காட்டக்கூடிய ஓர் உளவியலார். ஒரு பித்தனின் உள்ளத்திலே நுழைந்து அவனை ஒளிப்படம் எடுப்பதுபோல எடுத்துக்காட்டக் கூடிய ஓர் உளவியலார், அவர் கூறிய கருத்துக்களை இப்போது நாம் ஓரளவு பார்ப்போம்.

மணிமேகலை சுதமதியோடு, உவவனத்திற்குச் செல்லும்போது வீதியிலே கண்ட ஒரு காட்சியைக் காண்போம் அங்கே ஒரு சமண முனிவர் வருகின்றார். பிச்சைப்

பாத்திரம் ஏந்தி வருகின்றார். பிரம்பை எடுத்து வருகின் றார். 'உண்ணா நோன்போடு மண்ணாமேனியர்' குளிக் காத அழுக்கு உடல் உடையவர். ஆகவே பௌத்தர் எழுதும்போது ஓரளவு நக்கலோடு எழுதுகின்றார். அவ ரைப் பார்த்ததும் களிமகன் குளியாமல் வரும் ஒருவரைக் கண்டவுடனே கொஞ்சம் வேடிக்கைப் பண்ணுகிறார். 'வந்தீர் அடிகள் நும மலரடிகள் தொழுதேன்' என்கிறார். குடித்தவர் எப்பொழுதுமே தமது உணர்ச்சிகளை மிகுதிப் படுத்திப் பேசுவது வழக்கம். ஆகவே வணக்கத்தை அதிக மாகக் கூறி காலில் விழுந்து வணங்குவது போல் காட்டு கிறார்.

''உண்ணாநோன்போடு உயவல் யானையின்
மண்ணா மேனியன் வருவோன் தன்னை
வந்தீரடிகள் நும் மலரடி தொழுதேன்
எந்தம் அடிகள் எம்முரை கேண்மோ
அழுக்குடை யாக்கையில் புகுந்த நும்முயிர்
பழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தா
இம்மையும் மறுமையும் இறுதியில் இன்பமும்
தன்வயின தரூஉம், என் தலைமகன் உரைத்தது
கொலையும் உண்டோ, கொழுமடல் தெங்கின்
விளைபூந் தேறலின்? மெய்த்தவத் தீரே
உண்டு தெளிந்தில் யோகத்து உறுபயன்
கண்டால், எம்மையும் கையுதிர்க் கொணம் என
உண்ணா நோன்பி தன்னொடும் சூளுற்று
உண்மென இரக்குமோர் களிமகன்.''

களிமகன் கூறுகிறான், புழுக்கமான அறையில் அடை பட்டுக் கிடப்போரைப் போன்று, அழுக்கடைந்த உமது உடலில் உயிரானது சிறைப்பட்டுத் தவிக்கிறதே. உண்மை இன்பம் தரும் கள்ளைக் கொஞ்சம் குடித்துப் பாரும். நீர் பெற்ற யோக இன்பத்தை எல்லாம் விடச் சிறந்த இன்பம் இதில் கிடைக்கும் என்று கூறி, யோகிக்கு அந்த சமண

முனிவருக்கு அறை கூவல் விடுகிறான். கள்வெறியனின் பிதற்றிலிலும் அவனது உள்ளக் கிடக்கையை, நக்கல் கொக்கரிப்பை ஒளிப்படம் பிடித்துக் காட்டுவது போல் தெளிவாகத் தீட்டுகிறார் சாததனார்.

மற்றொரு காட்சி பித்தனின் பிதற்றல் காட்சி தெருவிலே எருக்க மாலை அணிந்து சிதைந்த கந்தைத் துணியுடன பண்பற்ற பேச்சுப் பேசி ஓடுகிறான் ஒரு பித்தன். பாவம் பைத்தியம்! மனக் கோட்ட முடைய கோட்டிக்காரன்! அவன் மனத்திலே தொடர்பற்ற, பொருத்தமற்ற ஒன்றிற்கொன்று முரணான உணர்ச்சி அலைகள் எழுந்து விழுந்து மறைகின்றன. நீர் மேல் குமிழி போன்று அவை திடீரெனக் கொப்பளிதது 'படீர்' என வெடித்து விடுகின்றன. பித்தனது இந்த நிலையற்ற மனநிலையை, உளவியல் மருத்துவர் போல் படம் பிடித்துக் காட்டுகிறார். சொல்லேர் உழவர் சாத்தனார். அவர் தெரிந்தெடுத்துப் பயன்படுத்தும் சொற்களே, ஒலிகளே, ஓசைகளே. அவற்றின் விகுதிகளே அளபெடைகளே, கிறுக்கன் எழுப்பும் ஒலிகளைக் காட்டி நம் உள்ளஙகளிலே அவன் மேல் இரக்கத்தை எழுப்பு கின்றன.

''அழூஉம் விழூஉம் அரற்றும் கூஉம்.
தொழூஉம் எழூஉம் சுழலலும் சுழலும்
ஓடலும் ஓடும் ஒரு சிறை ஒதுங்கி
நீடலும் நீடும் நிழலொடும் மறலும்
மையல் உற்ற மகன்''.

ஓடுகின்றவன காரணம் தெரியாத அச்சத்தினாய் வீதியோரத்திலே ஒதுங்குகிறான். அங்கே தனது நிழலைக் காண்கிறான். உடனே அச்சம் மறைந்து காரணமின்றிச் சினம் எழுகின்றது. ஆகவே, தன் நிழலைப் பகைவனாகக் கருதுகிறான். இவ்வாறு பித்தனின உள்ளத்தில் காரணமின்றி, தொடர்பின்றி, முன்பின் முரணாக எழும் உணர்ச்சிகளை எத்துணை உளவியல் திறத்தோடு காட்டுகிறார் சாத்தனார் எனபதைப் பாருங்கள்.

பௌத்தர் சாத்தனார் இயற்றிய 'மணிமேகலை' கவிதைக் களஞ்சியம்; இலக்கியச் சுரங்கம்; கருத்துச் சுரங்கம்; கற்பனைச் சுரங்கம். அந்திமாலைப் பொழுதை அழகிய சித்திரமாகத் தீட்டுகிறார் சீததலைச் சாத்தனார்.

''குணதிசை மருங்கின் நாள்முதிர் மதியமும்
குடதிசை மருங்கின் சென்றுவீழ் கதிரும்.''

ஒருபுறம் முழுமதி எழுந்து வருகின்றது. மறுபுறம் போரிலே போராடி அயர்ந்து விழும் வீரனைப் போல் செங்கதிரோன் களைத்து விழுகின்றான். ஒருபுறம் வெள்ளி நிற முழுமதியும், மறுபுறம் பொன்னிற ஞாயிறும் நில மடந்தையின் காதுகளில் ஒளிரும் வெள்ளித்தோடும் பொன் தோடும் போல் ஒளிர்கின்றனவாம்.

''வெள்ளிவெண் தோட்டொடு பொற்றோ டாக
எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்''

இவ்வாறு சில இயற்கைக் காட்சிகள் காதல் ஏக்கத்தையும் பொழுது போய் விட்டதே என்ற ஏக்கத்தால் பொங்கி எழும் காம உணர்ச்சியையும் காட்டுகின்றன.

''அன்னச்சேவல் அயர்ந்துவிளை யாடிய
தன்னறு பெடையைத் தாமரை யடக்க''

பெண்-அன்னமானது, தாமரை மீது காமமுற்று அதிலே போய் விளையாடிக் கொண்டிருக்கின்றது. இந்த விளையாடுகின்ற அன்னத்தை விட்டுவிடக் கூடாது என்பதாற்காக, தாமரையானது இதழ்களை மூடிக் குவித்துக் கொள்ளுகிறது. இதைப் பார்த்து ஆண் அன்னத்திற்கு உடனே சினம் எழுகின்றது. தனக்கே உரிய பெண்ணை எடுத்துக் கொண்டு போவதற்கு தாமரைக்கு உரிமையில்லை. ஆகவே அது பறந்து வந்து மலரைக் குத்திக் கிழித்துத் தூக்கிக் கொண்டு மேலே போய்விடுகின்றது. ஆகவே,

''பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடை கொண்டு
ஓங்கிருந் தெங்கின் உயர்மட லேற''

உயரே போய்விட்டு இறுமாப்போடு கொக்கரிக்கின் றது. ' நீயா என பெடையைப் பிடித்துக் கொணடாய்?'' நேரம் கடந்து விட்டது. ஆகவே மணிமேகலையும் சுதமதி யும் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கின்றார் கவிஞர். ஒருவருக்குரியதை மற்றவர்கள் எடுத்துக் கொள்கின்றார் கள். ஆகவே மணிமேகலைக்கு ஆபத்து வந்து விடக் கூடாதே என்ற கருத்தை மறைமுகமாகச் சுட்டிக்காட்டு கின்றார்.

இன்னொரு நிகழ்ச்சி, இங்கே சுதமதி நேரமாகிறது என்று சொல்லக் கூடிய ஓர் வாய்ப்பு ஏற்படுகின்றது.

''அன்றில் பேடை அரிக்குர லழைஇச்
சென்றுவீழ பொழுது சேவற் கிசைப்ப''

மெல்லிய ஓசை உடைய சொற்களாலே சொல்லுகின் றார். அன்பில் பேடையானது மெல்லிய குரல் எழுப்பி, 'நேரமாகிறது' என்கிறது ' சென்று வீழ்''-இங்கேயும் விழ்கின்றது எனும் கருத்தைத்தான் சொல்லுகின்றார். நேரமாகிறது என்பதைக் குறிப்பிடுவதற்கு.

அடுத்தது, இன்னொரு நல்ல காட்சி. மகள் வரவில்லை யே என்று மாதவி ஏங்கிக் கொண்டிருக்கிறாள், பசுக்கள் எல்லாம் போகத் தொடங்குகின்றன. கன்றுகள் மேய்ந்து கொணடு போகின்றன. போகும்போது கன்றுகள் நெருங் கிய உடனே பால் கரந்து கொட்டுகின்றது. வீட்டை நோக்கிப் பசுக்கள் வேகமாக ஓடுகினறன. போகும்போது துகள், தூசி பறக்கின்றது. பறக்கின்ற தூசியைப் பசுக்கள் பால் பொழிந்து அப்படியே அமுக்கி விடுகில்றன. கன்றின் ஏக்கத்தை தாயின் ஏக்கமாகவும் பால் சொரிவதை அன்பு சொரிவதாகவும் தூசி எழுவதைப் பசுக்கள், கன்றுகள் ஓடும் வேகத்தைக் குறிப்பிடுவதாகவும் அழகாகச் சொல்லு கின்றார்,

''குவளை மேய்ந்த குடக்கட் சேதா
முலைபொழி தீம்பால் எழுதுக ளவிப்பக்
கன்றுநினை குரல மன்றுவழிப் படர''

இன்னும் பலவித காட்சிகள். ஆங்காங்கே விளக்குகள் எரிகின்றன.

''அந்தி யந்தணர் செந்தீப் பேணப்
பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப
யாழோர் மருதத தின்னகரம் புளரக்
கோவலர் முல்லைக் குழன்மேற் கொள்ள''

இது போன்று பலபல எழிலோவியங்களை 'மணிமேகலை'யில் காணலாம், சுவைக்காகச். சில உவமைகளைப் பார்ப்போம்.

இந்த உவமைகள் எடுத்துக்கூற வேண்டிய உவமைகள் ஏனென்றால் இவை தமிழ் இலக்கியங்களில் இருக்கின்ற உவமைகள் மட்டுமல்ல, உலக இலக்கியங்களிலும் நாடகங்களிலும். காவிய நாடகங்களிலும் காணக்கூடிய உவமைகளைப் போல, ஏன் அவற்றையும் விஞ்சும் அளவிற்கு ஒப்பரியவை.

வரும் பொருளைக் கூறுகின்ற ஒரு நிகழ்ச்சி என்ன நிகழும் என்று எதிர்பார்க்கின்ற ஒரு நிகழ்ச்சி. மாதவியானவள் மணிமேகலைக்குத் தன் கணவன் இறந்த செய்தியைக் கூறுகின்றாள். மணிமேகலை மலர்தொடுத்துக் கொண்டு இருக்கின்றாள். கண்ணீர் விட்டு விடுகின்றாள். மலரானது நனைந்து விடுகின்றது. இது ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தி விடுகின்றது. ஏனென்றால் இது,

''மாமலர் நாற்றம் போல மணிமேகலைக்கு'' ஏது நிகழ்ச்சியாக இருக்கிறது.

மலரை நாம் பார்க்கவில்லை, வாசனை வீசுகிறது, பிறகு மலரைக் காண்கின்றோம். இது வரும் பொருள் நிகழ்ச்சி என்று கூறுகின்றார்.பௌத்த வழக்கிலே வினைப் பயன் வருதலை அறிவிக்கும் நிகழ்ச்சி. உடனே மணி மேகலை அழுகின்றாள். மாதவி தன் கையால் துடைக்கிறாள். மாதவியின் கரம் தாமரை அதாவது மணி மேகலையின முகம் தணமதி தாமரை தண்மதி சேர்ந்தது போல உள்ளது. இன்னும் இரண்டு உதாரணங்கள் மட்டும கொடுக்க நான் விரும்புகின்றேன். ஒன்று மிக அருமை யான ஓர் உவமை. அதாவது மணிபல்லவத்திற்குச் சென்று விடுகிறாள் மணிமேகலை. அங்கே புத்த பீடிகையைக் காண்கின்றாள். வலம் வருகின்றாள். தலைமேல் கைவைத்து வணங்குகின்றாள், பார்த்தவுடனே பக்தி மிகுதியால் சடாரென்று விழுந்து விடுகின்றாள். அவளது மெல்லிய இடை ஒடிந்து விழுவது போல் உள்ள காட்சியை இயற்கைக் காட்சியோடு மேலும் அழகுபடக் கூறுகின்றார சாத்தனார். அவளுடைய இடையானது. மின்ன லிடை போல் நுண்ணியதாக இருக்கின்றது. இந்த இடையானது திடீரென்று ஒடிந்து விடுகின்றது. இது எவ்வாறு இருக்கிறதென்றால் மேகததிலே மின்னல் தோன்றுகிறது. மின்னல் தோனறும பொழுது, இடி விழுகின்ற இடியோசை கேட்கின்றது. ஒளியும ஒலியும் ஒரே நேரத்தில கேட்கும் எனறால், மேகமானது தாழ்நததாக இருக்க வேண்டும் அப்படிப்பட்ட தாழ்ந்திருக்கிற ஒரு மேகத்திடமிருந்து மின்னலும் இடியும் ஒன்றாகத் தோன்றுப, அந்த நேரத்தில மின்னலுடனும் இடியுடனும் மேகமே ஒடிந்து விழும் போல் இருக்கிறது என்கிறார் சாத்தனார் அவர்கள் நனறாகப் பாருங்கள்.

'கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந்தென்ன
இறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு''

இறுநுசுப்பு-ஒடிந்து விழுவது போன்ற மின்னலிடை கீழே விழுந்து விடுகின்றாள் மின்னலிடை மின்னல் போல் வளைவது, இடை ஒடிந்து விழுவது போல் அவள்

விழுந்ததும்.கார்மேகம் போன்ற சுருங்கூந்தல் விரிந்து விழு கின்றது. மின்னலொடு மேகமும் விழுவது போல் இருக் கின்றது. இவ்வாறு அழகுற பல உவமைகளை நாம் எடுத் துக் கூற முடியும். இவைகளை எல்லாம் நாம் பார்க்கும் போது, சாத்தனார் கூறுகின்ற கருத்துக்களை எல்லாம் நாம் பார்க்கும்போது, தமிழ் உணர்ச்சியோடு இலக்கிய மலர்ச்சியோடு, இலக்கிய நயத்தோடு, இவ்வளவு அழகான கருத்துக்களை, தமிழர் அறிந்து போற்றும் வகையிலே, ஓவியங்களாக வடித்திருக்கிறார் என்பதைப் பார்க்கலாம், இந்த ''மணிமேகலை'' ஒன்றையே நாம் வாழ்க்கை முழு வதும் படித்துக் கொண்டு இருக்கலாம் என்று தோன்று கிறது. அங்கேயிருக்கின்ற கருத்துக்களை எல்லாம் சிந்தித் துப் பார்க்கப் பார்க்க சிந்திக்க அரிய கருத்துக்களாக இருக்கின்றன. அவை சிந்திப்பவர்க்குச் செந்தேன் முந்திப் பொழிவன: இன்பம் விளைப்பன.

நான்கு மதங்களையும சேர்ந்தவர்கள், ஒன்றாகச் சேர்ந்து தமிழை வளர்த்தபோது தமிழகததில் இருந்தார் கள். இப்பொழுதும் தமிழகத்தில் இருக்கிறார்கள். சமயத் தால் வேறுபட்டிருப்பினும், மொழியால் ஒன்றுபட்டு இருக்கின்றார்கள், மொழியால் ஒன்று பட்டிருப்பதன் காரணமாக, நாம் தமிழர் என்ற உணர்ச்சியோடு, ஒரே பண்பாடு உள்ளவர்கள் என்ற உணர்வோடு, ஒரே வர லாற்றைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வோடு, ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வோடு, ஒரே இலக்கியத்தையும் மொழிச் செல்வத்தையும் பகிர்ந்து கொள்ளுகிறவர்கள் என்ற உணர்வோடு நாம் ஒற்றுமை யாக இருப்போம். அனைவரும் ஒன்று சேர்ந்து பாரதியார் சொன்ன கருத்தைச் சிந்தித்துப் பார்ப்போம்.

''ஊமையர்களாய், செவிடர்களாய், குருடர்களாய் வாழ்கின்றோம். சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்.

# கிறிஸ்தவ இலக்கியம்

**டாக்டர் க ப. அறவாணன்**

''கிறிஸ்தவர் தம் எழுத்தாலும், உழைப்பாலும், தமிழ் பயனுற்றது தமிழர்களும் பயன பெற்றனர். மொழிக்கும இனத்திற்கும் பணியாற்றிய கிறிஸ்தவர்களை, ஐரோப்பிய கிறிஸ்தவப் பணி என்றும், தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர் பணி என்றும் பாகுபடுத்திக் கொள்ளலாம். இந்த இரண்டு பாகுபாடுகளும் ஐரோப்பிய கிறிஸ்தவர் தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஆற்றிய பணிகளுள் சில புதிய பார்வைகளை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

''ஒன்று, வெட்கத்தோடு தமிழர்கள் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை கி பி. ஒரு சில நூற்றாண்டு தொடங்கி தமிழர்களின் ஆட்சியை முடிவு செய்யும முதன்மை தமிழ் நாட்டிற்கு வெளியேதான் இருந்தது, இருந்தும் வருகிறது. வட இந்திய வரலாற்றில் எழுச்சிக்கும் தக்க மாற்றத்திற்கும் ஏற்றத்திற்கும் தமிழ் மண்ணின் முடி அரசுகள் ஆட்டுவிக்கப்பட்டன. வட இந்தியாவிலிருந்து தென்குலம் நோக்கி வைதிக, சமண, பௌத்த மதங்களுக்கு ஏற்ப, தமிழ் நாட்டின் அன்றைய ஜாதகம் மாறறி எழுதப்பட்டு வந்தது. வட இந்தியாவில் ஏற்பட்ட இஸ்லாமிய அரசின் பாதிப்பு, தமிழ் நாடடு அரசியலில் நிகழ்ந்தது. வடக்கே இருந்து இறக்குமதியாகிக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளுக்கு ஒரு திருப்பு முனையாக, ஐரோப்பியர் வரவும், கிறிஸ்தவமும் தமிழ்நாட்டின் மேற்கு எல்லையிலிருந்து வரத் தொடங்கின. இன்றும்கூட தமிழர்களுடைய குடுமி, ஐரோப்பியர் கையிலிருந்து வட இந்தியர் கைக்கு மாறியது. அங்வளவுதான்.

பண்டைய தமிழ்நாட்டுக்கும் இத்தாலியரின் ரோப நாட்டுக்கும் வணிகத் தொடர்புகள் இருந்தன. இதனை பிளினி, தாலமி ஆகியோர் குறிப்புகளும் பெரிபுளஸ் என்ற நூலும் காட்டுகின்றன. ஆனால் அராபியருடன் வணிகத் தொடர்பு மேற்கு இந்திய கடற்கரையுடன் பெருகிய பிறகு ரோமருடன் இருந்து வந்த வாணிபம் குறைந்தது.

செங்கடல், அரபிக்கடல் ஆகிய கடல்வழியும் பாரசீகம் வடமேற்கு இந்தியா, மேற்குக் கடற்கரை என்ற தரை வழியும் அராபியர்களால் கைப்பற்றப்பட்ட சூழ்நிலையில் ஐரோப்பியர் மனம் ஒடுங்கிப் போகாமல் புதிய வழி காணத் துடித்தனர். அதன் விளைவே ஆப்பிரிக்கக் கண்டத்தையே முற்றுமாகச் சுற்றி வரும் பத்தாயிரம் மைல்கள் கொண்ட புதியவழி, இந்த வழியைப் பின்பற்றிக் கள்ளிக் கோட்டையை வந்தடைந்தார் வாஸ்கோடகாமா (கி.பி. 1498 மே. 15) பத்தாயிரம் மைல் தொலைவு அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், மாதக் கணக்கான பயணம் இவற்றைச் சாதித்த வாஸ்கோடகாமாவிற்குக் கள்ளிக் கோட்டையில் பெரிய வரவேற்பு நிகழ்ந்தது. இந்த வரவேற்பை நிகழ்த்தியவர்கள் அந்த ஊர் நம்பூதிரிகள்.

கிட்டத்தட்ட இக்காலத்திற்குச் சற்று முன்னும் பின்னும் ஐரோப்பியருடைய காலனி கவர்வு ஆப்பிரிக்கக கண்டத்திலும் தென் அமெரிக்கக் கண்டத்திலும் வட அமெரிக்கக் கண்டத்திலும் ஆஸ்திரேலிய கண்டத்திலும் நிகழ்ந்தது. ஆசியக் கணடத்தை டச்சுக்காரரும், ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும், டேனிஷ்காரர்களும் பாகம் போட்டுக் கொண்டபோது ஆசியாவிலுள்ள ஒரு நாடு-ஒரே ஒரு நாடு ஐரோப்பிய மத வரவையும் வணிக உறவையும் வேண்டாம் என வெட்டி எறிந்தது. அயலார் நுழைவு கூடாது என்றே தடைவிதித்தது. அந்த நாடு ஜப்பான். கள்ளிக் கோட்டையை அடைந்த வாஸ்கோடகாமாவிற்கு வரவேற்பு நிகழ்த்திய உள்ளூர் நம்பூதிரி மக்களையும் ஒட்டகத்தின் தலை உள்ளே

வருவதை முன்னேயே தடுத்து நிறுத்திய ஜப்பானிய நிலையையும் இங்கே ஒப்பிட்டுப் பாருங்கள்.

வாஸ்கோடகாமா வரவிற்குப் பிறகே தென்னிந்தியாவில் ஐரோப்பிய வரவும் கிறிஸ்துவ மத உறவும் நுழைந்தன என்று சொல்ல முடியா விட்டாலும், தழைத்தன என்று சொல்லலாம். காரணம், தோமையர் வரவு, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்திருந்தது. போர்ச்சுகீசு டச்சுக்காரர், டேனிஷ்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோருடைய வரவு ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்தன. இவர்தம் வரவிற்கு முதல் நோக்கம் இந்தியாவுடன் வணிகம் புரிவதற்கே என்று வரலாற்று ஆசிரியர்கள் பலரும் தொடர்ந்து எழுதுகின்றனர். நாமும் நம்பி வருகின்றோம். இஃது ஒரு மேலோட்டமான முடிவே இவர்களுடைய வரவு வணிக வரவு, உறவு என்பதைவிட அரசியல் ஆதிக்க வரவு என்பதுதான் உண்மை. சான்று,

(1) முதலில் வந்திறங்கிய வாஸ்கோடகாமா ஒரு வணிகர் அல்லர். ஒரு சமயவாணரும் அல்லர். அவர் ஒரு கப்பல் படைத் தலைவர், அவரை இந்தியா நோக்கி அனுப்பி வைத்தவர் போர்ச்சுக்களில் உள்ள ஒரு வியாபாரி அல்லர்; போர்ச்சுக்கலின் மாமன்னர். இந்தியப் பயணத்துக்குரிய சாதனங்களையும், நிதியையும், கொடுத்துக் கேப்டன் வாஸ்கோடகாமாவை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார்.

(2) டச்சு ஆங்கிலக் கம்பெனிகள் வெறும் தனியார் வணிகக் கம்பெனியாக மட்டும் இயங்கவில்லை. அவை, ஹாலந்து, ஆங்கிலேய நாடுகளின் அரசர்களின் ஒப்புதல் பெற்று உரிமம் பெற்ற பின்னரே, கிட்டத்தட்ட அந்தநத அரசுகளின் முகவர்களாக இயங்கின. இதனால்தான் இந்தியாவில் வேறு வேறு கம்பெனிகளுக்கு இடையே நடந்த போர்களுக்கு பூசல்களும் அந்தந்தக் கம்பெனிகளுக்கு இடையே நடந்த

போராட்டங்களாக மட்டும் கருதப் படவில்லை. அந்தந்த நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட போர்களாக கருதப் பட்டன இந்தியக் களத்தில் போர்ச்சுக்கீசு, டச்சு ஆங்கிலே யர், பிரெஞ்சுக்காரர் ஆகியோர் இடையே நடந்த போர் கள் நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையே நடந்த☼ போர்களே ஆகும்.

*3.* பிரிட்டிஷ் பேரரசில் தொழில் புரட்சி வருவதற்கு முன்பு, இந்தியா பிரிட்டிசுக்கு இடையே நடந்த வணிகம் அளவில் மிகச் சிறியது. அபினும் வண்ணச் சாயப் பொருளும் பிரிட்டனுக்கு இறக்குமதி செய்யப்பட்டன.

*(19-1-'84)* சென்னை, பிரிட்டிசு கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் லண்டன் பல்கலைக்கழக துணை வேந்தரும் இந்திய இயல் வல்லுநருமான பேராசிரி யர் சர். சிரில் பிலிப்ஸ் "East India Company Came to rule not to trade" என்ற அடிப்படையில் உரை நிகழ்த்தியது (Hindu *20-1 '84*) மேற்கண்ட ஊகத்தை வழிப்படுத்தும். ☼☼எனவே ஐரோப்பியரின் ஆதி வரவுக்கு முதன்மைக் கார ணம் வாணிகம் மட்டுமேஎன்பது சரியன்று. நாடுபிடிக்கும்.

---

☼ இந்திய வரலாறு. சோவியத் வெளியீடு, முன்னேற் றப் பதிப்பகம், மாஸ்கோ, *1973*. II, V, II.

☼☼ The rationale of the British East India Company in india should be attributed to political reasons Prof. Sir, Cyril Philips said it was wrong to seek an economic rationale since at that time (1750-1850) Only indigo and opium were being exported from india and that base was very fragile.

Hindu 20-1-1984

அரசியல் நோக்கமே முதன்மைக் காரணம், அரசியலுள் அடங்கிவிட்ட பொருளியல் நோக்கம் அடுத்த முதன்மைக் காரணம்.

பேரரசைத் தோற்றுவித்து விரிவுபடுத்தும் முடிவாக இலட்சியத்துக்காகவே இன்ன பிற எல்லாம் செய்யப் பட்டன.

அரசியல் உள்நோக்குக் கொண்ட ஐரோப்பியர்களுக்கு மதம் பரப்புதல் ஏன் நோக்கமாக இருந்தது என்பது விளங்காத புதிரே இதற்கு ஒரு சில விடைகள் உள்ளன.

1. இந்தியாவில் முதன்முதல் போர்ச்சுகீசியரால் அறிமுகமானவர் கத்தோலிக்கக் கிறித்தவர். ரோமைத் தலைமையாகக் கொண்ட கத்தோலிக்கர்களுக்கு அரசன் வேறு. போப்பாண்டவர் வேறு அல்லர் மிக அண்மைக் காலம் வரை போப்பாண்டவரே அரசராக இருந்தார், அரசரே போப்பாக இருந்தார், எனவே ஆட்சி என்ற நாணயத்தின் ஒரு பக்கமாக அரசும் மறுபக்கமாக மதமும் இருந்தன. எனவே ஐரோப்பியரின் இந்திய நுழைவு அரசியல் நுழைவாகவும் இருந்தது. அதே சமயத்தில் மத நுழைவாகவும் இருந்தது:

2. ஐரோப்பிய வணிகர் ஏறத்தாழ பத்தாயிரம் கல் தாண்டி ஆறு மாதங்களுக்கும் மேலாக நெடுங்கடல் பயணம் செய்து இந்தியா வந்து சேர்ந்த நூற்றுக் கணக் கான, அடுத்து

---

● போப்பாண்டவரால், சற்றுப் பிற்காலத்திலேயே நேர் முகமாக, சமய வாணர்கள் அனுப்பப்பட்டனர். போப்பால் அனுப்பப்பட்டோருக்கும் போர்ச்சுகீசிய மன்னரால் அனுப்பப்பட்டவர்க்கும் பெரும் கருத்து வேறுபாடிருந்தது. போப்பாண்டவரால் அனுப்பப் பட்டதே நோபிலி போன்றோர், இந்தியப் பண் பாடு, மொழி போன்றவற்றை மிக உயர்வாக மதித்துப் போற்றினர்.

ஆயிரக் கணக்கான ஐரோப்பிய ஆண்கள் நீண்ட காலப் பிரிவில் இந்தியாவில் நிற்க நேரிட்டபோது சோதனை ஏற்பட்டது தவிர்க்க முடியாதது. எனவே ஐரோப்பிய ஆடவர்க்கும் இந்தியப் பெண்களுக்கும் உறவு ஏற்படுவது கட்டாயமாகிவிட்டது. ஐரோப்பியர் வந்து இறங்கிய ஆதி இடம் கேரளமாக இருந்தமையால் இந்த வாய்ப்பு மிக இலகுவாகிவிட்டது. தென்னிந்தியாவைப் பொறுத்த ளவு மிக முன்பே நம்பூதிரிகளை ஏற்று முதலில் ஆரிய மயமானவர்கள் மலையாளிகளே. அதனைப் போல வாஸ் கோடகாமா வரவிற்குப் பின்பு ஐரோப்பியரின் உறவை ஏற்று ஆதியிலேயே ஐரோப்பிய மயமானவர்கள் மலை யாளிகளே. ஐரோப்பிய ஆண் கேரளப்பெண் இவர்களால் உருவான கலப்பினம் ஒரு சிக்கலை அக்காலத்தில் தோற்று வித்திருத்தல் வேண்டும். இந்தியாவில் ஆதி கிறித்துவ மதத்தின் கூறுகள் கேரளாவில் இருப்பதற்கு இஃதொரு முதன்மைக் காரணம்.

3. அரசியல் அடிமைத் தனம் நிலையானதன்று. பொருளியல் அடிமைத்தனமும் நிலையானதன்று. ஆனால் மொழி அடிமைத்தனமும், மனப்பான்மை அடிமைத் தனமும் நிலையானவை, மற்ற இரண்டைவிட நீடிப்பவை எனவே அறிவாளிகளான ஐரோப்பியர் மொழி,பண்பாடு., மனப்பான்மை அடிமைத தனங்களைத் தொலை நோக் கோடு அறிமுகப் படுத்தி இருத்தல் வேண்டும்.

மொழியையும் இலக்கியத்தையும் பண்பாட்டையும் தமிழ் மண்ணைச் சார்ந்த இன்ன பிறவற்றையும் ஐரோப் பியர் கற்றுக் கொண்டதை விட ஐரோப்பியர் தம் மொழி இலக்கியம், பண்பாடு, நாகரிகம் இவற்றைத் தமிழரிடம் திணித்ததே மிகப் பெரிய அளவை உடையது.

தமிழ் மொழி, தமிழர் இனம்,தமிழ் இலக்கியம்என்பன தகுதியானவை, சிறந்தவை என்று ஒப்புக் கொண்ட ஐரோப் பியரின் எண்ணிக்கையை விட ஐரோப்பிய மொழி இனம்

(இலக்கியம்) ஆசியாவை சிறந்தவை என்று ஒப்புக் கொள்ளப்பட்ட தமிழரின் எண்ணிக்கையே மிகுதி. ஆக, தமிழர் பார்வையில் (வரவு) என்பதைவிட இழப்பே மிகுதி. திருவாசகம், திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியங்கள் ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன,

இந்தியாவிற்குச் சமயத் தொண்டு செய்யச் செல்லும் ஐரோப்பியர், அந்த மண்ணின் மத வாசனையை முன்பே புரிந்து கொண்டிருத்தல் வேண்டும் என்பது மொழி பெயர்ப்புக்கு முதன்மைக் காரணமாக இருந்தது. இதற்கென ஐரோப்பாவில் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு அங்கே இந்தியாவுக்கு வரத் தேர்ந்தெடுக்கப் பட்டோருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நன்னூல் போன்ற தமிழ் இலக்கணங்கள் மொழிபெயர்க்கப்பட்டன. சில மொழி ஆராய்ச்சிகள் நடந்தன. ஐரோப்பியர்களுக்கு இங்குள்ள மொழிகள், பெருந்தடைகளாக இருந்தன. அத்தடையின் வேகத்தைத் தவிர்த்து, ஐரோப்பியருக்கு உதவுவதற்கு இலக்கண மொழிபெயர்ப்புகள் துணையாக இருந்தன.

தமிழைக் கற்றவரை விடத் தமிழைக் கற்காதோரே மிக மிகுதி. தமிழை மதித்தவரை விடத் தமிழை மதிக்காதோரே மிக மிகுதி, தமிழரின் மதிப்பு அறிவிக்கப்பட்டதை விட ஐரோப்பியரின் மொழி மதிப்பே மிகுதியாக அறிவிக்கப்பட்டது. ஐரோப்பிய இன மதிப்பே மிகுதியாக அறிவிக்கப்பட்டது. தம் மொழியை, தம் இனத்தைத் தாழ்வாகப் பார்க்கும் போக்கு தமிழரிடையே தோன்றி நிலைபேறு அடைந்துவிட்டது மற்றொரு கொடுமையான விளைவு.

ஐரோப்பியக் கிறித்தவ வரவால், உறவால், தமிழ் நிலம் வளமே ஆகவில்லையா? வளமாகவில்லை என்று உரைப்பது தவறு. ஐரோப்பியம் இந்திய நிலத்தில் வளம் பெறுவதற்காக இரைக்கப்பட்ட ஐரோப்பியத் தொண்டு நீரால் தமிழ்க் கரையில் உரைநடைப் புல் தளிர்விட்டது.

சிறுகதைச் செடிகள் பயிராயின, அகராதிகள் அரும்பி விட்டன. நாவல் பூக்கள் பூத்தன, படிப்புக் காய்கள் காய்த்தன. ஆய்வுக் கனிகள் கனிந்தன.

ஐரோப்பியக் கிறித்தவர் பணியை எட்டாகப் பாகுபாடு செய்து கொள்ளலாம், அவையான;

1. மொழி பெயர்ப்பு
2. உரைக் குறிப்பு
3. தொகுப்பு முயற்சி
4. மொழி நூல்
5. அகராதி
6. சிறுகதை
7. உரைநடை
8. கவிதை

இப்பணிகளுள் பங்கேற்றோர்,

மொத்தம் 28 பேர்

இவர்களுள் இராபர்ட் ஆண்டர்சன், எல்லிஸ் சீரின், ஸ்டோக் வின்சன், என்ற ஐவரைத் தவிர ஏனைய 23 பேரும் அருள் தந்தையர் ஆவர்.

1. Anderson Robert,
2. Balde Rev,
3. Beschi Rev,
4. Beythan Rev,
5. Brethanpt Rev,
6. Caldwell, Rev
7. Drew Rev

8 Ellis F.w,
9 Fabricius Rev
10 Fry kholm Rev
11 Graul Rev
12 Green Dr,
13 Grakdler
14 Hoisington
15 Murdoch Rev
16 Nobili Rev
17 Percival Rev
18 Pope, Rev
19 Rhenius Rev
20 Rottler Rev
21 Suhwartz Rev
22 Sehultze Rev
23 Spaulding Rev
24 Stokes
25 Taylor Rev
26 Vinson
27 Winstern Rev
28 Ziogen balg Rev

இப்பணிகளுள் பங்கேற்றோர் 28 பேர், அவர்களுள் ஐந்து அதிகாரிகளும் அடங்குவர்.

கி.பி. 1498 தொடங்கி 1947 வரை, ஐரோப்பியர் இங்கே இருந்த ஆண்டுகள் 449 ஆண்டுகள். கிட்டத் தட்ட இந்த449ஆண்டுகளில் தமிழகம் வந்து போந்த அருளாளர் எண்ணிக்கை குறைந்தபட்சம் 2000 பேர்களாவது இருக்க

லாம். வந்து திரும்பிய ஐரோப்பிய அதிகாரிகளின் எண்ணிக்கை குறைந்தது 25,000 ஆவது இருக்கலாம். 2,000 சமய அருளாளர்களின் 25 பேர் ஆற்றிய பணி; 25,000 அதிகாரிகளில் ஐந்து பேர் ஆற்றிய பணி மகத்தானது.

அவர்கள் ஆற்றிய பணிகளுள் மிக மகத்தானதும் பெரிதானதும், மதப்பணியும், ஆட்சிப் பணியுமே. எனவே ஐரோப்பியக் கிருத்தவர் பணி என்பதை விட ஐரோப்பியச் சமய அருளாளர் தமிழ்ப்பணி என்பதே சரியான மதிப்பீடு, பாதிரிமார் பணி என்பதால் சமயச் சாயல் பெற்றே பெரும்பாலானவை செய்யப்பட்டன என்பதில் வியப்பு இருப்பதற்கு இல்லை.

தமிழ்மொழி, இலக்கியப் பணிக்கு அப்பால் பெரும் திருப்பத்தைச் சாதனையைத் தமிழரிடையே ஐரோப்பியக் கிறித்தவர் ஆற்றினமையைச் சுட்டிக் காட்டவேண்டும்.

வேத சமஸ்கிருதமே, தமிழுக்குத் தாய்மொழி என்று பொரும்பாலான தமிழர் கொண்டிருந்த மனப்பான்மையையும், நாகரிகம், பண்பாடு வேத ஆரியரைச் சார்ந்தே தமக்குக் கிடைத்தன என்ற தமிழர் நம்பிக்கையையும், இவற்றால் அவரிடம் ஏற்பட்டுக் கிட்டத்தட்ட நிலை பெற்றிருந்த தாழ்வுணர்ச்சியையும் அடியோடு தகர்த்த பெருமை டாக்டர் கால்டுவெல், எட்கர் தர்ஸ்டன், ஜான் மார்சல் ஆகியவர் தம் படைப்புகளுக்கு உண்டு. கால்டுவெலின் மொழியாய்வு, தமிழின் தனித்தன்மையை எடுத்துக் காட்டியது. தர்ஸ்டனின் தென்னிந்தியக் குல ஆய்வு, தமிழர், திராவிடர் தனிப் பண்பாட்டினர் என்று எடுத்துரைத்தது, ஜான் மார்சலின் சிந்து வெளி அகழ்வாய்வு, தமிழ்த் திராவிடர்க்குப் பண்டைய நாகரிகத்தில் இருந்த பங்கை எடுத்து மொழிந்தது. இவற்றில் தமிழர், தாழ்வுணர்வு நீங்கி, வாழ்வுணர்வு பெற வழியேற்பட்டது என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. தமிழ்மொழி வரலாற்றிலும், இன தமிழ் வரலாற்றிலும் தமிழ் நாட்டு

வரலாற்றிலும் மேற்கண்ட மூவரின் ஆய்வு ஒரு பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது.

தமிழ் வரலாற்றில், தமிழர் இன வரலாற்றில் தமிழ் நாட்டு வரலாற்றில், ஐரோப்பியக் கிறித்தவராகிய

கால்டுவெல்
தர்ஸ்டன்
மார்சல்

மூவருமே மகத்தான சாதனை புரிந்த மகத்தானவர்கள்!

கால்டுவெல் ஒப்பிலக்கணம் வெளிவருகிறவரை இந்திய மொழிகள் அனைத்தும் சமற்கிருத வழி பிறந்தவை என்ற கருத்தே மேலோங்கி இருந்தது. தமிழறிஞரே தமிழ் மொழி வடமொழிச் சார்பால்தான் வாழ்கிறது என்று நம்பினர். இலக்கணக் கொத்தை எழுதிய சுவாமிநாத தேசிகர் இக் கருத்தை வெளிப்படையாகவே எழுதியுள்ளார். இந்நிலையில், தமிழ் மற்ற சமஸ்கிருதத்தினின்று எப்படி வேறுபட்டு நிற்கிறது, ஏனைய திராவிட மொழிகளிலிருந்து தமிழ் எவ்வாறு தனித்து உயர்ந்து நிற்கிறது என்பதை நடுநிலையோடு தக்க சான்றுகள் காட்டி முதல் முதல் நிறுவிய பெருமை அறிஞர் கால்டுவெலையே சேரும். மொழி அளவில் உறக்கம் நீங்கி, விழிப்பைப் பெற அவரே மூலகாரணர். கால்டுவெலின் மொழியாராய்ச்சி, மொழித் துறையில் மட்டுமன்றி, தமிழர்தம் அரசியல், சமுதாய வரலாற்றில், பிற்காலத்தில் பெருமாற்றம் உருவாக ஒரு பெருங்காரணமா இருந்தது. பின்னே நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்ட திராவிட இயக்கங்களுக்கு உறுதுணை உரம், வீரிய விதை கால்டுவெலின் ஒப்பிலக்கணமே

ஆதி ஐரோப்பியர் குறிப்புகளில், இந்தியர் போதிய பண்பாடு நாகரிகம் வாய்க்கப் பெற்றிராத மக்கள் என்றே பலரால் குறிக்கப் பட்டனர். குறிப்பாகப் போர்ச்சுக்கீசியர் இந்தியரைப்

பெரிதாகக் கருதவில்லை. இந்தக் கருத்தை முதலாவதாக, முற்று முழுவதுமாக மாற்றியது. அருள் திரு. ஈராசு அடிகளார் தம் சிந்துவெளி மொழியாய்வாகும். ஜான் மார்சலின், சிந்துவெளிக் கண்டுபிடிப்பு, இந்திய வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனை, ஈராசு அடிகளார் தம் ஆய்வு பிறிதொரு திருப்புமுனையாகும். சிந்துவெளி எழுத்துகள், தமிழோடு தொடர்புடையன என்பதைப் பல்லாண்டு ஆராய்ச்சி வழி, ஈராசு அடிகள் தம் பெரும் ஆய்வு நூல்வழி காட்டினர். ஈராசு அடிகளாருக்குப் பின் சிந்துவெளி மொழியாய்வுகள் பல நிகழ்ந்தன. நிகழ்ந்து, கொண்டிருக்கின்றன. எனினும், சோவியத், பின்னிசு, அமெரிக்க அறிஞர்கள, பல வேறு ஆய்விற்குப் பின்னும் சிந்துவெளி மொழியை பழந்திராவிடத்தோடு (Proto-Dravidian) தொடர்புறுத்துகின்றனர். அணமையில் கீழ் வரிசையில் கண்டறியப்பட்ட பட எழுத்துகளும் சிந்து வெளி மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் இடையே இருந்த இணைப்பை உறுதி செய்கிறது.

அரசியல், சமயம், வணிகம் என்பன ஐரோப்பியக் கிறித்தவ வரவிற்குக் காரணங்கள் எனினும், சமயநெறி பரப்ப வந்த கிறித்தவச் சான்றோர்களால், தமிழ் மொழி பெற்றவை, தமிழ் இன வரலாறு பெற்றவை, தமிழ் நாட்டு வரலாறு பெற்றவை, தமிழர் கட்சிக்காகப் பெற்றவை எண்ணி அடங்கா; எண்ண அடங்கா. இந்தியா என்றால் சமஸ்கிருதந்தான் என்ற நிலைமை ஓரளவு மாற்றி, இந்தியா என்றால் அதன்மூல மொழி தமிழ், இந்திய மண்ணிற்கே உரிய தொன்மை மொழி தமிழ், இந்திய மண்ணின் தொல்பழம் மாந்தர் திராவிடர் என்று, இந்த மண்ணிலும், வெளிநாட்டு மண்ணிலும் ஓரளவு நிலைநாட்டியவர் ஐரோப்பியக் கிறித்தவர் சமயச் சான்றோரேஆவர்.

ஐரோப்பியரைப் பின்பற்றி இந்தியக் கிறித்தவர், தமிழுக்கும், தமிழருக்கும் ஆற்றிய தொண்டு குறிப்பிடத் தக்கது விரிவாக ஆராயும் அளவிற்குப் பெரிதானது, தனி நூலாக வளரும் அளவிற்கு அது விரிந்தது; பரந்தது.

# இஸ்லாமிய இலக்கியம்

சிலம்பொலி சு. செல்லப்பனார்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமயங்கள் பேரிடம் வகிக்கின்றன. சமயம் சார்ந்து தமிழில் எண்ணிறந்த நூல்களும் பல்வேறு இலக்கிய வடிவங்களும் தோன்றியுள்ளன. சைவம், வைணவம் சார்ந்த இலக்கியங்கள் பல, இந்திய மண்ணில் தோன்றிய சமணமும் பௌத்தமும் தமிழுக்கு இலக்கியப் பொலிவைச் சேர்த்துள்ளது. பிற நாட்டிலிருந்து தமிழ் மண்ணுக்கு வந்த இஸ்லாமும், கிறித்துவமும் தமிழிலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தொண்டுகள் ஆற்றியுள்ளன. கிறித்துவ சமயத்தைப் பரப்ப வந்த பாதிரிமார் தமிழ் கற்றுத் தமிழில் பல நூல்களைந் தந்துள்ளார், உரைநடை வளர்ச்சி, அகராதிக் கலை ஆகியவற்றுக்கு அவர்கள் வித்திட்டனர் எனலாம். அவர்கட்கு முன்னரே தமிழ்நாட்டில் இருந்த தமிழ் இஸ்லாமியர் தமிழிலுள்ள எல்லா வகை இலக்கியங்களிலும் நூற்றுக்கணக்கான நூல்கள் யாத்துள்ளனர். எனினும் அவை வெளியுலகத்திற்கு உரியவாறு அறிவிக்கப்படவில்லை. அண்மைக் காலமாக கடந்த சில ஆண்டுகளாகத் தான் இஸ்லாமியக் காப்பியங்களையும் பிற இலக்கியங்களையும் மக்களிடையே எடுத்துரைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதினாறாம் நூற்றாண்டுக்குச் சற்று முன்பும் பின்புமாக இஸ்லாமியக் காப்பியங்கள் பல தோன்றியுள்ளன. அவை பண்டைய தமிழ் இலக்கியங்களையொப்ப வளமும் வனப்பும் பெற்றன. பாடு பொருளின் சிறப்பு காரணமாக அவ்விலக்கியங்கள் உயர்ந்தனவாக அமைந்துள்ளது.

17ம் நூற்றாண்டில் தோன்றிய சீறாப்புராணம் ஒன்றை மட்டுமே மக்கள் அறிந்திருந்தனர். ஆயின் அண்மைக் கால முயற்சிகளில் பதினைத்துக்கு மேற்பட்ட அருங்காப்பி யங்கள் மக்கட்கு அறிமுகம் ஆகியுள்ளன. காப்பிய உலகு பெருமை கொள்ளத் தக்க வகையில் பெருங்காப்பியங்கட் குரிய இலக்கணவரையறைகளைத் தம்மகத்தே கொண்டு இக்காப்பியங்கள் இலங்குகின்றன.

இசுலாமியக் காப்பியங்களில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருப்பது சீறாப்புராணமே. பெருமானாரின் வாழ்க் கை வரலாறு கூறும் இக்காப்பியம் விலாதத்து, நுபுவத்து, ஹிஜ்றத்து என்னும் முப்பெரும் காண்டங்களைக் கொண்டு 5027 விருத்தப் பாக்களைக் கொண்டிருப்பது. சீறா, காப்பிய மரபு வழுவாத மா காவியமாகத் திகழ் கிறது. இஸ்லாமிய மார்க்க நெறிகளைப் படிப்போர் மனத்தில் பதியச் செய்கிறார் உமறுப்புலவர். ஒரே பாட லில் இஸ்லாமிய நெறிக்குரிய இலக்கணத்தை எடுத் துரைத்து விடுகிறார். ''இறைவன் ஒருவன்; முகம்மது அவனுடைய திருத்தூதர் என்னும் பொருளைத் தருவது கலிமா என்னும் இஸ்லாமிய மூல மந்திரச் சொல்; இவற் றை உறுதியாக நம்பி ஏற்பது ஈமான் எனும் நம்பிக்கை, நம்பி ஏற்றதை நடைமுறைப்படுத்துவது 'அமல்' எனப் படும். இந்நற்செயல்களில் தவறாமல் ஈடுபட்டு வருவது இஸ்லாமிய நெறியில் சேர்தல் ஆகும்.

ஒருத்தன் நாயகன்; அவற் குரிய தூதெனும்
அருத்தமே உரைகலிமா; அந் நிண்ணயப்
பொருத்தம் ஈமான்; நடை புனைதலாம் அமல்
திருத்தமே இவை-இஸ்லாமிற் சேர்தலே!

இஸ்லாமிய நெறியின் அடிப்படைத் தத்துவங்களை முழு மையாகவும் தெளிவாகவும் விளக்குகின்ற உமறுவின் இப் பாடலைச் சீறாப் புராணத்தின் முடிமணி எனலாம்.

காட்டில் வேடன் ஒருவனின் வலையில் பெண்மான் ஒன்று அகப்பட்டது. நபிகள் நாயகம் அம்மானைக் கண்டு வருத்தமுற்றார் அம்மான் நபிகளிடம் ''யா றசூல்! இம் மலைச் சாரலில் என் ஆண்மானுடன் அண்மையில் ஈன்ற கன்றுடனும் இனிது வாழ்ந்தேன். ஒரு வேங்கையின் கர்ச் சனையைக் கேட்டு நாங்கள் அஞ்சித் தறிகெட்டுச் சிதறி னோம்! நான் இவ்வேடன் வலைப்பட்டேன்! இவ்வேட னால் கொல்லப்படுவது குறித்து நான் வருந்தவில்லை. அவனுடைய பசிப்பிணியைத் தீர்க்கும் வகையில் மரண மடைவதில் புண்ணியமுண்டு. ஆனால் என் ஆண்மான் எங்கு ஓடித் திரிந்ததோ! நானின்றி அது புல்லும் நீரும் அருந்தாது மேலும் நான் கன்றையீன்று மூன்று நாட்களே யாயின நான் சென்று என் கன்றைக் கண்டு பாலூட்டி, என கலையையும், கன்றையும் இனத்தோடு சேர்ததுவிட்டு திரும்ப வந்து இந்த வேடனுக்கு இரை யாவேன்'' எனறது. இது கேட்ட முகம்மது மானை விடு விக்குமாறு வேடனிடம் கூற, அவனோ கல்லும் முள்ளும் தைக்கக் கடும்பாடுபட்ட இதனையா விடுவேன்! சென்ற மான் திரும்பி வருவதும் உண்டா என்றான். பெரு மானாரோ இம்மான் வராவிட்டால் நான் உனக்கு இரண்டு மான் தருவேன். அதுவரை நான் இம்மானுக்குப் பிணையாக நிற்பேன் என்றார். மானை வேடன் அவிழ்த்து விட்டான். அது ஓடோடிச் சென்று தன் கலை யைக் கண்டது; குட்டிக்கு வயிறாறப் பாலூட்டியபின் தான் வேடனிடம் செல்ல வேண்டியிருப்பதைக் கூறியது. தப்பிய நீ மீண்டும் போவதா கூடாது என இன மான்கள் தடுத்தன; எனக்காக ஒருவர் பிணை நிற்கிறார்; அவரை ஏமாற்றின் கொடிய நரகம்தான் எனக்குக் கிட்டும், எனச் சொல்லியது. அப்பெண்மான் திரும்பியபோது அதன் கன்றும் தானும் உடன் வருவதே முறையென வந்தது. நபிகள் நாயகம ''இதோ பார்! ஒன்றுக்கு இரண்டு மான் கள் உன்னிடம் வருவதை'' என்றார். வேடன் மனம் திருந்தி ஈமான் கொண்டு இசுலாத்திற் சேர்ந்தான் இதனை உமறு.

''தேனைக் குங்குமங்கள் சிந்திச் செழித்ததின் புயத்து
வள்ளல்
கானைக்குவ் விடத்திற் காட்டும் கமல மென் பதத்தைப்
போற்றித்
தானைக்கும் பதிக்கும் யானே தலைவனென் பவர்
போல் வேடன்
மானைக்கொண் டுவரப்போய் ஈமானைக் கொண்
டகத்திற் புக்கான்''

வேடன் ''மானைக் கொண்டு வரப் போய் ஈமானைக் கொண்டு வந்தான்'' என்பது நயம் நிறைந்தது. இவ்வாறு தொட்ட இடமெலாம் இனிக்கும் சிறப்புப் பெற்றது சீறாப் புராணம்.

சீறாப்புராணத்தில் பெருமானாரின் வாழ்க்கை வரலாறு முழுமை பெறவில்லை. உறனிக் கூட்டததார் படலத்தோடு உமறு சீறாவை முடித்துவிட்டார். பதி னெட்டாம் நூற்றாண்டினராகிய பனீ அகுமது மரைக் காயர் என்பவர் கின்ன சீறாவை 1829 விருத்தங்களில் பாடி பெருமானாரின் வாழ்க்கை வரலாற்றை முழுமை யாக்கினார். நாயகமவர்களின் ஆட்சிச் சிறப்பு இசுலாத் தை ஏற்றுக் கொள்ளுமாறு பல மன்னர்கட்கும் கடிதம் அனுப்புவது விதவைகளை மணத்தல் போன்ற வாழ்க்கை நிகழ்ச்சிகள் இக்காப்பியத்தில் விரிவாகப்பேசப்பட்டுள்ளன

சேகனாப் புலவர் என்றழைக்கப்படும் செய்கப்துல் காதிர் நயினார் என்பார் காப்பியம், புராணம் சிற்றிலக் கியங்கள் என பல்வேறு துறைகளில் தன் முத்திரையைப் பதித்துள்ளார். புதுக்குஷ்ஷாம், குதுபுநாயகம், திருமணி மாலை, திருக்காரணப் புராணம் எனும் பெரும்காப்பியங் களைப் படைத்துள்ளார். புதுக்குஷ்ஷாம் என்பது புதூஹ் ஷாம என்னும் இரு சொற்களின் இணைப்பாகும் புதூஹ்

என்பதற்கு வெற்றி என்பது பொருள். இன்றைய சிரியா நாட்டின் பண்டைய பெயர் ஷாம் என்பது. ஆதலின் புதுக் குஷ்ஷாம் என்பதற்கு ஷாம் நகர வெற்றி எனபது பொருளாம். ஷாம் நகர வெற்றி பற்றிய செய்திகள் காவியத்தில் விரிவாகப் பேசப்படுகின்றன. திருமணி மாலை இபுறாகீம் நபி அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளது. இபுறாகீம் உருவ வணக்கத்தை வெறுத்தவர். அவர் தந்தை ஆசறு உருவச் சிலைகள் செய்து விற்பவர். ஒரு நாள் தந்தை தன் மகனைச் சிலைகளை விற்றுவர அனுப்பினார். இபுறாகீம் "உங்கட்கு எவ்விதப் பயனோ இழப்போ தரமுடியாத இந்தச் சிலைகளை வாங்குவாருண்டோ" எனக் கூறிச் சென்றார். ஒருநாள் நகரிலுள்ளோர் அனைவரும் ஒரு விழாவைக் கொண்டாட நகருக்கு வெளியில் குழுமினர். கோயிற் பூசாரிகளும் களியாட்டம் காணச் சென்றுவிட்டனர். விழாவிற் கலந்து கொள்ளாது ஊரிலேயே தங்கியிருந்த இபுறாஹீம் கோயிலினுட் சென்றார். அங்கு நடுவே பல்வகை மணிகளாலான பெரிய சிலையும், சுற்றிலும் இரும்பு, பித்தளை, கல் முதலியவற்றிலான சிறு சிறு சிலைகளும் இருந்தன. இபுறாஹீம் கோடாரியினால் சிறு சிலைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து கோடாரியைப் பெரிய சிலையில் மாட்டிவிட்டு வெளியேறினார். திரும்பி வந்து பார்தத நகர மக்கள் இபுறாஹீமதான் இதைச் செய்திருப்பார் என அவரைக் கேட்க, அவரோ "எனக்கொன்றும் தெரியாது; நிறகும் பெரிய சிலையைக் கேளுங்கள்; அது சொல்லும்" என்றார். "இது பேசாது என்று தெரிந்தும் நீ எங்களைக் கேலி செய்யலாமா" என்றனர். இபுறாஹீமோ "உங்களுக்கு யாதொரு நன்மையோ தீமையோ செய்ய ஆற்றலற்ற இவற்றை ஏன் வணங்குகிறீர்" என்றார். இது கேட்ட நபுறூது மன்னன் இப்றாஹீமை நெருப்பில் எரியக் கட்டளையிட்டான். தீமூட்டி இபுறாஹீமை ஓர் இயந்திரத்தில் பிணைத்து நெருப்பினுள் தள்ளினார்கள் "வெந்தழலே இபுறாஹீமுக்கு இதமளிக்கும் வண்ணம் நீ குளிர்ந்துவிடு" என

இறைகட்டளை பிறந்தது (திருக்குர்ஆன் 21:69) செந்கழல் அவருக்கோ தாமரை பூத்த குள நீராகக் குளிர்ந்தது. நமுறூது மன்னன் இப்றாஹீமை நாடு கடத்தினான் அவருக்கு இஸ்மாயீல் என்றொரு குழந்தை இஸ்மாயீல் பச்சிளம் குழந்தையாக இருந்தபோது இப்றாஹீம் தம் குடும்பத்துடன் மக்காவில் குடியேறினார். ஒருநாள் குழந்தை இஸ்மாயீல் தண்ணீர் வேட்கையால் தவித்த போது தாயார் நீர் தேடி அலைந்து திரிந்தார் அது வேளை வானவர் தலைவர் ஜிபுறயீல் குழந்தையிருநத இடத்தில் குதிகாலால் மிதிக்க அங்கு ஒரு பள்ளமுண்டாகி இனிய நீர் குமிழியிட்டது. தண்ணீர் தேடிப் பயனின்றித் திரும்பிய தாய் குழந்தையருகில் நீரைக் கண்டதும் அது வற்றிவிடக் கூடாதே ஜம் ஜம் (நில்நில்) எனக் கூறியவராய் நீர் எடுத்துக் குழந்தைக்கு ஊட்டினார் அன்று பெருக் கெடுத்த நீர் இன்றுவரை வற்றாது 'ஜம்ஜம்' கிணறு என்னும் பெயருடன் விளங்கி வருகிறது. இஸ்மாயீலுக்குப் பன்னிரண்டு வயதானபோது அவரைப் பலியிடுமாறு இறைவன் இப்றாஹீம் கனவில்அறிவித்தான் இப்றாஹீம் கத்தியும் கயிறும் எடுத்துக் கொண்டு மகனைப் பலியிட அழைத்துச் சென்றார் வழியில் மகனிடம் அவரைப் பலி யிடவிருப்பதைச் சொன்னார் மகனோ ''தந்தையே அல்லாஹ்வின் கட்டளைப்படி செய்யுங்கள்'' என்றார் அறுக்க வாய்ப்பாயிருக்கும் பொருட்டுக் கயிற்றால் பிணிக்குமாறும் அறுக்கும்போது மனம் மாறிவிடாதிருப் பதற்காகத் தம்மைக் குப்புறப் போட்டு அறுக்குமாறும் இஸ்மாயீல் கூறினார் பிறகோ அறுப்பதைத் தான் காண வேண்டும் என்பதால் கயிற்றை அவிழ்க்குமாறும் கத்தி யைக் கழுத்தில் அழுத்துமாறும் கேட்டுக் கொண்டார் இப்றாஹீமும் அவ்வாறே கத்தியை வைத்து அழுத்தினார் கத்தி மழுங்கியதே தவிரக் கழுத்து அறுபடவில்லை!

தந்தை வெட்ட இருப்பதைச் சொன்னபோது இஸ் மாயீல் தந்தை சொல் போற்றுவதே கடன் என இசை கிறார் என்பதை,

ஆக்கம் நீங்கினும் அகவின்பம் நீங்கினும் ஆக்கம்
ஊக்கம் நீங்கினும் உறுமுறை நீங்கினும் உயிரின்
வீக்கம் நீங்கினும் நீங்கும் நண்புடன் வியந்தளித்த
தேக்கம் நீங்கிலாது எந்தைசொல் போற்றுதல்
சிறப்பே''

எனத் திருமணி மாலை செய்யுள் கூறுகிறது.

சேகனாப் புலவரின் மற்றொரு காவியம் குத்புநாயகம் முகியித்தீன் ஆண்டகை அப்துல் காதிர் ஜிலானி அவர்கள் மீது பாடப்பட்டது. நபிகள் நாயகம் அவர்களுடைய காலத்திற்குப்பின் தீனுல் இஸ்லாம் மார்க்கத்தைப் பேர பாயங்களிலிருந்து காத்துப் புத்துயிரூட்டியவர் அப்துல் காதிர் ஜிலானி ஆவார். இவர் பாரசீக நாட்டு ஜீலான் நகருக்கு அண்மையில் பிறந்தவர். கல்வியில் ஆர்வம் கொண்ட இவர் தம் 18ஆவது வயதில் கல்வி கற்கப் பாக்தாத் நகருக்குப் புறப்பட்டார். அவருடைய தாயார் நாற்பது பொற்காசுகளை அவருடைய சட்டையின் உட் புறம் வைத்துத் தைத்து வழியனுப்புகையில் ''எக்காலத் தும் எந்நிலையிலும் எக்காரணம் கொண்டும் பொய் பேசக்கூடாது'' எனச் சொல்லியனுப்பினார். வழியில் கள் வர்கள் அவரைப் பிடித்தனர். சட்டையின் மேல் புற மிருந்த பையில் ஒன்றும் இல்லாததால் 'உன்னிடம் எது வும் இல்லையா?' என்று கேட்டபோது, தாம் சொற்படி உண்மையே பேச வேண்டுமென்பதால் திருடர்கள் கவர்ந்து கொள்வரே என்ற எண்ணமின்றி, தன் சட்டை யின் உட்புறம் 40 பொற்காசுகள் தைக்கப்பட்டிருப்பதைக் கூறினார். அவரது நேர்மையைக் கண்ட கொள்ளைக் கூட்டத்தினர் திருந்தி நல்வழிப்பட்டனர் என்பது வரலாறு.

எத்தலத் தாயினும் எவர்கள் பாலினும்
எத்தொழி லிடத்தினும் எனைவந் தெய்தினும்
உய்த்திட துண்மை யாலுரைத்தியென் றருள்
பொய்த்திடாத் தாயார் சொலறுதி பூண்டதே

என ஆண்டகை பேசிய திறத்தைக் குத்பு நாயகம் குறிப்பிடுகிறது.

ஆலிப் புலவர் இயற்றிய மிஃராஜ் மாலை முதல் இஸ்லாமியக் காப்பியம் என்பர். இது சரியன்று. ஆயிரம் மசலாவே முதல் காப்பியமாக உள்ளது நபிகள் நாயகத்தின் விண்ணேற்றத்தை மிஃறாஜ் மாலை விவரிக்கிறது. நாட்டு வளத்தை ஆலிப் புலவர் பாடுத் திறம் அருமை வாய்ந்தது.

*மாங்கனியின் செழுந்தேன் தன்மடைச்சாடி*
*வயல்கரும்பில் வந்து பாய*
*பூங்கரும்பின் கணுக்கள்தொறும் புதுத்தரளம்*
*தனைஈன்று புளகித் தேகி*
*தேங்கதலியுடன் இகலிற் செவ்விமுகம் புதைத்து*
*நிற்கும் செந்நெல் சீடர்*
*பாங்கருடன் குருபாதம் பணிவது போல்*
*தலைசாய்த்துப் பணியும் தானே!*

நெல் தலை சாய்ப்பதை திருத்தக்க தேவர்,

*சொல்வரும் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்*
*மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்*
*செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்*
*கல்விசேர் மாந்தரின இறைஞ்சிக் காய்த்தவே!*

என்பார்! நாயக வெண்பா எழுதிய அப்துல் மஜீத் அவர்கள்,

*நல்லோர் பெரியோரை நாடி எதிர் கண்டால்*
*எல்லையில் பேரன்புபூண்டு ஏற்றசலாம் சொல்லி*
*தலைசாய்த்து மெய்க்கண் தழுவுதல் போல் செந்நெல்*
*குலைசாய்த்த செய்க்கண் குளிர்ந்து*

என்பார். ஆலிப் புலவரோ செந்நெல் சாய்ந்தது 'குருபாதம் பணியும் சீடன்போல்' இருந்தது என்கிறார். பெருங்கதை

ஆசிரியர் கொங்குவேள் மதம் பிடித்த யானை உதயணன் யாழுக்குப் பணிந்து தணிந்து நின்றதை,

ஆணை ஆசாற்கு அடியுறை செய்யும்
மாணி போல மதகளிறு படிய

என்பார்.

வண்ணக் களஞ்சியப் புலவர் இராஜ நாயகம் எனும் காவியத்தைப் படைத்துள்ளார். இது சுலைமான் நபியின் வரலாறு கூறுகிறது.வளம் மிக்க பாக்களைக் கொண்டது. வண்ணக் களஞ்சியப் புலவர் நாட்டு வளப்பம் பாடுவது நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாய் உள்ளது. ஷாம் நாட்டில்,

தானமேற்பவர்கள் இலையெனச் சலிக்கும்
சலிப்பின்றி மறுசலிப் பிலையே!
மானவேல் விழியார் மருங்குநூ லென வாங்
குறைவின்றி மறுகுறை விலையே!
ஆனதாங் கொடைமங் கலவெற்றிக் கொடியர்
அன்றியே கொடியர்வே றிலையே!
ஈனவெம் பவநிந்தனை யின்றி இகழ்வாய்
இயற்றுநிந் தனைபிறி திலையே.

இப்புலவர் தீன் விளக்கம் எனும் மற்றொரு காப்பியத்தையும் எழுதியுள்ளார் தீன் நெறியாகிய இஸ்லாம் தமிழகத்தில் விளங்கத் தொடங்கிய நிலையை உணர்த்தும் விளக்கக் காவியமே இது!

குலாம் காதிறு நாவலர் நாகூர்ப் புராணம், ஆரிபு நாயகம் என்னும் இரு அருமையான காப்பியங்களைப் பாடியுள்ளார்.

கனகவிராயர் இயற்றிய கனகாபிஷேக மாலை ஒரு வீரகாவியம்! பெருமானார் நாயகமலர்களின் அருமைத் திருப்பெயரர் 'கர்பலா' களம் கண்ட வீர ஹுஸைன் அவர்களின் தீர வரலாற்றைப் பேசுவது இக்காவியம்.

புயவலி கல்வி மேன்மை புகழ்மிகு புலமை செல்வம்
இயல்மறைப் பொருளோர் வுண்டாம் எழில்பெறு சுவனமெல்லாம்
கயவரினுய ரெசீது கணப்படை மடியத் தாக்கும்
வயவரி அலி உசைனின் வாள்வலி கூறுவோர்க்கே!

அண்ணல் ஹுஸைனின் வாள்வலியைக் கூறுவோர்க்கு எல்லாம் கிடைக்கும் என்கிறார்.

சேகனாப் புலவரின் மாணவரான ஐதுறூசு நயினார் என்பார் முகியித்தீன் ஆண்டகையைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு நவமணிமாலை எனும் காவியத்தை இயற்றியுள்ளார். இவ்வாறாக ஐந்து நூற்றாண்டுக் காலத்தில் அரிய காப்பியங்கள் பலவற்றை இஸ்லாமியப் புலவர்கள் பாடியளித்துள்ளார்கள்.

பண்டைய தமிழ் இலக்கியங்கள் இயற்றப்பட்ட காலம் குறித்து கருத்து மாறுபாடுகள் நிலவுகின்றன. ஆனால் இஸ்லாமியப் புலவர்கள் தாம் பாடிய காப்பியங்கள் எப்போது எங்கு பாடப்பட்டன என்றுரைத்திருப்பதால் கால. மாறுபாட்டுக்கு வழியில்லை. வண்ணக் களஞ்சியப் புலவர்,

திருநபி கிசறத் ஆயிரத் திருநூற்று
இருபத்து முன்றின் முஹ்ரத்
திங்களில் பதினா லாம்தேதி யதனில்
சென்றிடும் அட்சய வருடம்
வருடுபைங் கூனிமாத்தையியற் பனிரண்
டாம் தின மாகிய சோம

வாரம்உத் திரமென்று இரண்டுமே கலந்து
வரப்படு சித்தயோ கத்தின்
நரர்முதல் உயிர்கள் எவையையும் புரந்த
நபிபுல்லா சுலையுமான் வரலு
நானில முழுவதும் மகிழ்வுற இராஜ
நாயக மெனப் பெயர் விளங்க
விரவிய படலம் நாற்பத தாறு, இரண்டா
யிரத்திரு நூறறுநாற் பானுள்
விருத்தம தாகப் புகன றனன் மதுரை
மீசல்வண ணக்களஞ் சியமே!

ஹிஜ்ரத் 1223 முஹர்ரம் 14ஆம் நாள் அட்சய வருடம் பங்குனி மாதம் திங்கட்கிழமை உத்திர நட்சத்திரம் கூடிய சித்தயோகத்தில் சுலையுமான் வரலாறு கூறும் இராஜ நாயகத்தை 46 படலம் 2240 விருத்தங்களாக மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர் பாடினார்.

வண்ணப் பரிமளப் புலவர் தம் ஆயிரம் மசலாவில்.

இயலிறசூல் திருவடி சாய்ந்த தொள்ளா
யிரத்துடன் என்ப தாண்டின்
முயலும்ப்ர மாதூத வருடத்தில் முழங்குபுளி
யங்குளத்து முல்லாமிய்யா சயிது மகுதூம்
வயதுமுப் பத்தொன்பான் தனனில் இந்நூல்
உரைத்திட முத்தமிழாற் போற்றிப்
பயிலும் ஐயேழ் எனும்வாலம் பிராயம்! தன்னில்
பரிந்துவண்ணப் பரிமளம்சொற் பகர்ந்தவாறே!

'ப்ரமாத தூத ஆண்டு பிரமாதூத ஆண்டு முல்லா மிய்யா சயிது மகுதூம் தம் முப்பத்தொன்பதாம் வயதில் கூற, வண்ணப் பரிமளம் தம் 35ஆம் வயதில் எழுதினார்.

என்றும் பாடியிருக்கக் காண்கிறோம். இவற்றால் நூல் எழுந்த காலம் எழுதிய ஆசிரியர், எழுதத் துணை புரிந்தோர் போன்ற இன்றியமையாச் செய்திகளை ஐயத்திற்கிடமின்றி அறிய வாய்ப்பேற்படுகிறது.

அனைத்துக் காப்பியங்களிலும் இஸ்லாமியப் புலவர்கள் கடவுள் வாழ்த்துப் பகுதியை ஒரே முறையில் பாடியுள்ளனர். முதலில் அல்லாஹ்வை வாழ்த்தி, பின்னர் நபிகள் நாயகத்தை வாழ்த்துகின்றனர். பிறகு முறுசலீன்களா; நபிகள் நாயகம் முகம்மதுவுக்கு முன்னர் இவ்வுலகில் 1,24,000 நபிமார் தோன்றியுள்ளனர். அடுத்து அவர்கள் பாராட்டப்படுகின்றனர்.

ஆராய்வின் மிக்கபேர் நூறாயிரத்துநா
லாறாயிரத்து நபிமார்
மாராயம் மிக்கபேர் வாயார வைத்தபேர்
வாழ்வார் சுவர்க்க பதியே

என உமறுவும்.

நாற்றிசையும் தீன்பயிரை வளர்த்தருள உதித்த
சின்ன நபிமார் என்றே
ஏற்றும் இலக்கத்தின் இருபத்திநாலாயிரவர்

என வண்ணக் களஞ்சியப் புலவரும் ஏத்திப் போற்றியுள்ளனர். அடுத்த நான்கு கலீபாக்கள்-அபூபக்கர், உமறு, உதுமான், அலிமார்-பாராட்டப்படுவர். அபூபக்கரின் ஆட்சிச் சிறப்பும், உமறுவின் தியாக உணர்வும், உதுமான் திருக்குர்ஆனைப் பதிப்பித்த செயலும், அலியார் 'துல்துல்' எனும் குதிரைமீது அமர்ந்து செல்வதும் முதன்மைப் படுத்திப் பாடல்கள் தென்படுகின்றன. அலியார் குதிரை மீது செல்வதை உமறு.

படிகிடு கிடெனநாக முடிநெறு நெறெனவாரி
படுதிரை அளற தாகவே
வடவரை அசையவான முகடுடை படவறாத
மழைமுல் சிதறி ஓடவே
அடையவர் கெடிகள்கோடி இடுபடு படலதூளி
அலரியின் உடலில் மூழ்கவே
நடமிடு கடினவாசி மிசைவரு சமரசூர
நரர்புலி அலியை ஓதுவாம்.

எனப்பாடுகிறார். அலியார் மனிதர்களில் புலி போன்றவர்

மரில் சூரர்; துடிப்பு மிகுந்த குதிரை மீது அவர் வரும் போது பூமி கிடுகிடென நடுங்கும்; அவரை எதிர்த்தோர் இடியேறுண்ட நாகம்போல நெறுநெறெனச் சாய்வர்; கடல் சேறாக மாறும்; இமயம் அசையும்; வானம் உடைபடும்; மழை முகில்கள் சிதறியோடும்; பகைவரின் நகரங்கள் இடிபட்டுத் தூளான தூசிகள் சூரியனின் உடலிற் சென்று படியும் அத்தகைய வீரமும் வலிமையும் மிக்கவர் அலியார்! அவர் 'துல்துல்' என்னும் குதிரை மீது அமர்ந்து செலவார் 'துல்ஃபிகார்' என்னும் இரு முனைகளுள்ள வாளை ஏந்தி அவர் களம் புகுந்தால் எதிரிகள் நடுங்குவர். அகழ்போரில் ஆயிரம் வீரர்களுக்கு நிகரானவன் எனக் கருதப்பட்ட அமர் என்பவனை எதிர்க்க எவரும் முன் வராத போது அலியார் மட்டும் 'துல்ஃபிகார்' (அலியைத் தவிர வீரரும் இல்லை; துல்ஃபிகாரைத் தவிர வாளுமில்லை எனப் பாராட்டினார் அலியாரைப் பாடியுள்ள இசுலாமியப் புலவர்கள் அனைவரும் அவர் நடமிடும் குதிரை மீது வாளேந்தி வருவதையே சிறப்புறப் பாடியுள்ளனர். திருமணி மாலையில் சேகனாப் புலவர்,

திசைபல அதிர்தர மலைநிலை பெயர்தர
செறிஅலை சுவறிடவே
விசைதரும் அனிலமும் எரிகதிர் தழல்புவி
விரைஇடி அவை அலற

வசையுறும் அடையவர் பதிகுலை குலைவுற
வருநெறி துரகதம்மேல்
இசைதர நடமிடும் அலிபுலி அவர்துணை
இருபதம் அதுகதியே!

எனக் குறிப்பிடுவார்.

அலியார் பாராட்டின் பின், அவருடைய புதல்வர்களும் நபிகள் நாயகத்தின் திருப் பெயர்களுமான ஹஸன், ஹுசைன இருவரும் வாழ்த்தப் பெறுவர். இவர்களையடுத்து பெருமானார் வாழ்ந்த காலத்தில் அவருடைய கருத்துக்களை ஏன், எதற்கு என்று கேளாமலேயே முற்றிலுமாக ஏற்றுக் கொண்ட 'அஷ்ரத்துல் முபஸ்ரா'க்கள் வாழ்த்தப்படுவர். இவர்களையடுத்து முறையே இமாம்கள் நால்வர் (அபூபக்கர், ஹனிபா, மாலிக், ஹன்பல்) முகிய்யதீன் ஆண்டகை, நூல எழுத உதவியோர் வாழ்த்தப் பெறுவர். கடவுள் வாழ்த்தின் இறுதியில் அவையடக்கம் இடம்பெறுகிறது. உமறுப் புலவர்,

படித்த லத்தெழு கடல்குல கிரிநிலை பதற
எடுத்து வீசிய சண்டமா ருதத்தினுக்கு எதிரே
மிடித்து நொந்தசிற்றெறும்புஒரு மூச்சு விட்டதுபோல்
வடிதத செந்தமிழ்ப் புலவர்முன்யான் சொலுமமாறே
இடிஇடிததிடும் ஆரவாரத் தினுக்கு எதிர்ஓர்
நொடிநொடிப்பது போலும்ஒத் திருந்த தென் நூலே

என அவையடக்கம் கூறுகிறார். வலவர் நாயகமோ திரு மணிமாலையில்)

ஏண்டிசை கதிரின் முன்னர் இல்லிசைச் சுடரே போன்றும்
வண்டிசை மரையின் முன்னர் மலிர்தரும் கொட்டி போன்றும்
மண்டிசை யாழின் முன்னர் வன்பறை போன்றும் வல்லோர்
கண்டிசை நூல்முன் யானும் கருத்தொடும் இசைத்தலன்றே

என்பார்.

இன்றைய கவிஞர் முகம்மது மைதீன் தம் நாயகப் பேரொளியில்,

> வில்லை அறியாதான் வேட்டைக்குச் சென்றாற்போல்
> சொல்லை அறியாதான் சோடித்த கவிதையிது

என அவையடக்கம் கூறுவார்.

இஸ்லாமியப் புலவர்கள் பெருங்காப்பியங்கள் மட்டுமின்றி இடைக்கால இலக்கியப் போக்கான சிற்றிலக்கிய வகை அனைத்தையுமே பாடியுள்ளனர். இஸ்லாமிய அந்தாதி, பிள்ளைத்தமிழ், மாலை, கோவை, சதகம், அம்மானை, குறம், கோவை, பள்ளு, நூல்கள் ஏராளம் உள்ளன.

இசைப் பாடல்களான திருப்புகழ், சிந்து, கும்மி, தாலாட்டு ஆகியவற்றிலும் தனிக்கவனம் செலுத்தியுள்ளனர்.

அருணகிரியார் திருப்புகழையொட்டி காசிம் புலவர் தம் திருப்புகழைப் பாடியுள்ளார். புலவர் திருப்புகழ் புனைவதில் ஈடுபட்டிருந்தபோது தோட்டத்தில் அணில் ஒன்று துள்ளி விளையாட அது கண்ட அவர் மனைவியார் அவ்வணிலின் துள்ளலுக்கேற்பப் பாடமுடியுமா என்று கேட்டாராம். உடனே கவிஞர்.

> தத்தத்தத் தத்தத் தத்தத்—தனதான

எனும் சந்தத்தில்

> கொத்துக்கட் பச்சைப் பிச்சித்
> தட்பப்புட் பத்திற் றத்தக்
> குப்பிப்பொற் குச்சுக் கற்றை-குழல்தாழி

எனப் பாடினர் என்பர். பல்வேறு சந்தங்களில் அல்லாஹ்வினுடைய, நபிகள் நாயகத்தினுடைய அருளை வேண்டிப் பாடுவது அற்புதமானது.

நினது வழியே நடக்க நினது பெயரே வழுத்த
நினது புகழே படிக்க—மறையோதி
நினது ஜெபமே ஜெபிக்க நினதடிமையாகி நிற்க
நினது பதமே துதிக்க—அதனாலே
எனது பவமே துடைக்க எனது மனமே கெடுக்க
எனது பகையே துடைக்க—ஒழியாத
எனது கலியே கெடுக்க எனது துயரே தணிக்க
எனது வசமே கடைக்கண்—அருள்வாயே!

இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் முற்றிலுமே மார்க்க நெறிகளை எடுத்துரைப்பனவாயிருப்பதால் அவற்றில் அரபி பார்சிச் சொற்களும், இஸ்லாமிய மார்க்கக் கருத்துகளும் விரவி வருகின்றன. இஸ்லாமியர் அல்லாத தமிழரிடத்தில் இவ்விலக்கியங்கள் அதிகம் பயிலாமைக்கு இது முக்கிய காரணமாகும். தக்கடி ஷெய்கு பஷீர் லெப்பை கலீமா அவர்கள் திருததூதராம் நபிகள்மீது மெய்ஞ்ஞானச் சதகம் பாடியுள்ளார் அதில் ஒரு பாடல்,

ஆதிநபிக்கும்* ஆதிமுதல்
ஆன முர்ஸ லீன்களுக்கும்
சோதிநபி மாரனை வருக்கும்
தோன்றலாகப் பிறந்தோரை
சாதிஹாஷிம் குலக்கொழுந்தைத்
தக்கோன் கஃபத்துல்லா வாழ்
ஹாதிமுஹம்ம திரசூலைக்
காணும் திருநாள் எந்நாளோ?

* ஆதி நபி ஆதம், முர்ஸலீன்-1,24,000 நபிகளில் 313 பேர்
சோதி நபிமார்—1,24,000 நபிகள்.

அறபு மொழிப் பயிற்சியும் இசுலாமிய நெறியறிவும் இல்லாதோர் இப்பாடலைப் புரிந்து கொள்ள முடியாது

தமிழில் சித்தர் பாடல்கள் இருப்பன போன்றே இசுலாத்திலும் ஞானப் பாடல்கள் உள்ளன. இசுலாமிய மெய்ஞ்ஞானிகள் சூஃபிகள் எனப்பட்டனர் திரு. மணவை முஸ்தபா அவர்கள் நடத்திய சூஃபி இலக்கியக் கருத்தரங்கில் ஏறத்தாழ 65 சூஃபிகள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டனர். அவர்கள் தமிழிலக்கியம், கலை, பண் பாட்டுக்குச் செய்திருக்கும் தொண்டுகளைத் தமிழுலகம் நன்றியோடு போற்றக கடமைப்பட்டுள்ளது அனை வருடைய கருத்துக்களையும் இங்கே சொல்லக் காலம் இடந்தராதாதலின் ஒரு சிலருடைய பாடல்களை மட்டும் இங்கே காண்போம்! இசுலாமிய ஞான உலகின் பெரும் பாவலராகக் கருதப்படுபவர் தக்கலை பீர்முகம்மது சாகிபு ஆவார்கள். ஞானப் புகழ்ச்சி, ஞான மணி மாலை, ஞானப்பால், ஞானப்பூட்டு போன்ற பல அறிய நூல்கள எழுதியுள்ளார். ஞானப்புகழ்ச்சியில் அவர்,

தந்தையிலி தாரமிலி தானவனு நீயே
தன்மை கொடெவர்க்கு மொருதா பரமு நீயே!
மைந்திரிலி அன்னையிலி மன்னவனு நீயே!
மண்ணிலடி யார்க்கிரணம் வழங்குவது நீயே!
சிந்தைதனில் இடறுதனைத் தீர்த்தருள்வை நீயே!
தேட்டமறிந் தெனக்குதவி செய் பவனு நீயே!
அந்தமிலி நீயெனக்கோர் இழிவுவா ராமல்!
ஆதியே யானுன் அடைக்கலம் தானானேன்!

என இறைவனருளை வேண்டுகிறார்.

இவரே, சரியான குருவில்லாது அடைகின்ற ஞானம் முழுமை பெற்றதாகாது எனவும் கூறுகிறார்.

வழியான குருவில்லா வணக்கம் உள தெல்லாம்
புருடனில்லாள் வாழ்ந்த சுகமொக்கும்;

சரியான குருவில்லா வணக்கம் உளதெல்லாம்
காவலில்லாக் கோழிமுட்டை இட்டதுபோல் உவமை!

சிறந்த மெய்ஞ்ஞானியருள் குணங்குடி மஸ்தான் சிறப்பிடம் பெற்றவர். சமயக் கருத்துக்களை எளிமையாக எடுத்துரைப்பதில் வல்லவர். ஓரிடத்தில் சிறப்புப் பெறும் பொருள் பிறிதோரிடத்தில் அச்சிறப்பினைப் பெறுவதில்லை. நான் சிறப்புற்று இருப்பேனோ அல்லது சிறப்பின்றித் தாழ்வேனோ என்பதைக் கூறவரும் சாகிபு,

கொலுமன்னரசர்கைக் கோலாவனோ பாவி
குருடர்கைக் கோலாவனோ

என்று குறிப்பிடுகிறார். உலகு பாசமாகிய குருடன் கைக் கோலாய் இராமல் அரசன் கைக்கோலாக இருக்க வேண்டுமென்ற அடியவரின் ஆர்வம் இங்குப் புலனாகிறது. இதே கருத்தை விளக்க,

ஆலா விருஷமென மேலாவனோ உதிர்
அதன் சருகு போலாவனோ ...!

என்று கேட்பதும் பொருள் பொதிந்த வினாவாகிறது. ஒன்றோடு நெருக்கமாய் இருந்தும் அதன் இயல்பு உணரார்க்குப் பூஞ்சோலை ஓணானையும் தாமரைக் குளத்துத் தவளையையும் உவமையாக்குவார். ஓணான் காலம் முழுதும் பூஞ்சோலையிலேயே வாழ்ந்தாலும் பூவின் மணத்தை உணர்ந்து நுகர்வதில்லை. அதே போன்றுதான் பொற்றாமரைக் குளத்திலேயே பொழுதெல்லாம் அலைந்து திரிந்தாலும் தவளை தாமரையின் தேனைச் சுவைத்தறிவதில்லை. உயிர் இறைவனுடனேயே சேர்ந்திருந்தும் அதன தன்மையை உணர்ந்து துயக்காதிருக்கிறதே என்னும் ஏக்கத்தால்,

பூஞ்சோலை வாழும் ஓணான் எனவும் வீணில்நான்
போகாமல் அருள்புரியவும்

பொற்றா மரைக்குளத் தவளை யாகா துனைப்
புணருதற் கருள் புரியவும்

இறைவனிடம் அருள்வரம் வேண்டுகிறார். கடவுளின் மேன்மையை அறியாத பாவிகளாக மக்கள் இருப்பதை,

அரிசி விலை உலை அறியுமோ?

எனும் வினாவின்மூலம் வெளிப்படுத்துகின்றார்! தவ வேடம் பூண்ட பலர் பொய்யொழுக்கில் வாழ்வதையும் கஞ்சா, அபினி, கள் முதலியன உண்டு காலம் களிப்பதையும் காணுகின்ற மஸ்தான் சாகிப்.

கற்பங்கள் உண்டோம் நாமென்றே—வெளி
கஞ்சாவும் அபினியும் தின்றே
துப்புக்கெட் டலையாமல் நின்றே—அருள்
தூயமெய்ஞ் ஞானச் சுடரினைப் போற்றி

வாழ வேண்டுமென வலியுறுத்துகிறார்.

மஸ்தான் சாகிபு தாயுமானவரிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். அவருடைய நடையையும் கருத்தையும் பெரிதும் பின்பற்றியுள்ளார். சில அடிகளைத தனித்துக் கொடுத்தால் இதைத் தாயுமானவர் பாடலா அல்லது மஸ்தான் சாகிபு பாடலா என்று பிரித்துச் சொல்ல முடியாத அளவுக்கு அவை ஒன்றிணைந்து இருப்பதைக் காண முடியும்.

தாயு: ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
ஆலம்அமு தாகவிலையோ?

மஸ்: ஆழாழி தானும் அணைகடவாது ஆனைதனிற்
தாழா திலையோஎன் றாயே நிராமயமே!

தாயு: சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனி
யாய்ச் சும்மா இருக்க அருளாய்!

மஸ்: சொல்லுமெய் ஞானச் சுகக்கடலை உண்டு யான்
சும்மா இருக்க அருள்வாய்

இவை போன்றே இன்னும் பல சான்றுகளைக் காட்டலாம். உறுதிப்பாடான செய்திகள் குறித்த மெய்ஞ்ஞானியர் சொற்கள் ஒன்றாகவே அமைந்திருக்கக் காணலாம். உலகம் நிலையாதது எனபதைத் திருவள்ளுவர்,

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு

என்றார். இதனையே தாயுமானவர்.

இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென்று
எண்ணவோ திடமில்லையே

என்றார். பத்திரகிரியாரோ,

இன்றுள்ளோர் நாளை இருப்பதுவும் பொய்யெனவே
மன்றுள்ளோர் சொலும் வகையறிவது எக்காலம்

என்பார். இவர்களின் வழிநின்று மஸ்தான் சாகிபும்,

இன்றுள்ளோர் நாளைக் கிருப்பதுபொய் என்பதை நான்
கண்டுகொண்டேன் ஐயா என் கண்ணே றகுமானே!

எனக் குறிப்பிடக் காண்கிறோம்! மனோன்மணிக் கண்ணியில் மஸ்தான் சாகிபு தன்னை மாப்பிள்ளையாகவும் இறைவனைக் காதலியாகவும் வைத்து,

என்னைவிட்டால் மாப்பிள்ளைமார் எத்தனையோ உன்றனுக்கே
உன்னைவிட்டால் பெண்எனக்கு உண்டோ மனோன்மணியே!

எனச் சொல்வது கருத்தாழமும் நயமும் நிறைந்த பகுதியாகும்,

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சொல்லப் படும் நிலைகள் இஸ்லாத்தில் ஷரீஅத்து, தரீக்கத்து, ஹகீகத்து, மஃரிபத்து எனப்படும். காயல் பட்டினம் நூஹ் லெப்பை ஆலிம் இந்நான்கையும் முறையே விதை, மரம், பூ, கனி என்பார்.

நல்ல ஷரீஅத்து வித்தாச்சு
தலமாம் தரீக்கத்து மரமாச்சு
எல்லை ஹகீகத்து பூவாச்சுது
இலங்கும் கனியாச்சு மஃரிபத்து!

கல்லிடைக்குறிச்சி ஹாஜறுல் அமீது ஷரீஅத் பால் தரீக்கத் தயிர்; ஹகீகத் வெண்ணெய்; மஃபரித் நெய் என் கிறார்.

காயல் நகர் ஷிஹாபுத்தீன் (வலி) அவர்கள், மார்க்கத் திற்குப் புறம்பான செயல்களை வன்மையாகக் கண்டிக் கிறார்.

ஹக்கன் வேதத்தைப் படித்திருந்தும் கொடிய
துரோகங்கள் செய்யலாமோ?
மிக்க குப்பாயம் போட்டிருந்தால் விரும்பிசெய்பாவம்
குறைந்திடுமோ?

எனக் கேட்கிறார். தஞ்சை அய்யம்பேட்டை ஷைகு அப்துல் கனி சாகிபு,

ஆங்காலக் கள்வரெனும் ஐவர்தமை மெய்வாளால்
சாங்காட்டில் வெட்டிச் சயிப்பதினி எக்காலம்

என ஏங்குகிறார்.

இந்த மதத்தில் பெண் சித்தர்கள் இருந்ததாகத் தெரிய வில்லை. இஸ்லாத்தில் பெண் சூஃபிகளும் இடம் பெறுகின் றனர். தென்காசி இறசூல் பீவி அவர்கள்,

பாரதனில் பர்த்தாவுடன் பதிவிரதையானால்
பாவையரே பாலமது கடந்திருப்பீர்—நாளை
கூருலீன்கள் தோழியாகக் குலாவிடுவார் அங்கே
கோதையரே! குணக்கேடு கொள்ளாதீரிஃதறிந்தே!

எனப் பெண்கள் கணவனுக்கு உண்மையாக நடக்க வேண்டுமென்பதை உணர்த்துகிறார் இளையான்குடியில் தோன்றிய கச்சிப் பிள்ளையம்மாள்.

ஆதி முதலோன் தனைநினைத்து—நிதம்
ஐந்தொகுத்தும் தொழுதே புகழ்ந்து
ஓதி முகம்மது பாதம் அனுதினம்
உகந்து கும்மி அடியுங்கடி—மிக
மகிழ்ந்து கும்மி அடியுங்கடி

என ஞானக் கும்மி அடிக்கிறார். செய்யிது ஆசியா உம்மாள் என்னும் ஞானப் பெண்மணி மெய்ஞ்ஞானத் தீப ரத்தினம். மாலிகா இரத்தினம் என்னும் ஞான ஒளி விளக்குகளை ஏற்றியுள்ளார்.

இஸ்லாமியப் புலவர்கள் தமிழுக்கு மசலா, படைப் போர், நாமா, முனாஜாத், கிஸ்ஸா முதலிய புதிய இலக்கிய வகைகளையும் படைத்துத் தந்துள்ளனர். வினாக்களும் விடைகளுமாகவே அமைந்துள்ள இலக்கியம் எனப் படும் ஆயிரம் மசலா, நூறு மசலா, வெள்ளாட்டி மசலா எனும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் உள்ளன. அப்துல்லா இப்னு சலாம் என்பவர் கைபாறில் வாழ்ந்தவர். யூதர் வழி வந்தவர். சபூர், தவுராத், இன்ஜீல் ஆகிய மூன்று வேதங்களையும் நன்கறிந்தவர். நபிகள் நாயகத்தைக் கண்டு 'ஆயிரம் வினாக்கள் கேட்பேன்; அதற்கு நீர் விடையளித்தால் நானும் என் நகரில் உள்ளாரும் இஸ்லாத்தை ஏற்போம்! எனச் சொல்லி ஆயிரங் கேள்விகள் கேட்கப் பெருமானாரும் உரிய மறுமொழியளித்தார். அப்துல்லாஹ்வும் அவரது இனத்தாரும் இஸ்லாத்தில் சேர்ந்தனர். அப்துல்லாஹ் வினவிய வினாக்களும், பெரு

மானார் தந்த மறுமொழியும் கொண்ட காப்பியம் ஆயிரம் மசலா என்பதாம்! அப்துல்லாஹ் கூறுவார்.

துங்கமாமச லாவினும் குத்தரம்
சொல்லின் ஆதிதன் தூதராகுவீர்!
திங்கள்வீசுல கத்தினில் உம்முடை
தீனிலாதொரு தீனிலை ஆகையால்
எங்கள் மாநகர் உள்ளவர் யாவரும்
யானும் என்னோடிணங்கிய பேர்களும்
பொங்குநற்கலி மாவுரைத் திந்நெறி
பூண்டு தீனிடை புக்குவது உண்மையே!

இது கேட்ட நபிகள் நாயகம்,

இப்படி உரைக்கக் கேட்டங்கு
மெய்இறசூல்தாம் சொல்வார்
மெய்ப்புடன் உமக்கு மிக்காய்
வேண்டுவ தெல்லாம் கேளும்!
செப்பிடு வித்தை அல்ல
திண்ணமாய் உம்மை நாயன்
ஒப்புடன் எம்மைக் கொண்டே
உத்தரம் சொல்லு விப்பான்!

என்றார். வினாக்கள் தொடர்ந்தன. மாதிரிக்குச் சில:

மானாக மேவந்த மக்கா வில்வாழ்
தேனாவி லேவந்த செப்போ சையாய்
மீனாக மேகொண்ட மெய்த்தூ தரே
தீனாவ தேதென்று செப்பீர்மனே!-என்பது வினா.

வீறான சூதர்க்கு மேலானவா
தேறாகு பாகொத்த தீனாவதே
சறான கலீமா ஷஹாதத்துடன்
ஈறாத சீபத்தில் ஈமானுமாம்

என்பது பெருமானாரின் விடை!

பிதாவினும் பிள்ளை மூர்க்கம்
பெற்றுறு தந்தை தன்னைச்
சதாளூறும் கோல தாகச்
சதிசெயும அதுஏ தென்றார்

இது வினா. இதற்குப் பெருமானார் மறுமொழி:

இரும்பு பிறக்கும் கல்லிடத்தில்.
ஈடுபடுத்தும் இரும்பு கல்லைப்
பொருத்த உருக்கை இரும்புபெறும்
பூண்ட இரும்பை உருக்கறுக்கும்
திருந்த நெருப்பை உருக்கீனும்
செய்ய உருக்கைத் தீவாட்டும்
வருந்தும் பிதாவின் பிள்ளைமிடுக்
காகும் மசலா இது என்றார்

இன்னொரு கேள்வியும் மறுமொழியும்:

மண் தரைக்குள் ஏறாது வானிலிருந் தோடாதங்கு
அந்தரத்தில் ஓராறுண் டதுஎமக்குக் கூறுமென
கந்தரத்தோள் இபுனுசலாம் சுருதிவழி யேகேட்க
விந்தமலர்ப் புயத்திறசூல் மெய்யினில் வெப்
பென்றனரே

முனாஜாத் என்பதன் பொருள் இரகசியமாக உரையாடுதல்! என்பதாம். இறைவன் மீது புகழ்ப்பாக்கள் பாடி இறைஞ்சுவதையும் இது குறிக்கும், கீழக்கரை செய்யிது முகம்மது ஆலிப் புலவர் பாடிய பன்னிரு முனாஜாத்துகள் முனாஜாத்து மாலிகை என விளங்குகிறது. முகம்மதுவின் பொறுமையை அவர்,

சொன்மனக் குயிரர்கூடிக் கொடுமிடா விளைத்தகாலும்
புன்மனத் திவரையாமும் பொடிபடுத்திட உத்தாரம்

சொன்மினென் றமரர்வேண்டும் தொடர் மொழி
மறுத்துப்பேசும்
முன்முறை புகழவந்த முகம்மது நபியுல்லாவே!

எனப் பாடியுள்ளார். நாமா, பார்சியில் உள்ள நூல்களில் ஒருவகையாகும். அலிநாமா, இபுலீசு நாமா, மிகுராஜ் நாமா எனப் பல நாமாக்கள் தமிழில் உள்ளன கதை என்னும் பொருளைக் கொண்டது. கிஸ்ஸா, இவ்வகைப் பிரபந்தம் இஸ்லாமிய சமயக் கதைகளைக் கூறுகிறது. மதாறு சாகிப் புலவர் பாடிய யூசுப் நபி கிஸ்ஸா, அப்துல் காதிறு சாகிபு பாடிய சைததூன் கிஸ்ஸா என்பன குறிப் பிடத்தக்கன.

போர் நிகழ்ச்சிகளைப் பற்றி முசுலிம்கள் பாடிய நூலுக்குப் படைப்போர் என்று பெயர். இதனை ஆங்கிலத் தில் (War ballads) என்பதற்கு ஒப்பாகக் கூறுவர். காசீம் படைப்போர், ஹுசைன் படைப்போர் எனப் பல படைப் போர் இலக்கியங்கள் தமிழில் உள்ளன. குஞ்சு மூசு லெப்பை ஹாஜி ஆலிம் புலவர் பாடியுள்ள இறவுசுல்கூல் படைப்போர், நாட்டுப் படலம் நகரப் படலம் கொண்டு விளங்குகிறது. மதீன நகர்ப் படலத்தில் குர்ஆனை விளக் காகவும், கலிமாவை நெய்யாகவும் தீன் நெறியைத் திரி யாகவும் அமைத்து அவர் பாடியுள்ளது வருமாறு:

வெற்றியிற சூல்மறை விளக்கினை நிறுத்தி
உற்றகலி மாநெயை உவப்பொடு நிரப்பிக்
குற்றமறு தீன்திரி குயிற்றிஇஸ் லாம் தீப்
பற்றுவர்கள் எங்கும்உயர் பாவைஇள மின்னார்!

சையிதத்து படைப்போரில் குஞ்சு மூசுப் புலவர் அபூ பக்கரின் குதிரை சென்றதை,

காலில்ஐங் கதியைக் காட்டி
கருத்தினுள் திடத்தைக் காட்டி

மேலினில் வியர்ப்புக் காட்டி
விழியினில் எரியைக் காட்டி
தாதுவின் தலையைக் காட்டி
தரைவிடும் துகளைக் காட்டி
வாலினில் விசையைக் காட்டி
வயப்பரி நடந்த தம்மா!

எனப் பாடுவார்.

செய்குத் தம்பிப் பாவலர் அவர்கள் புலமைத் திறத்தோடு 'சதாவதானம்' செய்யும் ஆற்றலையும் பெற்றிருந்தார். அவதான நிகழ்ச்சியின்போது 'விராடனையேபெண்ணெனலாமே' என்பதை ஈற்றடியாகக் கொண்டு ஒரு வெண்பாப் புனையுறுமாறு கூறினார்கள். அவர் உடனே,

உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதுமொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னாய்—மண்ணில்
வராடவனையே தெய்வம்மன் னெனும் சொற்ற
விராடனையே பெண்ணென லாமே.

எனப் பாடினார்கள். ஒருநாள் இல்லத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தார். வந்த ஒரு நண்பர் அவ்வழியே சென்ற யானையையும் அவர் பேனாவையும் இணைத்துப் பாடும்படி கேட்டார். அவரும் சிலேடையாக,

அங்கை உடமையால் ஆகம் கருமையினால்
வெங்கண் மிகவரையை மேவுதலால் அங்கனிவாய்
தேனாணும் சொல்லுடையான் செய்கு தம்பிப்
பாவலன்கை
பேனாவும் யானையெனப் பேசு

எனப் பாடினாராம். இவர் பல சாற்றுக் கவிகளும் எழுதியுள்ளார் சீட்டுக் கவிகளும் எழுதியுள்ளார் . தாம் புதுமனை புகுந்தபோது தம் இல்லத்திற்கு அம்மி, குழவி வாங்கியனுப்பத் தம் நண்பர் சிவதாணுப் பிள்ளைக்கு எழுதுகிறார்:

ஆயுமகத் தாரகத்துள் அனுதினமும்
அகலாமல் அன்போ டச்சம்
தோயுமகத் தாய்எந்தன் நூரயகுணச்
சிவதாணுத் தோன் றால் யான் இன்று
ஏயும்அகத்து என்றென்றும் இருந்துபணி
இருந்துசெய இருங்கல் லாலோர்
தாயும்மகவும் தருவாய் தகுவிலையே
தருவலிசை தழைக்குந் தானே!

நபிகள் நாயகத்தின்மீது இவர்கள் பாடியுள்ள 'நாயக மான்மிய மஞ்சரி' உணர்ந்துணர்ந்து படிக்கத் தக்கதாம்! அதில் ஒரு பாடல்:

கல்லால் எறிந்திருகால் காயமுறக் கண்ட கொடும்
பொல்லாப் புலையருக்கும் புத்திவரக் கையேந்தி
அல்லாத் திருச்சமூகத் தானதுஆ கேட்டு வந்த
நல்லார் உமைப்போலும் நானிலத்தில் உண்டேயோ!
நாதநபி நாயகமே நானிலத்தில் உண்டேயோ?

## புதுக் கவிதைகள்

அப்துல் ரகுமான், மு. மேத்தா, இன்குலாப், நாஞ்சில் ஆரிது போன்றோர் புதுக்கவிதையுலகில் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

## இன்குலாப்

உறைந்து கிடந்த மக்கள் சக்தியோ
கோடி கோடி மின்னல் கொடிகளாய்
அண்டம் குலுங்க ஆகாயம் நடுங்க
எழுந்து நின்றது; எழுந்த சக்தியால்
சீனம் மட்டுமா சிவந்தது; இல்லை
பூமியின் இருண்ட கரைகள் எல்லாம்
பொங்கிப் புரட்சியில் சிவப்பாகின்றன.

**ரகுமான்**

*பிள்ளைகள் வேண்டுமென்று பெண்கள்*
*அரசு சுற்றியது அக்காலம்!*
*பிள்ளைகள் வேண்டாமென்று*
*அவர்களை அரசு சுற்றுவது*
*இக்காலம்!*

*உங்களை*
*முதலில் என் மார்பில் தவழவிட்டு*
*இறுதியில் வயிற்றில் ஏந்தும் நான்*
*உங்கள் தாயின் எதிர்ப்பதம்!*

**மேத்தா**

*இலக்கணச் செங்கோல்*
*யாப்புச் சிம்மாசனம்*
*எதுகைப் பல்லாக்கு*
*மோனைத் தேர்கள்*
*தனிமொழி சேனை*
*பண்டித பவனி*
*இவை எதுவும் இல்லாத*
*கருத்துகள் தம்மைத் தாமே*
*ஆளக் கற்றுக் கொண்ட*
*புதிய மக்களாட்சி முறையே*
*புதுக்கவிதை!............*

*இந்த*
*பூமி உருண்டையைப்*
*புரட்டி விடக் கூடிய*
*நெம்புகோல் கவிதையை*
*உங்களில்*
*யார் பாடப் போகிறீர்கள்?*

# சமண
# பௌத்த
# கிறிஸ்தவ
# இஸ்லாமிய
# இலக்கியங்கள்

தொகுப்பாசிரியர் :
*மணவை முஸ்தபா*

காலத்தால் அழிக்க முடியாத சமண, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்களின் செழிப்பை, தமிழ் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்த அம்சங்களை, மாற்றுச் சமயங்களைச் சார்ந்த நான்கு புலமையாளர்கள் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் சுவையாக ஆராயும் புதுமை நூல்.

வெளியீடு :
மீரா பப்ளிகேஷன்,
AE-103, அண்ணா நகர்,
சென்னை-600 040.